விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
Valampurii
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 20 வியாழக்கிழமை (06.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 322

### ஜனாதிபதித் தேர்தல்

## ரணில் போட்டியிட எதிர்ப்பு விலகிக் கொண்டதாகத் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று அரசியல கட்சிகள் பலவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

மத்திய மாகாணசபையின் உறுப்பினர் அசாத் சாலி இதனை நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க போட்டியிடாமல் பொதுவேட்பாளருக்கு ஆதரவு தரவேண்டும் என்று அந்தக்கட்சிகள் கோரியிருப்பதாக அசாத் சாலி குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான கடிதம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் இதற்கு சாதகமான பதிலை வழங்கும் என்று எதிர்ப்பார்ப்பதாக அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் முடிவில் இருந்து 20 ஆம் பக்கம் பார்க்க....

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமா?



### விளக்கம் கேட்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கை அரசியல் யாப்பின் 18-வது சட்ட திருத்தத்திற்கு அமைய மூன்றாவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவது சம்பந்தமாக சட்ட விளக்கம் ஒன்றை வழங்குமாறு இலங்கையின் உச்ச நீதிமன்றத்திடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார். அரசியல் யாப்பின் 129 (1) பிரிவின் கீழ் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

20 ஆம் பக்கம் பார்க்க....

# தடம்புரண்டது கார் இரு பெண்கள் பலி !

### பனிக்கன்குளம் பகுதியில் சம்பவம்

(பனிக்கன்குளம்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் வீதியை விட்டு விலகி தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இரு பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழுந்ததுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 4.45 மணியளவில் முல்லைத்தீவு ஏ9 வீதி பனிக்கன்குளம் 228 மீற்றர் பகுதியில் இடம்பெற்றது.

ஏ9 வீதி ஊடாக கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த காரே விபத்துக்குள்ளானது.

வீதியை விட்டு விலகிய கார் கட்டுப்பாட்டை இழந்து சுமார் 75 மீற்றர் வரை தடம் 20 ஆம் பக்கம் பார்க்க....



## பாதுகாப்பு அமைச்சுக்கு நிதி நாடாளுமன்றில் அங்கீகாரம்

(கொழும்பு)

2015-ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு மறறும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு நாடாளுமன்றம் அங்க்காரம் அளித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தை அடுத்து, நடத்தப்பட்ட வாக்கெடுபபில்பாதுகாப்பு மற்றும்நகர அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக 115 வாக்குகளும், எதிராக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இந்த நிதி ஒதுக்கீட்டுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களும், முன்னிலை சோசலிசக் கட்சியின் உறுப்பினர் அஜித் குமாரவும் மட்டுமே எதிராக வாக்களித்தனர்.



நாடாளுமன்றத்தில் இந்த வாக்கெடுப்பு இடம்பெற்ற போது ஐக்கிய தேசியக் கட்சி, 20 ஆம் பக்கம் பார்க்க....

## அதிர்ச்சியளிக்கிறது ஐ.நா. அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அறிவிப்பு அதிர்ச்சியளிப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நடத்தி வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் விசாரணைக் குழுவினர் அண்மையில் வெளியிட்ட கருத்து தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீஎல் 19 ஆம் பக்கம் பார்க்க....

# மாகாண சபை நிதி ஒதுக்கீட்டில் 75 வீதம் இவ்வருடம் செலவு

### மிகுதி மத்திய அரசினால்தான் முடியுமாம் !

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைக்கு என அரசினால் ஒதுக்கப்பட்ட நிதியில் மாகாண சபையால் கையாளக் கூடிய முக்கால் வாசிப் பங்குக்கும் அதிகமான நிதி இவ்வருடத்துக்குள் செலவிடப்படும் என்றும்,

வட மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியினை செலவிட முடியாத நிலையில் சபையினர் காணப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு பொயயானது எனவும் வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வட மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட 19 ஆயிரத்து 481 மில்லியன் மில்லியன் ரூபாயில் 15 ஆயிரத்து 526 மில்லியன் ரூபாயே மாகாண சபையின் கையாளுகைக்குட்பட்டது எனவும் மிகுதி 3 ஆயிரத்து 955 மில்லியன் ரூபாய் மத்திய அரசின் கையாளுகைக்குட்பட்டது.

ஆகையால் மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியானது முழுவதும் செலவளிக்கப்பட 20 ஆம் பக்கம் பார்க்க....

## மொத்தச் செலவில் திருத்தம்!

(கொழும்பு)

நிதியமைச்சரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2015-ம் ஆண்டுககாக சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டத்தில் செலவு தொகையில் திருததம செய்யப்பட்டு அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டத்தில் 20 ஆம் பக்கம் பார்க்க....

## பொன்சேகா வெளிநாடு நீதிமன்றம் அனுமதியளிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவ தளபதியும ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா, வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த தடை, தற்காலிகமாகத் தளர்த்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, நீதிமன்ற கட்டுப்பாட்டில் இருந்த 20 ஆம் பக்கம் பார்க்க....



# இறுதி நாள் சாட்சியம் 49 பேருக்கு அழைப்பு

(கொழும்பு)

காணாமல் போனவர்களை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் முல்லை மாவட்டத்திற்கான இறுதிநாள் சாட்சியப் பதிவுகள ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

யுத்தத்தின் போதும் யுத்தம் முடிவின் பின்னரும் காணாமல் போன மற்றும் சரணடைந்து காணாமல் போனவர்கள் தொடர்பிலான சாட்சியப்பதிவுகளுக்காக ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 12 கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த 49 பேர் ஆணைக்குழுவினால் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை சாட்சியமளித்தவர்கள தங்களுடைய உறவுகள் காணாமல் போனதற்கு விடுதலைப் புலிகள் மற்றும் இராணுவத்தினரை குற்றம் சாட்டியிருந்தனர்.

அதன்படி பாடசாலைக்கு சென்ற வேளை திரும்பி 20 ஆம் பக்கம் பார்க்க....

## எதிர்வரும் 19 இல் தேர்தல் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை எதிர்வரும் 19 ஆம் திகதி அறிவிக்க அரசாங்கம் எண்ணியிருப்பதால், தேர்தலை அறிவிப்பது சட்ட ரீதியானதா என்பதை அறிய உயர்நீதி மன்றத்திடம் சட்ட விளக்கம் கோரியிருப்பதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபே வர்தன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியா 20 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஐ.தே.கவிலிருந்து விலகி அரசுடன் இணையும் மங்கள?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவின் பிரதானி மங்கள சமரவீர அக்கட்சியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக நம்பகமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவின் ஆதரவோடு பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக அவர் கடுமையாக போராடியிருந்தார். அதன் ஊடாகவே மகிந்த ராஜபக்ஷவின் அரசுக்கு முடிவு கட்ட முடியும் என்பது மங்களவின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்தது.

எனினும் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தானே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்து பொது வேட்பாளர் விவகாரத்துக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளார்.

எனினும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிட்டால் ஐ.தே.கவின் தோல்வி உறுதி என்பது மாத்திரமன்றி கட்சியின் தலைமைப் பதவியும் ரணிலிடமிருந்து பறிபோய் விடும் என்று மங்கள சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே அவ்வாறான ஒரு நிலை ஏற்படும் பட்சத்தில் கட்சித் தலைமைப்பொறுப்புக்கு சஜித் பிரேமதாச வரும் வாய்ப்பிருப்பதாக அவர் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் மங்கள சமரவீர தான் தொடர்ந்தும் ஐ.தே.கவில் இருப்பதில் அர்த்தமில்லை என்ற முடிவுக்கு வந்திருப்பதாக தெரிகின்றது. இதனையடுத்து அவர் கட்சியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளார்.

அதன் பின்னர் அவர் ஆளுங்கட்சியுடன் இணைவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மங்கள சமரவீரவை ஆளும் கட்சிக்கு இழுத்து வந்து முக்கிய அமைச்சுப் பதவியை வழங்கவும் ஆளுங்கட்சி தயாராக உள்ளது. எனினும் அவ்வாறு ஆளுங்கட்சியில் இணையும் பட்சத்திலும் அமைச்சுப் பதவிகளை பொறுப்பெடுப்பதில்லை என்று மங்கள சமரவீர முடிவெடுத்துள்ளார்.

அவ்வாறில்லாத பட்சத்தில் அரசியலுக்கு முழுக்குப் போட்டுவிடவும் அவர் முடிவெடுத்துள்ளார். (எ-11)

# பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகரிப்பு!

(கொழும்பு)

எதிர்க்கட்சியினர் இலங்கையை எதியோப்பியா, சோமாலியா போன்ற நாடுகளுடன் ஒப்பிட்டாலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகரித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர இதனை கூறியுள்ளார்.

எதிர்க்கட்சியினர் நாட்டை ஆபிரிக்காவில் உள்ள வறிய நாடுகளுடன் இலங்கையை ஒப்பிட்ட போதிலும் மகிந்த சிந்தனை கொள்கையில் உள்ள தூரநோக்கு பார்வை காரணமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 7.08 வீதமாக அதிகரித்துள்ளது.

2010 ஆம் ஆண்டு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கொழும்பு நகரில் 60 ஆயிரம் வீடுகளை இரண்டு கட்டங்களாக நிர்மாணித்துள்ளார்.

ஆனால், எதிர்க்கட்சியினர் கொழும்பு நகரில் சேரிப்புறங்களில் வாழும் மக்களுக்கு பொய்களை கூறி அவர்களை தவறாக வழிநடத்தினர்.

இதன்மூலம் எதிர்க்கட்சியினர் சந்தர்ப்பவாத அரசியலாபத்தை பெற முயற்சித்தனர் எனவும் துமிந்த சில்வா குறிப்பிட்டுள்ளார். (எ-11)


## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

05.11.2014 முதல் 10.11.2014 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுக்ளை மேற்கொள்ளவும்.

மீண்டும் யாழில்

பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்)
(பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-8959)



யா/ வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்

பரிசில் நாள் - 2014

காலம் : 07.11.2014 வெள்ளிக்கிழமை
நேரம் : மு.ப 10.00 மணி
இடம் : வித்தியாலய மண்டபம்

தலைவர்
திரு.J.A தவநாயகம்
(வித்தியாலய முதல்வர்)

பிரதம விருந்தினர்
திரு.பொ.அருணகிரிநாதன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்.கல்வி வலயம்)

சிறப்பு விருந்தினர்
திரு.ஞா.இரத்தினசிங்கம்
(முகாமையாளர் ஆசிரிய வள நிலையம், யாழ்.கல்வி வலயம்)

கௌரவ விருந்தினர்
திரு.சபா.குகதாசன் – JP
(ஓய்வுநிலை பிரதி அதிபர், யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம். இயக்குநர் – குகன் கல்வி நிலையம்)
திரு.க.சுந்தரவேல் – JP
(பழைய மாணவன், உப தவிசாளர் வலி கிழக்கு மத்தியஸ்தர் சபை)




அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்

(இ)



SPEED

PURIFIED DRINKING WATER

சுத்தமான குடி தண்ணீர்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall) விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.



ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392

(C-8284) (சி-8973)



2 மணித்தியாலத்தில்

கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்

0779086737 Computer Repair

GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி –சாவகச்சேரி

பரிசில் நாள் 2014



இடம்:–அருணாசலம் மண்டபம்
காலம்:–08.11.2014 சனிக்கிழமை
நேரம்:–காலை 9.00 மணி

**தலைவர்:** திரு. அ.கயிலாயபிள்ளை அவர்கள் (கல்லூரி முதல்வர்)

**பிரதம விருந்தினர்:** பேராசிரியர் சி.சிறீ சற்குணராசா அவர்கள் (பீடாதிபதி, விஞ்ஞான பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்:** திரு.சு.கிருஷ்ணகுமார் அவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி.

**பரிசில் வழங்குநர் :** திருமதி சிவராணி சிறீ சற்குணராசா அவர்கள் (தலைவர், மொழியியல், ஆங்கிலத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

2012 ஆம் ஆண்டில் க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றி 2013 இல் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் பரிசில் பெற தவறாது வருகை தரவும்.

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

–கல்லூரிச் சமூகம்.

(சி-8968)


## வரலாற்று ஆவண மலருக்கான தகவல் கோரல்

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தினால் வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட வரலாற்றை ஆவணப்படுத்தும் நோக்கத்தோடு கீழ்வரும் தலைப்புகளின் கீழ் கட்டுரைகள் தொகுக்கப்பட உள்ளன. எனவே இவை தொடர்பான ஆதார பூர்வமான தகவல்கள் இருப்பின் 14.11.2014ற்கு முன்னர் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி ஆவண மலர் சிறப்பாக வெளிவரத் தங்களது ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம்.

01. புவியியல் ரீதியான அமைவிடம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள்
02. நிர்வாகக் கட்டமைப்பு
    - அ) பிரதேச நிர்வாகக் கட்டமைப்பு
    - ஆ) உள்ளூராட்சி நிர்வாகக் கட்டமைப்பு
    - இ நீதித்துறைக் கட்டமைப்பு
03. கல்வித்துறையின் ஆரம்பமும் வளர்ச்சியும்
04. பிரதேச வாழ்வாதாரமும் தொழில் முறைகளும்
05. மதவழிபாட்டு முறைகள்
06. மருத்துவ வசதிகள் தொடர்பான தகவல்கள்
    - அ) சுதேச மருத்துவத்துறை
    - ஆ) ஆங்கில மருத்துவத்துறை
07. பிரதேச சமூக நிறுவனங்களின் ஆரம்பமும் வரலாறும்.
08. கலை கலாசாரப் பின்னணிகள்
09. கூட்டுறவுத்துறையின் ஆரம்பமும் வளர்ச்சியும்
10. தொல்லியல் கண்டுபிடிப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி: கலாசாரப்பிரிவு,
பிரதேச செயலகம்,
வடமராட்சி கிழக்கு.

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
வடமராட்சி கிழக்கு.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல:–0776164893

(சி-8972)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



Everest Academy

Grade 6 Admission -2015
(English Medium)

Trilingual Education
Optional Subjects

Classes Commences on:-10.12.2014
Teaching by qualified and Competent Teachers.
Registration on all days in the week between 04.00 pm and 6.00 pm

–Director
58, Vathiry, Karaveddy
(Rajan Bake house)

(C-8974)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும்

(கொழும்பு)

**இலங்கையில் தேர்தல் சட்டங்களில் உடனடியாக திருத்தங்கள் கொண்டுவரப்படும் என அறிவித்த அரசாங்கம் சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்து உறுப்பினர்களை நியமிக்க முடியும். ஆனால் உறுப்பினர்கள் சுயாதீனமாக இயங்க வேண்டியது அவர்களது கடப்பாடாகும் என்றும் அரசாங்கம் தெரிவித்தது.**

பாராளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வரவு - செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தின் முதல் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல் சட்டங்கள் மக்களுக்கு பயன்படுவதாக அமைய வேண்டும்.ஆனால் இன்று நாட்டின் தேர்தல் சட்டங்களில் பெரும் குறைபாடுகள் உள்ளதோடு அநீதிகளும் உள்ளன.

அதாவது தேர்தலில் போட்டியிடும் சாதாரண வேட்பாளர் ஒருவர் பிரசாரத்திற்காக சுவரொட்டி ஒட்டினர்.தேர்தல் சட்டங்களால் அந்த சுவரொட்டிகளை கிழித்தெறியப்படுகின்றன.

ஆனால் பணம் படைத்த வேட்பாளர்கள் இடைவிடாது இதனை தொலைக்காட்சிகளில் தேர்தல் விளம்பரங்களை ஒளிபரப்புகின்றனர்.இதனை தடுக்க தேர்தல் சட்டங்கள் இல்லை.

எனவே பணமுள்ளவருக்கு ஒருவித சலுகைகளும் பணமில்லாதவர்களின் சலுகைகள் பறிக்கப்படுகின்ற விதத்திலும் தேர்தல் சட்டங்கள் உள்ளன.

இதன் மூலம் அநீதிகள் இழைக்கப்படுகின்றன. இதுபோன்று பல்வேறு குறைபாடுகள் தேர்தல் சட்டங்களில் காணப்படுகின்றன.தேர்தல் சட்டங்கள் மக்களுக்கு பயன்படுவதாக இருக்க வேண்டும்.

எனவே உடனடியாக பாராளுமன்றக் குழுக்கூட்டத்தை கூட்டி தேர்தல் சட்டங்களில் திருத்தங்களை கொண்டுவர வேண்டும். இது காலத்தின் தேவையாகும்.

அரசாங்கம் இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தும்.எதிர்கட்சிகள் எப்போதும் சுயாதீனக் குழுக்கள் தொடர்பாகவே பேசுகின்றனர்.

அரசாங்கம் சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கின்றது. அதற்கான தலைவர்கள் உறுப்பினர்களை நியமிக்கின்றது.

அதனையும் எதிர்கட்சி குறைகூறுகின்றது. உறுப்பினர்கள் சுயாதீனமாக செயற்படுவதில்லை என்கிறார்கள்.சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை அரசால் நியமிக்க முடியும்.

அவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் சுயாதீனமாக இயங்க வேண்டியது அவர்களது கடப்பாடாகும். அதனை எம்மால் செய்ய முடியாது.

எதிர்கட்சித்தலைவர் தனது உரையில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக எதனையும் கூறவில்லை.அவரும் நிறைவேற்று அதிகாரத்தை விரும்புகிறார். ஜனாதிபதி தேர்தலையும் ஆதரிக்கின்றார் என்றே அர்த்தமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## இரண்டு நூல்கள் வெளியீட்டு விழா

தெல்லிப்பழை கலை இலக்கியக்களமும் ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கமும் பண்டித மாணவரும் இணைந்து நடத்தும் கடம் பேசுவரனின் இலக்கணமரபு, தமிழ் இலக்கியத் திறனாய்வும் கோட்பாடும் ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் இந்துக்கல்லூரியில் கலை இலக்கிய களத் தலைவர் இலக்கிய வித்தகர் திருமதி கோகிலாமகேந்திரன் தலைமையில் இடம் பெறவுள்ளது .

இந்நிகழ்வில் இலக்கண மரபு எனும் வரலாற்று ஆய்வு நூலின் வெளியீட்டுரையினை யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தனும் ஆய்வுரையினைகோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ம.பா.மகாலிங்கசிவமும் வழங்கவுள்ளதோடு தமிழ் இலக்கியத் திறனாய்வும் கோட்பாடும் எனும் நூலிற்குரிய வெளியீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக மொழிபெயர்ப்பு கற்கை இணைப்பாளரும் ஆங்கில மொழிகற்கை சிரேஷ்ட விரிவுரையாளருமான கந்தையா ஸ்ரீ கணேசனும் ஆய்வுரையினை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரனும் வழங்கவுள்ளனர். (இ-5)

## நினைவுக்கூட்டம்

பொதுவுடமை இயக்கத்தின் புரட்சித்தலைமைத் தோழர்களின் ஒருவரான சி.நவரத்தினத்தின் 10 ஆம் ஆண்டு நினைவுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு திருநெல்வேலி, ஆத்திசூடி பல்கலைக்கழக பெண்கள் விடுதி கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது கலைமகள் சனசமூக நிலையத்தின் செயலாளர் வி.மகாலிங்கம் தலைமை உரை நிகழ்த்தவுள்ளதுடன் நினைவுரைகளை சி.கா.செந்திவேல், சோ.தேவராசா, சி.தணிகாசலம், கலைமகள் சனசமூக நிலையத்தின் தலைவர் சி.நாகராசா, கா. செல்வம் கதிர்காமநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (இ-7)

## திருமூலநாயனார் குருபூசை நிகழ்வு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் புத்தூர் கிழக்கு கன்னியர் வைரவர் அறநெறிப்பாடசாலை என்பன இணைந்து நடத்தும் திருமூலநாயனார் குருபூசை இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு வலி.கிழக்கு இந்து சமய அபிவிருத்தி உத்தியோகத்தர் மா.தெய்வலட்சுமி தலைமையில் புத்தூர் கிழக்கு தல்லுடை கன்னியர் வைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கருணாகடாக்ஷிமனோன்மணி அம்பாள் ஆலயத்தின் தலைவர், சமூக ஜோதி ஸ்ரீலயன் கு.ஸ்ரீகந்தராசா கலந்து கொள்ளவுள்ளார்.

இதன் போது பல்வேறு நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (இ-7)

## அச்சத்துடன் பொலிஸார்

பிரதேச சபைகளின் தலைவர்களுக்கு கூட அஞ்ச வேண்டிய நிர்ப்பந்தம் இன்று பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளதாக ஜே.வி.பி கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் சக்திகள் இன்று பொலிஸாரை அடிமைப்படுத்தியுள்ளனர்.

சுயாதீனமான முறையில் சட்டத்தை அமுல்படுத்த பொலிஸாருக்கு முடியாத நிலைமை நாட்டில் காணப்படுகின்றது.

பொலிஸ் திணைக்களத்தின் கடைநிலை உத்தியோகத்தர்களுக்கு உரிய வசதிகள் வழங்கப்படுவதில்லை. அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்கள் போதுமானதல்ல.

பொலிஸ் உதவி உத்தியோகத்தர்களுக்கு எவ்வித சலுகைகளும் வழங்கப்படுவதில்லை.

இன்று நாட்டின் சட்டம் முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலைமையானது மிகவும் வருந்தத்தக்கது என அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். (இ-5)

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்.இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்று ஆரம்பமான அழகியற் கல்வியில் நமதடையாளம் கருத்தமர்வில் மாணவிகளின் நடன நிகழ்வையும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- உ.சாளின்)





## இராசி பலன்

6.11.2014
(ஐப்பசி 20, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
பூரணை பின்னிரவு 4.24 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 4.30 மணிவரை
இராகுகாலம் 01.35-03.05 மணிவரை
சுபநேரம் 07.35-09.05 மணிவரை
பூரணை விரதம்,
திருமூலர் குரு பூசை

வளவன்

**மேடம்:** மனித தெய்வ வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலை ஒன்றில் கணிசமான இலாபம் கிடைக்கலாம், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

**இடபம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மிதுனம்:** எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயலொன்றை செய்வீர்கள்.

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, போசனசுகமுண்டு.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சில் இனிமையுண்டு, வீட்டை அழகுபடுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகன பழுது செலவுகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, திருடர் பயமுண்டு.

**துலாம்:** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள் புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், மனக்குழப்பம் அகலும், பயணங்களால் பலனுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**தனுசு:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**மகரம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பிறருக்கான எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், வாகன சுகமுண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள்.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், நீண்ட நாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம், வருமாணம் திருப்தி தரும்.

**மீனம்:** சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


# அச்சுவேலியிலிருந்து அக்கரைப்பற்று வரை பேருந்து சேவையை நீடித்து செயலாற்றுதல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து அக்கரைப்பற்று, திருகோணமலைக்கு தற்போது செயலாற்றிக்கொண்டிருக்கும் பேருந்துகள் அரச, தனியார் உத்தியோகத்தர்களினதும் மற்றும் பயணிகளினதும் வேண்டுகோளுக்கமைய நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் அச்சுவேலி வீரை நீடித்து




அச்சுவேலி மத்திய பேருந்து தரிப்பிடத்திலிருந்து புறப்பட்டு அச்சுவேலி, தம்பாலை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஊடாக (751 பாதை வழியாக) பருத்தித்துறை பேருந்து நிலையத்தை வந்தடைந்து அங்கிருந்து கொடிகாமம் ஊடாக இப்பேருந்துகள் திருகோணமலை அக்கரைப்பற்று வரை செயலாற்றும் என்பதனையும் இப்பேருந்துக்கள் அக்கரைப்பற்று திருகோணமலையிலிருந்து புறப்பட்டு இதே பாதையூடாக அச்சுவேலியை வந்தடை யவுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ-5)




நன்றி:-அததெரண

## பிரதேச செயலகத்தின் தொலைபேசி இலக்கம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச செயலகமானது தற்போது புதிய பணிமனையில் இயங்க ஆரம்பித்துள்ளது. அதன் காரணமாக பிரதேச செயலகத்தின் தொலைபேசி இலக்கங்கள் பின்வருமாறு மாற்றமடைந்துள்ளன.

பிரதேச செயலர் -0212215201, உதவி பிரதேசசெயலர்-0212215202, கணக்காளர்-0212215203, சமுர்த்தி முகாமையாளர்-0212215204, உதவித்திட்டமிடல் பணிப்பாளர்-0212215205, நிர்வாக உத்தியோகத்தர்-0212215206, சமுர்த்தி வங்கி-0212215221 என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

## பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு தொடரின் கார்த்திகை மாத பௌர்ணமி தின சிறப்பு நிகழ்வாக நம் தமிழர் பண்பாடு பேணுவது தொடர்பாக நம் இளைஞர் விழிப்புணர்வு போதுமா? போதாதா எனும் தலைப்பிலான சிறப்பு பட்டிமன்றம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கு.பாலசண்முகன் நடுவராக கலந்து சிறப்பிக்கவுள்ள இந்நிகழ்விற்கு ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்க செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-5)

# யாழ்.தீவக கல்வி வலயங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை உடன் நிரப்புக

## கல்வி அமைச்சருக்கு விந்தன் கனகரத்தினம் கடிதம்

யாழ்.தீவக வலயத்தில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை உடனடியாக நிரப்புமாறு கோரிக்கை விடுத்து வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரி.குருகுலராசாவிற்கு ஆளும் தரப்பு உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில். யாழ். தீவக வலயப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரிய ஆளணி 648 இருக்கும் நிலையில் 587 ஆசிரியர்களே தொடர்ச்சியாக சேவையாற்றி வருகின்றனர். இவர்களில் முப்பத்து ஐந்து பதில் அதிபர்களும அடங்குவர். நீண்டகாலமாக தொண்ணூற்று ஆறு ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் தீவக வலய பாடசாலைகளில் நிலவி வருகின்றன.

முக்கிய பாடங்களான வரலாறு, புவியியல், தமிழ், மனையியல், கணக்கியல், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களுக்கும் நீண்டகாலமாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இதன் காரணமாக தீவக வலயங்களின் பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் கல்வி நிலையில் பெரும் பாதிப்பும் பின்னடைவும் ஏற்பட்டு வருகின்றது.

தற்போது சேவையிலுள்ள மேற்குறித்த ஆசிரியர் தொகையில் முன்பு கட்டாய 10 வருட சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்களில் 76 பேர் பணியாற்றி வருகின்றனர். அத்தோடு மூன்று வருட சேவை நிபந்தனை அடிப்படையில் பணியாற்றிய 65 ஆசிரியர்களும் மூன்று வருடத்தை பூர்த்தி செய்தமையால் விடுவிக்கப்பட வேண்டியவர்களாக உள்ளனர்.

எனவே தயவுசெய்து சேவைக் காலத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்களை விடுவித்தும் வெற்றிடமாக உள்ள ஆசிரிய ஆளணிக்குமாக மொத்தம் 161 பேரை உடனடியாக நியமிப்பதோடு வெளிமாவட்டத்தில் சேவை செய்யாத யாழ்ப்பாணத்தில் அதிபர் சேவையில் உள்ளவர்களையும் தீவக வலயத்திலுள்ள பாடசாலைகளுக்கு நியமித்து தீவக வலயத்திலுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் உதவும்படியும் கேட்டுக்கொள்கின்றேன் என்று அந்தக் கடிதத்தில் உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## ‘பேரழிவு’ கருத்துரை

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் மலையக மண்சரிவு பேரழிவும் வீட்டு அமைப்பு முறையும் எனும் தலைப்பிலான கருத்துரை இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெறவுள்ளது.

இதில் தொடக்கவுரையினை த.பிரகாசும் கருத்துரையினை பெருந்தோட்டப் பாதுகாக்கும் மக்கள் ஒன்றிய இணைப்பாளர் சபா. மோகனும் ஆற்றவுள்ளனர்.

இக்கருத்துரையினைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. சமூக கலை இலக்கிய விஞ்ஞான அறிவியல் ஆய் வலர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றுமாறு ஒழுங்கமைப்பாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-5)

## ‘பிரபஞ்ச சுருதி’ கவிதை நூல்

(தும்பளை)

சித்தம் அழகியார் வெளியீட்டின் குப்பிளான் ஐ.சண்முகனின் பிரபஞ்ச சுருதி எனும் கவிதை நூல் வெளியீடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பருத்தித்துறை ஞானாலயத்தில் ஞானாலய தலைவர் து. குலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ-19)


# பரிசளிப்பு நிகழ்வு

யாழ். மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையின் பரிசளிப்புவிழா நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சு.சூரியராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியும் பாடசாலை பழைய மாணவனுமான டாக்டர் செ.பிரணவன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பாடசாலையின் முன்னாள் அதிபரும் விக்டோறியாக் கல்லூரி அதிபருமான திருமதி ச.சிவகுமார், வலிகாமம் வலய முறைசாராக் கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.வேலும்மயிலும் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரதம குருக்கள் ப.ஜெயக்குமாரும் நினைவுரையினை பழைய மாணவனும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான க.உஷாந்தனும் வழங்கவுள்ளனர். (இ-5)

## கவிஞர் ஜெயசீலனின் கவிதை நூல் வெளியீடு



கவிஞர் த.ஜெயசீலனின் புயல் மழைக்குப் பின்னான பொழுது என்ற கவிதை நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 8 ஆம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பொருளாளருமாகிய ச.லலீசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை நயினை கி.கிருபானந்தாவும் வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் என். சண்முகலிங்கனும் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடப் பீடாதிபதியும் யாழ். தமிழ்ச்சங்கத்தின் தலைவருமாகிய பேராசிரியர் தி.வேல்நம்பியும் நூல் நயப்புரைகளை பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோரும் வழங்குவர்.

நூலின் முதற்பிரதியை கவிஞர் இயக்கச்சி சி.கருணாகரனும், கௌரவப் பிரதியை கலாபூஷணம் செ.குமாரசாமியும் பெற்றுக்கொள்வர். கவிஞர் த.ஜெயசீலன் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலராகப் பணியாற்றுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மலையக தேசத்து மக்களுக்காக உதவிகள் வழங்கக் கோரிக்கை

கடந்த வாரம் மலையக தேசத்தில் ஏற்பட்ட பாரிய மண் சரிவினால் எம் தமிழ் உறவுகள் பேரழிவைச் சந்தித்துள்ளன.

கடந்த இரு நூற்றாண்டுகளாக தேயிலைத் தோட்டங்களிலும், ஏனைய பெருந்தோட்டங்களிலும் அன்றாடக் கூலிகளாய் துயரம் நிறைந்த வாழ்வையே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் மண்சரிவு என்னும் இயற்கை அனர்த்தம் அவர்களது வாழ்வை மேலும் அதல பாதாளத்தினுள் தள்ளியுள்ளது.

இவ் அனர்த்தத்தினால் 300 ற்கும் அதிகமான எம் தமிழ் உறவுகள் மண்ணில் புதையுண்டு உயிரிழந்துள்ளதுடன் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துமுள்ளனர்.

மேலும் பெருமளவான சிறார்கள் தமது தாயை, தந்தையை அல்லது இருவரையும் இழந்து நிர்க்கதியாகியுள்ளனர். அனைத்து மக்களுமே தமது மனைகள், சொத்துடைமைகள், வாழ்வாதார மூலங்கள் அனைத்தையும் இழந்து வீதிக்கு வந்துள்ளனர்.

கொஸ்லாந்த, மீரியபெத்த ஆகிய மலைக் கிராமங்களே தீவின் வரைபடத்திலிருந்து மறைந்தது போன்றதொரு நிலையே ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் உலகெங்கும் வாழும் தமிழர்கள் ஒன்றிணைந்து வீழ்ந்து கிடக்கும் எம் உறவுகளை அவலங்களிலிருந்தும், அழிவிலிருந்தும் தூக்கி நிறுத்துவதற்காக கரம் கொடுக்க வேண்டிய கட்டாய கடமை எம்முன் உள்ளது.

அந்தக் கடமையினை உணர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இணைந்து மலையக மக்களுக்கு உதவுவதற்காக நிவாரண உதவிகளை சேகரித்து வருகின்றோம்.


எனவே தாயக மக்களையும், புலம்பெயர் தமிழ் மக்களையும், தமிழகத் தமிழ் உறவுகளையும் மலையக தேசத்து தமிழ் மக்களுக்காக உதவிகளை வழங்கி அம் மக்களது மீள் எழுச்சிக்கு உதவுமாறு உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம் உதவிகளை பொருட்களாகவோ அன்றி பணமாகவோ வழங்கலாம்.

பொருட்களை வழங்க விரும்புவோர் 0094 21 222 3739 அல்லது 0094 773 024 316 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொண்டு உங்களுக்கு அருகில் வரும் எமது மனிதாபிமானத் தொண்டர் அணியிடம் கையளிக்கலாம். நிதி உதவியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கீழ்வரும் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைக்கலாம்.

Current A/C No: - 104-1-001-7-0026111, Peoples' Bank, Main Street Branch, Jaffna, Sri Lanka என அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலரின் திருமந்திரமும் பல்வகைச் சிறப்புக்களும்



எண்வகை சித்திகளும் கைவரப் பெற்றவர் திருமூலர். அகத்தியரை சந்திக்க திருக்கைலாய மலையில் இருந்து பொதிகைக்கு சென்றார். செல்லும் வழியில் காவிரிக்கரையில்பசுக்கூட்டங்கள் கண்ணீர் வடித்துப்புலம்புவதை கண்டு தன் உடலை மாற்றி பசுக்களை சந்தோஷப்படுத்திய பெருமான் திருமந்திரம் எனும் 3000 பாடல்களையும் 9 தந்திரங்களையும் உள்ளடக்கிய புனித நூலை உலகிற்கு வழங்கியதுடன் ப்தி, பசு, பாசம் எனும் சைவ சித்தாந்த கருத்துக்களையும் அதனுள் அடக்கினார்.

ஐம்புலன்கள் உடம்பாகிய கோயிலுக்கு விளக்குகள் என்றும் இதை

''உள்ளம் பெரும் கோயில் ஊனுடம்பாலயம் வள்ளல் பிறார்க்கு வாய் கோபுர வாசல்...

எனும் பாடல் அடி சிறப்பிக்கின்றது. அறிவு எனும் உயிரை குறிப்பிடும் திருமூலர் அறிவிற்கு அறிவு தரும் இறைவனையும் அனாதியானவர். அறிவாகிய பசுவை கட்டிய பாசமும் அனாதி என்றும் அப்பாற்பட்ட பொருளாக இறைவனைக்கொண்டு பதி,பசு,பாசம் எனப் பகர் மூன்றில் பதியினை போல் பசு,பாசம் அனாதி என்றுரைக்கின்றது.

நல்ல குரு கிடைக்க வேண்டும். இதில் அஞ்ஞானத்தை அகன்று மெய்ஞ்ஞானத்தை பெறமுடியும் என்று மூலர் தெளிவு குருவின் திரு மேனி கண்டேன்...... என்றும் மாறாக தவறான வழிகாட்டுபவரை குருவாக கொள்ளக் கூடாது என்பதற்கு **குருடும் குருடும் சேர்ந்து குருட்டாட்டம் ஆடி குழியில் வீழ்தல்....** என்று குறிப்பிடுகின்றார்.

தர்மத்தை காத்தவனை அது காக்கும். கொன்றவனை கொல்லும் இது ஒரு கற்புடைய பெண் (பத்தினி) இறை அடியார்,கற்ற மேதை, மனம் நோக தீமை செய்தால், தீமை செய்பவருடைய உயிர்,உடைமை ஒரு வருடத்துக்குள் அழிந்து விடும். இதை திருமந்திரம்

**பத்தினி பக்தர்கள் தத்துவஞானிகள்**
**சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்.....**

என்ற பாடல் அடி சிறப்பிக்கின்றது.

கன்ம வினைகள் பிறவிக்கு வித்தாகும் சிவ சிவ என்று கூறினால் ஆன்மா சிவத்தோடு இணைந்து கொள்ளும். இதனை

**சிவ சிவ என்கிலர் தீவினையாளர் ....**

என்று கூறியதுடன் உலகியலுக்கு பொருள் அவசியம் என்பதை பொருள் இல்லாதவர் தலை குனிந்து நடக்க வேண்டும். பொருள் இருந்தால் நிமிர்ந்து நடக்கலாம். இதை திருக்குறள் பொருள் இல்லார்க்கு இவ் உலகம் இல்லை என்று சிறப்பிக்கின்றது.

திருமந்திரம் புடைவை கிழிந்து போயிற்று வாழ்க்கை என்று கூறுகிறது. உலகில் வாழும் மனிதரிடையே வேறுபாடுகளும், வேற்றுமையும் இறைவனால் உருவாக்கப்படவில்லை. மனிதனால் உருவாக்கப்பட்டவை என்று திருமூலர் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றார்.

முத்தி நிலையை சீவன் சிவமாகும் தன்மை எடுத்து காட்டியதுடன் ஆன்மா முத்தியடைய திருவருட் சக்தி அவசியம் என்றும் சிவனை அடைந்த ஆன்மாக்களின்நிலை சிவனெனெ சிவனெனெ வேறில்லை என குறிப்பிடுகின்றார்.

**கு.கோபிராஜ்**
**சண்டிலிப்பாய் வடக்கு**


## தேவை

இதோ பெண்களுக்கான அரிய சந்தர்ப்பம். நம்பிக்கையான பாதுகாப்பான தொழிலை பெற எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். கொழும்பை அண்மித்த பிரதேசத்தில் உள்ள ஆடை தொழிற்சாலையில் நூறுக்கு மேற்பட்ட வெற்றிடங்கள். சம்பளம் 15000/=, 25000/= உணவு, தங்குமிடம் இலவசம். உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:- 0771116770/ 0776838231

(சி-8970)


## அறிவித்தல்

(சி-8969)

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை வட்டாரம்:- 09, ஆதன இலக்கம்:-184, பிப்பிலி வீதி

வட்டாரம் 09 பிப்பிலி றோட் ஆதன இலக்கம் 184 (புதிய பதிவு) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப்பகுதி, மானிப்பாய், கோவில்பற்று, நவாலி இறை " சீனன் தோட்டம்") என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 குளி 6.51கொண்ட இவ்வாதனமானது அரியநாயகம் பெண் இந்திராதேவி ஆகிய இவர்களால் பிரிவிடல் உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் கனகரத்தினம் கேசவன் முகதாவில் நிறைவேறிய 13451 ஆம் இலக்க 05.08.2012 ஆம் திகதிய பிரிவிடல் உறுதி மூலம் குறித்த ஆதனமா னது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "சீனன் தேட்ம்" நிலப்பரப்பு 03 குளி 6.51 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் அரியநாயகம் பெண் இந்திராதேவி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.


**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:**
**021 321 0815,021 567 1532**

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 23 3/4 சூரிசெவ் 12 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: B/3776 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 43 செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>எதிர்பார்ப்பு:பெண்விவாகரத்தானவர்<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3017 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 13 3/4<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் (சிங்கப்பூர்)<br>தொ.இ: B/3778 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 48<br>எதிர்பார்ப்பு:பெண்விவாகரத்தானவர்<br>தகைமை/தொழில்: O/L/ முன்பள்ளி ஆசிரியர்<br>தொ.இ: G/3019 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 15 1/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L(பிரான்ஸ் PR)<br>தொ.இ: B/3780 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 15 3/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/3030 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 21<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L (லண்டன்)<br>தொ.இ: B/3781 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம் கி.பா: 18 1/2<br>உயரம்: 5'3"<br>எதிர்பார்ப்பு: சைவ போசனம்<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ஆசிரியர்.<br>தொ.இ: G/3027 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## நிரந்தர வேலைவாய்ப்பு

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தில் பல வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/டொபி/பிஸ்கட்/ஆடை போன்றவற்றின் உற்பத்தி, லேபல், பொதியிடல் பிரிவுகளுக்கும் (மேசன், கை உதவியாளர், தச்சு வேலைகள், யாழ்,கிளிநொச்சி மாவட்டங்களில்) 18-50 வயது ஆண், பெண் உடனடியாக தேவை சம்பளம் 18000/=, 38000/= உணவு, தங்குமிடம் குறைந்த விலைகள் வருகை அன்றே வேலை.

தொடர்புகளுக்கு-0771116770/ 0776838231 (சி-8969)

## வேலை வாய்ப்பு

உங்களுக்கு தனியார் துறைமுகம் விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமாயின் கப்பல் புனர்நிர்மாண பிரிவில் சாதாரண ஊழியர் வெல்டர், விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர், கேட்டரிங், லொன்றி, காகோ (18-40 வயது) சம்பளம் 18000=, 35000/=, 40000/= உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில்.

தொடர்புகளுக்கு-0771116770/ 0776838231 (சி-8971)


## மணிவிழா வாழ்த்து



**நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர்**
**உயர் திரு.செ.சேதுராஜா அவர்கள்**

மேம்பட்ட கல்வியும் ஒப்புமையற்ற செயலாற்றமும்
உன்னதமான மனித உறவும் நெஞ்சு நிறைந்த நன்றியுணர்வும்
கொண்ட தங்களை இன்றைய மணிவிழா பாராட்டு
தினத்தில் வாழ்த்துவதில் பெருமை கொள்கிறோம்.

(சி-8241)

"சுபதர்சன்",
சம்பியன் லேன்,
கொக்குவில்

பேராசிரியர். மா.சின்னத்தம்பி
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் சாசனத்துடன் விளையாட எவருக்குமே இடமளிக்கமாட்டோம்

தேர்தலை தடுக்க நாம் முயற்சிக்கின்றோமே தவிர அரசாங்கத்தை கவிழ்க்க தேர்தலை நடத்துவதற்கு நாம் தயாரில்லை. அரசியல் அமைப்பினையும், சட்டத்தையும் பாதுகாக்க வேண்டும். அரசியல் சாசனத்துடன் விளையாட எவருக்கும் இடமளிக்கமாட்டோம் என ஜே.வி.பி.யின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சந்தர்ப்பம் பார்த்திருக்காது நாட்டில் சட்டத்தினை நிலைநாட்ட ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு சகல விதத்திலும் அரசாங்கம் தயார் என தெரிவித்துள்ள நிலையில் ஜே.வி.பி.யின் நிலைப்பாடு தொடர்பில் வினவ்ய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டவிரோத தேர்தலை நடத்தவே அரசாங்கம் தயாராகி வருகின்றது. அரசுக்குள் இயங்கும் பிரிவினைவாதிகளையும், குழப்பகாரர்களையும் தூண்டிவிட்டு ஆட்சியினை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ளவே ஜனாதிபதி முயற்சிக்கின்றார்.

இதற்கு நிகராக நாமும் எதிர்க்கட்சிகளும் தேர்தல் களத்தில் குதிப்பது சட்டவிரோத செயலுக்கு துணைபோகும் வகையிலேயே அமையும்.

அரசியல் சாசனம் இந்த நாட்டின மூலாதாரம். அதனை மீறி செயற்படுவது தேசத்துரோக செயற்பாடாக அமையும். அவ்வாறான தேசத்துரோக செயலையே இன்று அரசாங்கம் செய்ய நினைக்கின்றது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறை போட்டியிடுவதை தடுக்கவே நாம் முயற்சிக்கின்றோமே, தவிர அரசாங்கத்தை கவிழ்க்கும் கொள்கையில் சட்டவிரோத தேர்தலில் போட்டியிட நாம் தயாரில்லை. அரசியல் அமைப்பினை மீறும் செயலையும் அரசியல் அமைப்புடன் எவரும் விளையாடவும் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்.

அதற்காகவே மக்களை தெளிவூட்டும் முயற்சிகளை எடுத்து வருகின்றோம். மக்களின் தெளிவும் அவர்களின் முடிவுமே இறுதியானது. அதற்காகவே முக்கிய பிரதிநிதிகளை இணைத்துக்கொண்டு போராடி வருகின்றோம்.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சி சந்தர்ப்பத்திற்காக காத்திருக்கின்றது. சந்தர்ப்பங்களை அமைத்துக்கொள்ள முடியும். அடுத்த சட்டமுறையான தேர்தலில் அதற்கான பிரகாசமான வாய்ப்பு அமையும். ஆனால் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியும், அரசியல் அமைப்பிற்கு முரணான தேர்தலில் போட்டியிடுவது அரசுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமான வேறுபாட்டினை காட்டாதுபோய்விடும்.

எனவே அரசாங்கத்தின் நீதிக்கு புறம்பான இத் தேர்தலை நிறுத்த ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# நாடற்றவர் நிலையை ஒழிக்க ஐ.நாவிடம் 10ஆண்டுத்திட்டம்

உலகில் நாடற்றவர்கள் என்ற நிலையில் உள்ள மக்களின் துயரத்தை தீர்ப்பதற்கான பத்தாண்டு தட்டமொன்றை ஐ.நாவின் அகதிகளுக்கான நிறுவனம் ஆரம்பிக்கின்றது.

குடியுரிமையோ கடவுச்சீட்டோ இல்லாத நிலையில் உள்ளவர்களே நாடற்றவர்கள் என்ற நிலையில் உள்ளனர். உலகெங்கிலும் இப்படியான நாடற்றவர்கள் என்ற நிலையில் சுமார் ஒரு கோடிப் பேர் இருப்பதாக ஐ.நர் மதிப்பிட்டுள்ளது.

இப்படியான மக்களுக்கு உரிய மருத்துவ வசதிகளோ, போதுமான கல்வி வசதிகளோ அரசியல் உரிமைகளோ இருப்பதில்லை. அகதி முகாம்களில் பிறக்கும் பிள்ளைகளும் ஒடுக்கப்பட்ட இனக் குழுக்களைச் சேர்ந்தவர்களுமே இந்த நாடற்றவர்கள் என்ற நிலையில் இன்றுள்ளனர்.

தமது நிலப்பரப்பில் நாடற்ற நிலையில் பிறக்கும் குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்க அந்தந்த நாடுகள் முன்வர வேண்டும் என்று ஐ.நாவின் அகதிகளுக்கான உயர் ஆணையர் அண்டோனியோ குத்தரெஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆனால் பல நாடுகள் பாரபட்சமான அணுகுமுறைகளை தற்போது குறைத்துவருவதாக அவர் கூறியுள்ளார். (இ-5)

# மீனவர்களைச் சந்தித்தார் தூதுவர் வை.கே.சின்ஹா

போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் அண்மையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 5 இந்திய மீனவர்களை, இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சினஹா நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

கொழும்பு வெலிக்கடை சிறைக்கு சென்ற இந்திய உயர்ஸ்தானிகர மீனவர்களை சந்தித்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் செய்யத் அக்பர்ருதீன் தெரிவித்து ள்ளார்.

தமிழகத்தை சேர்ந்த இந்த மீனவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்ய போவதாக இந்தியா அறிவித்துள்ளது.

போதைப் பொருள் கடத்தியதாக குற்றம் சுமத்தி 2011 ஆம் ஆண்டு இலங்கை கடற்படையினரால் இந்த 5 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.


இவர்களுடன்மேலும்மூன்று இலங்கை பிரஜைகளுக்கு இந்த குறறச்சாட்டு தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது என்பது குறிப்பிடத்தக்கது.(இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 |
| தக்காளி | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 50 |
| கோவா | 100 | 80 |
| கரட் | 120 | 160 |
| பூசணி | 30 | 40 |
| புடோல் | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 |
| பாகற்காய் | 200 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 |
| பயற்றங்காய் | 60 | 140 |
| லீக்ஸ் | 200 | 160 |
| பீற்றூட் | 80 | 100 |
| கறிமிளகாய் | 200 | 160 |
| முருங்கைக்காய் | 60 | 120 |
| போஞ்சி | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 40 |
| தேசிக்காய் | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35-40 |
| இராசவள்ளி | 160 | — |

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 185


டொறின் மன்மதநாயகம்




சிவசிதம்பரம் மகிழ்நன் சிவநாசிம




துஷா துஷா




ரத்தினசபாபதி பாலராஜா




சுஜன் மகேந்திரன்




ராகுலன் பாலா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லற வாழ்விலும் அரசியலிலும் சந்தேகம் வந்தால் நீடிக்க முடியாது

## காங்கிரஸ் அஸ்தமனம் நோக்கிப் பயணிக்கிறது-ஞானதேசிகன்

**ஏன் இந்த திடீர் இராஜினாமா முடிவு?**

நான் பதவியேற்ற நாள் முதல் என்னுடைய பணிகளைச் சிறப்பாய் செய்துள்ளேன். தமிழகம் முழுவதும் 87 பொதுக் கூட்டங்களை நடத்தியுள்ளேன். கூட்டங்களில் தலைவர்களையும், அமைச்சர்களையும் புறக்கணித்தது கிடையாது. சிதம்பரம், ஜி.கே.வாசன் இருவரையும் ஒன்றாக இணைத்துக் கூட்டங்கள் நடத்தியுள்ளேன். கட்சியின் உட்கட்டமைப்பை வலுப்படுத்தியுள்ளேன். இதுவரை யாரும் இதுபோன்று செய்தது கிடையாது. எனது இராஜினாமா திடீர் முடிவல்ல. நிதானமாக யோசித்து, என் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எடுக்கப்பட்டது. நம்மால் சில விடயங்களைச் சுலபமாக உணர முடியும். அவ்வாறு உணர்ந்ததன் விளைவாக இதற்கு மேல் இந்தப் பதவியில் நீடிக்கக் கூடாது என்று முடிவெடுத்தேன்.

**தலைவராக இருந்தபோது கட்சித் தலைமை உங்கள் யோசனைகளைப் புறக்கணித்துவிட்டதா?**

அப்படிச் சொல்ல முடியாது. என்னை அவர்கள் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. கடந்த 10 ஆண்டுகளாக மாநில நிர்வாகிகள் இல்லாமல் இருந்த கட்சிக்குப் புதிதாக ஆட்களை நியமிப்பதில் உறுதியாக இருந்தேன். இதற்காக டில்லிக்குச் சென்று தலைமையை வற்புறுத்தியதில் புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர். சுயநலம் இன்றி, கோஷ்டிப் பூசலைத் தவிர்ப்பதற்காகக் கட்சியில் உள்ள ஏனைய தலைவர்களிடம் பேசி அவர்கள் பரிந்துரைத்த நபர்களையே தலைமைக்கு அனுப்பி வைத்தேன். பொதுச் செயலாளர், மாவட்டத் தலைவர் பதவிகளுக்கு அனுமதி கொடுத்த தலைமை செயலாளர் பதவிக்கு அனுமதி கொடுக்க மறுத்தது.

அப்போதுதான் தலைமை மீதான அதிருப்தி தொடங்கியது. நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு செயலாளர் பட்டியலை வெளியிடும்படி கேட்டேன். தலைமையிடமிருந்து பதில் இல்லை. இந்த நிலையில், ஒரு கோஷ்டியைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர்கள் எந்தவொரு கூட்டத்துக்கும் வருவது இல்லை. நான் இதை எல்லாம் வெளிக்காட்டிக்கொள்ளாமல் கட்சிக்காக, அவர்கள் செய்த அனைத்தையும் பொறுத்துக் கொண்டிருந்தேன். இதுகுறித்து தலைமையிடம் பலமுறை கூறியும் அவர்கள் கண்டிக்கவில்லை. இது மிகப் பெரிய அளவில் மனஉளைச்சலை ஏற்படுத்தியது. சமீபத்தில், மகேந்திரன் என்பவரை மாநில பொதுச் செயலாளராக அவசர அவசரமாக தலைமை நியமித்தது. தமிழக தலைவர் என்கிற முறையில் என்னிடம் அதுபற்றி ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை. ஆனால், என்னுடைய வருத்தம்... பல மாதங்களாகக் கிடப்பில் உள்ள செயலாளர் பட்டியலுக்கு ஆர்வம் காட்டாத தலைமை, திடீரென்று ஒரு பொதுச் செயலாளரை நியமிப்பதில் ஏன் அவசரமாகச் செயற்பட வேண்டும்? இதனை வெளியிலிருந்து பார்க்கும் தொண்டர்கள் என்னை எவ்வாறு நினைப்பார்கள்?

**உறுப்பினர் அட்டையில் என்னதான் பிரச்சினை?**

கிட்டத்தட்ட 10 இலட்சம் உறுப்பினர் அட்டைகளை வழங்குவதற்குத் தயாராக இருந்த நேரத்தில், உறுப்பினர் அட்டைகளை வழங்க வேண்டாம் என்றார் பொதுச் செயலாளர் சின்னா ரெட்டி. காமராஜர், மூப்பனார் படங்கள் இருப்பதுதான் பிரச்சினையா? என்றதற்கு, சிரித்துக்கொண்டே கொடுக்க வேண்டாம் என்று மட்டும் சொன்னார். அவர்களின் புகைப்படங்களைப் போடாவிட்டால் நான்கூட காங்கிரஸ் உறுப்பினராக மாட்டேன் என்றேன். தமிழகத்தில்




### என்னை அவர்கள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை!

**தோல்விக்குப் பிறகுகூட இந்தக் கட்சி தனது போக்கை மாற்றிக் கொள்ளவில்லை. 67இல் காமராஜர் தொடங்கிய தேசிய மாணவர் தமிழ் வளர்ச்சிக் குழுமத்தில் என்னை இணைத்துக் கொள்வதற்காக 60 மாணவர்களோடு காங்கிரஸுக்குள் சென்றேன். கிட்டத்தட்ட 47 வருடங்கள் சுயநலமில்லாமல் கட்சிக்காக உழைத்தேன். இப்போது இந்தக் கட்சி ஒவ்வொரு மாநிலமாகச் சிதைந்து போயுள்ளது என்று பேசிக் கொண்டிருக்கும்போதே கலங்குகிறார் முன்னாள் தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன்.**

நடப்பதெல்லாம் சோனியாவின் காதுகளுக்குத் திரித்துச் சொல்லப்படுவதாக பொறுப்பாளர்கள் கூறுவதை ஆராயாமல் அப்படியே நம்புவதாக நான் நினைக்கிறேன். தமிழகத்திலிருந்து டில்லிக்கு யார் சென்றாலும் அவர்களிடம், தமிழகத்தில் அடுத்த தலைவராக யாரை நியமிக்கலாம் என்று பொதுச் செயலாளர்கள் கேட்டதாகத் தகவல் கிடைத்தபோது நான் வருந்தினேன். இதை அவர்கள் என்னிடம் கேட்டிருந்தால் நானே பதவியிலிருந்து விலகியிருப்பேன்.

**நீங்கள் சந்தித்த நெருக்கடிகள் என்னென்ன? முக்கியமாக நாடாளுமன்றத் தேர்தலின்போது?**

மாநிலத் தலைவரின் கருத்தை ஏற்கும் பொறுமை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்குச் சுத்தமாக இல்லை. எதையுமே என்னிடம் விவாதித்தது இல்லை. தமிழகத்தில் ஒருவரை நியமித்துவிட்டோம். ஓடும் வரை ஓட்டும் என்கிற மனநிலையில்தான் அவர்கள் இருந்தனர். கட்சி வளர வேண்டும் என்ற எண்ணம் தலைமைக்குத் துளியும் இல்லை. ஆந்திராவைப் பிரிக்க வேண்டாம் என்று அங்கிருந்தவர்கள் சொன்னபோது, அதையும் மீறி தலைமை அதைப் பிரித்தது. இப்போது அங்கு கட்சியே காலியாகிவிட்டது. மாநிலத்தில் உள்ள கட்சியில்கூட நேரடித் தொடர்பு இல்லாத நிலை இங்குள்ளது. தி.மு.க நம்முடைய கூட்டணியில் இருக்காது என்று பலமுறை தலைமையிடம் சொல்லிவிட்டேன். கேட்டார்களா? இல்லையே. கடைசி நாள் வரை தி.மு.கவிடம் பேச்சு வார்த்தை நடத்தி அசிங்கப்பட்டு திரும்பியதுதானே மிச்சம். கூட்டணி குறித்து ஒரு வார்த்தை கூட தெரிவிக்காமல் அசிங்கப்படுத்தினார்கள். நான் கொடுத்த வேட்பாளர்கள் பட்டியலையும் முழுமையாக நிறைவேற்றவில்லை. அதில் பலரை மாற்றியிருந்தனர். சாதாரண தேர்தல் விளம்பரத்தில்கூட என் பேச்சைக் கேட்கத் தயாராக இல்லை.

**இராஜினாமா குறித்துத் தலைமையிடம் சொன்ன போது உங்களிடம் காரணம் கேட்டார்களா?**

எதற்காகவும் என்னிடம் பேசாதவர்கள், என் கருத்தைக் கேட்காதவர்கள், நான் இராஜினாமா செய்யப் போகிறேன் என்று சொன்ன போதுகூட கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்களும் அதைத்தான் எதிர்பார்த்திருந்தார்கள். நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் என்னைப் பற்றி அவதூறு பரப்பியவர்கள் தேர்தலுக்குப் பின் என்னை இந்தப் பதவியிலிருந்து நீக்கத் திட்டம் தீட்டி குழி பறித்துவிட்டனர். சோனியா என் மீது பாசமாகத்தான் இருந்தார். ஆனால், அவரிடம் என்னைப்பற்றி தவறான செய்திகளே சொல்லப்பட்டுள்ளன. என்னைப் பொறுத்தவரை இந்தப் பதவி, நாற்காலி எல்லாமே நிரந்தரம் இல்லாதவை. இதற்காக நான் ஒருபோதும் வருத்தப்பட மாட்டேன்.

**கட்சியில் கொண்டு வரப்பட வேண்டிய சீரமைப்புகள்?**

ஒட்டுமொத்த காங்கிரஸ் கட்சியின் அமைப்பையும் மறு சீரமைக்க வேண்டியுள்ளது. சோனியா நேரடியாகக் களத்துக்குச் சென்று கட்சியின் நிலைமையை ஆய்வுசெய்ய வேண்டும். பொதுச் செயலாளர்கள் தங்கள் அணுகுமுறையை மாற்றி எஜமானர்களைப்போல நடந்துகொள்வதைத் திருத்திக்கொள்ள வேண்டும். கட்சியினரை உதாசீனப்படுத்துவதை நிறுத்திக்கொண்டு அவர்களுடைய கருத்துகளுக்குச் செவி கொடுக்க வேண்டும்.

**ஜி.கே.வாசன் காங்கிரஸில் இருந்து வெளியேற என்ன காரணம்?**

கடந்த மூன்று, நான்கு மாதங்களாகவே வாசனைப் பற்றி பல அவதூறு விடயங்களை சோனியாவிடம் இங்குள்ள தலைவர்கள் கூறியுள்ளனர். அவர் எப்போது வேண்டுமானாலும் கட்சியிலிருந்து சென்றுவிடுவார் என்று வாசன் மீது ஒரு கூட்டம் பழி சுமத்தியது. ஆனால், வாசனுக்கு அதுபோன்ற எண்ணம் இல்லை. அரசியலிலும் இல்லற வாழ்க்கையிலும் சந்தேகம் வந்துவிட்டால் அதில் நீடித்திருப்பது மிக சிரமம். அந்த நிலைமைக்குத்தான் நாங்கள் தள்ளப்பட்டோம்.

**தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் எதிர்காலம் இனி எவ்வாறு இருக்கும்?**

கேரள காங்கிரஸில் இருக்கும் ஒற்றுமை தமிழக காங்கிரஸில் கிடையாது. தவளை, நண்டு கதைதான் இங்கு அரங்கேறுகிறது. ஏற்கனவே பல மாநிலங்களில் காங்கிரஸின் செல்வாக்கு சரிந்துள்ளது. கட்சி அடுத்தகட்டத்தை நோக்கி வளர்வது கடினம்.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களினது விரக்தியும் அரசாங்கத்தினது அந்தரிப்பும்



(நேற்றைய தொடர்ச்சி...)

இலங்கை அரச தலைவர்கள் எவருமே, தனித்தவிதத்தில் தாம் சரியென நம்புவதையே உண்மையென பிடிவாதம் பிடிப்பவர்களாயுள்ளனர். கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக கட்சியின் கட்டுப்பாட்டிலிருக்கும் வட மாகாண சபையின் ஆயுட்காலத்தில் தனிப்பட்ட அங்கத்தவர்களின் தீர்மாணங்களையே ஒன்றன் பின் ஒன்றாக சபை நிறைவேற்றியிருந்தது.

அந்த தீர்மானங்களனைத்தும் தமிழ் பிரிவினைவாதிகளின் மீள் எழுச்சிக்கான ஆரம்ப சமிக்ஞையென மத்திய அரசினால் குறித்துரைக்கப்பட்ட கூற்றுக்களுக்கு எதிரானவையானவையே. ஐக்கிய இலங்கைக்குள்ளாகவே அரசியல் தீர்வொன்று அடை



யப்பட வேண்டும் என்பதில் த.தே. கூட்டமைப்பு இருக்கும் நம்பிக்கையைமீண்டும்மீண்டும்உறுதியாக வலியுறுத்தும் இந்தவிதமான தீர்மானங்கள் ஒன்று மட்டுமல்ல அவர்களது கடந்த கால மக்கள் பேரணிகள், எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்களுங் கூட இதே கருப் பொருளை எதிர்காலத்திற்குமாக சேர்த்து வலியுறுத்தும் விதத்திலேயே அமைந்தவையாயிருந்தன.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் வஞ்சகத்தனமான அரசியல் சூழ்ச்சிகளுக்குவிரோதமாகமுட்டிமோதாத விதத்தில் தன்னுடைய வார்த்தைகளே நியாயமும் உண்மையுமானவை எண்பதுடன் பெரும்பான்மையான தமிழ் மக்கள் மத்தியில் அர்த்தமுள்ளவையாகக் கருதப்படுபவை என ஏனையோருக்கும் நாடு முழுவதற்கும் உலகிற்கும் நிரூபித்துக் காட்டவேண்டிய நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் உள்ளது.

போருக்குப்பிந்திய விதமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் மற்றும் மக்கள் பேரணிகள் போன்ற நடவடிக்கைகளிலெல்லாம் பல்வேறு பிரச்சினைக்குரிய விடயங்கள் மற்றும் கொள்கைகளில் அதிகரித்துக்கொண்டிருக்கும் வேறுபாடுகள் போன்றவற்றை சம்பந்தப்பட்ட தனியாட்களது குணவியல் புகழ் மட்டுமன்றி அவர்களது கர்வமான செயற்பாடுகளும் வெளிப்படுத்துவதாயிருந்தன.

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மே தின பேரணியின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேடையில் அதன் தலைவர் சம்பந்தனுடன் ஐக்கிய தேசியக்கட்சியின் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து கொண்டது இதனை தெளிவாகவே எடுத்துக் காட்டுவதாயிருக்கிறது.

ஒருவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்கால பேரணிகள் மற்றும் மாநாடுகளிலுங் கூட தமிழ் மக்களது உரிமைகள் ஆத்மார்த்த



விருப்புகளுடன் தமிழர் பிரிவினை வாதத்தை எதிர்காலத்தில் தனித்த விதமாக வலியுறுத்தாத தமது அபிலாசைகளைப் வெளிப்படுத்தும் போது ஐக்கிய இலங்கை என்ற விடயத்திற்கே கூடுதல் அழுத்தம் கொடுக்கப்படுவதாகவும் இருக்கலாம்.

தமிழ் பெருமக்களது தனியான அபிலாசைகள் பற்றிய தமது சொந்த அனுபவங்கள் காட்டும் வழியிலேயே பெரும்பான்மை சிங்கள சமூகத்தை அணுகி அதனூடாகவே அவர்களது அரசியலுக்குள் பிரவேசிக்க வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது. தம்மையே தமிழர் பிரதிநிதிகளாக முதன்மைப்படுத்துமாறு அரசாங்கத்தையும் சிங்கள – பௌத்த அரசியல்வாதிகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கேட்டுக்கொள்ள முடியாது.

**தமிழ் மக்களது விரக்தியும் அரசாங்கத்தினது அந்தரிப்பும் எனும் தலைப்பில் என்.சத்தியமூர்த்தி சண்டே லீடர் பத்திரிகையில் எழுதிய ஆய்வு கட்டுரையின் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது.**

அவ்வப்போது இருக்கும் அரசுடன் அது தானாகவே தான் பேசிக் கொள்ள வேண்டியிருக்கும். அந்தந்த சமூகத்து வாக்காளர் பலமே யதார்த்தமானது என்பதால் அதை [illegible] கணிக்க முடியாது. அது மட்டுமன்றி இரு தரப்புகளும் தமக்கே உரித் தான விதத்தில் விடயம் பற்றிய பிரத்தியேக பார்வையை கொண்டிருக்கவும் முடியாது.

பெருந்திரளான சிங்கள மக்களது தலைமையுடன் மட்டும் தொடர்ச்சியாக இருந்துவந்த பரஸ்பர செயற்பாடுகள் தற்போது எதுவித நகர்வுக்கும் இடமேயில்லாத ஒரு வித முடக்க நிலையை எட்டியதாகவே இருக்கிறது. எனவே தனித் தலைமைத்துவத்திற்குப் பதிலாக கூடுதல் தலைமைத்துவங்கள் கொண்ட ஒரு பிரிவுமட்ட நிலையே குறைந்தது ஒரு இடைக் காலத் தீர்வு போன்ற தற்காலிக பெறுபேற்றையாவது தமிழர் களுக்கு வழங்குவதாயிருக்கும். அதுவுங்கூட நடைபெறுவதாக இல்லை. பல தசாப்தகாலங்களாகவே அரச அதிகாரத்தலைமையிலிருக்கும் சிங்கள அரசியல் சக்திகளுடன் மட்டுமே தமிழர் பிரச்சினைகளை யிட்டு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதுடனேயே திருப்திப் பட்டுக் கொண்டுவந்த தமிழ் மித வாதிகளோ தீவிரசக்திகளோ சரி, ஏற்படும் தவறுகளுக்கு அரசுத் தலைமையை மட்டுமே குறை கூறி வந்தனர்.

**வெளிநாட்டினர் மீதான தடை**

தற்போது, நடக்கும் விடயங்களனைத்தும் பாதுகாப்பு அனுமதியின்றி வட மாகாணத்திற்கு செல்லும் வெளிநாட்டினர் அனைவர் மீதும் தடை ஏற்படுத்தும் விதத்தில் முன்னைய தடைச் சட்டத்தை மீளவும் திணித்திருக்கும் நடைமுறைகளுக்குள் உள்ளடங்குவதாயுள்ளன. அண்மையிலேயே விலக்கிக் கொள்ளப்பட் இத்தடை திரும்பவும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளமையானது தேசிய ரீதியிலும் அதனிலும் பார்க்க தீவிரமான முறையில் சர்வதேச ரீதியிலும் பல பிரச் சினைக்குரிய கேள்விகளை எழுப் புவதாயுள்ளது.

அரசாங்கமோ என்றால் நாட்டினுள் சமூகங்களிடையே அமைதியின்மையை தூண்டும் சக்திகளுக்கெதிராக இத்தடைஅவசியமானது என்பதையே சாட்டாக கூறிவருகிறது. தென் இலங்கை சிங்கள பகுதிகளிலும் இலங்கைக்கு வெளியே வெளி நாடுகளி லிருக்கும் அனைத்து மக்களும் இத்தடைபற்றி தவறாக விளங்கிக் கொள்ளாமலும் பிழையான விளக்கங்களைப் பெற்று விடாமலிமிருப்பதற்காக இதுமட்டில் தெளிவான விளக்கங்கள் தேவைப்படுகின்றன. சிங்கள பௌத்த தேசிய வாத சக்திகளிலிருந்து புதிதாக உருவெடுத்திருக்கும் ஒரு அதிதீவிரவாத சக்தியாகிய பொது பல சேனா சம்பந்தப்பட்ட விசேடமான முஸ்லிம் எதிர்ப்பு போன்ற அமைதியின்மையைத் தூண்டும் சக்திகளையிட்டு அரசாங்கம் விழிப்புடனிருப்பது மட்டுமின்றி அவர்களது நடவடிக்கைகளையுங் கூட தனது புதிய கலவரச் சட்டம் (NEW RIOT ACT) ஊடாகவே தோற்கவும் வேண்டும்.


இந்த புதிய தடைச்சட்டமானது, வெளிநாடுகளில் பிரஜாவுரிமையுடன் அதற்கேற்ப கடவைச்சீட்டுக்களையும் பெற்றிருக்கும் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களுக்கும் பொருந்துவதாகவே இருக்குமென்பது ஆர்வத்திற்குரிய ஒன்றாகும்.

எனவே, அரசின் அதிகரித்த கட்டுப்பாடுகளின் கீழ் புகைந்து கொண்டிருக்கும் இலங்கைத்தமிழர்களுடன் பிரிவினைவாதிகள் போன்றோரின் உணர்வுகளை தட்டியெழுப்புவதற்கென்றே களவாகவும் அறியப்படாமலும் வட மாகாணத்திற்குள் நுழைவோருக்கும் இச்சட்டம் பொருந்துமா என்பது கேள்விக்குறியே. தற்போது இடம்பெற்றுவரும் 'OHCHR' விசாரணைகளுக்கு உதவியாக பாதிக்கப்பட்ட இலங்கைத்தமிழர் சம்பந்த மான உண்மைத்தகவல்களை பெற்றுக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் 'UNHRC' ஐச் சேர்ந்த கடல் கடந்த முகவர் நிலையங்கள் மற்றும் தனி முகவர்கள் போன்றோ ருங் கூட இந்த தடைச்சட்டத்திற்கு தப்ப முடியாது.

தற்போதைய இந்நிலைமைகளனைத்தும் முன்னர் ஜனாதிபதி ராஜபக்ஷவும் அவரது அரசாங்கமும், வெளிநாட்டினர் வட பகுதிக்கு பாதுகாப்பான பயணங்களை மேற்கொள்ள முடியுமென்பதுடன் இலங்கையர்களும் அங்கு சென்றுவர பாதுகாப்பான நிலை தற்போது உள்ள தென ஏற்கனவே பிரகடனப்படு த்தியிருந்த காலத்திற்கு முந்திய ஆபத்தான கால கட்டத்திற்கே இட்டுச் செல்வதாயுள் ளது.


இலங்கையில் இயல்புநிலையை மீளவும் ஏற்படுத்துவதுடன் போரினால் சீரழிக்கப்பட்ட வட பகுதி நிலைமைகள் சீராக்கப்பட்டு இயல்பு நிலை திரும்பி யுள்ளதாக தன்னைத்தானே நம்ப வைப்பதுடன் உலகத்திற்கும் நிரூபித்துக் காட்டும் நோக்குடன் கொழும்பில் அடுத்தடுத்து பதவிக்கு வந்திருந்த அரசாங்கங்கள் என்ன விதமான பதற்றத்துடன்விடயங் களை அணுகியிருந்தனவோ அதே அணுகு முறையே இன்றும் தொடர்வதாயுள்ளது.

இன்று, இந்தத்தடையானது



நாட்டின் உள்ளேயும் வெளியேயும் இருக்கும் இலங்கை அரச மற்றும் ராஜபக்ஷ தரப்பு எதிர்ப்பாளர்களுக்கு மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக அவர்களை குற்றஞ்சாட்டுவதற்கான விடயங்களை எளிதாக வழங்குவதற்கு உதவுவதாயிருக்கிறது.

அதாவது, போர்க்கால வருடங்களின் போது குறிப்பிடத்தக்கதாயிருந்த தகவல் தொடர்பு ஊடகங்கள் மற்றும் மனிதத்திற்கு விரோதமான அதுபோன்ற ஏனைய தடைகள் போன்ற மனிதவுரிமை மீறல் வழிமுறைகளையே அவர்கள் கையாள்வது போன்ற குற்



றச்சாட் டுக்களே அவை.

எப்படியும், இது வடக்கு மாகாண சபையினால் கட்டுப்பாடற்ற விதமாக நிறைவேற்றப்பட்ட சரியான குறியிலக்கற்ற தீர்மானங்கள் பற்றிய அரசின் அதிகரித்த எச்சரிக்கை உணர் வின் வெளிப்பாபாகவுங்கூட உள்ளது. இவ்வாறான சபை நடவடிக்கைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைத்துவத்தினால் சீர்தூக்கி பார்க்கப்படாமல் அனுமதிக்கப்படு மானால் அல்லது வடக்கின் கட்சி மற்றும் அரசியல் நிர்வாகத்தினால் வழிப்படுத்தப்படாமலும் விடப்படுமானால் இதனிலும் பார்க்க கூடுதல் துரதிர்ஷ்டமான விளைவுகளுக்கும் காலாக அமைவதாயுமிருக்கலாம்.


(முற்றும்)

**தமிழில்: யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதில் அர்த்தம் எதுவும் இல்லையாம்

## அமைச்சர் ராஜித விளக்கம்



(கொழும்பு)

**இலங்கையின் சட்டக்கட்டமைப்புக்கு அமைய வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக இந்தியாவில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதில் அர்த்தம் இல்லை என்று மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். இலங்கையின் மீனவர்கள் சிலரும் இந்தியாவில் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர். நாங்கள் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் சட்டக்கட்டமைப்புக்கு அமைவாக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு ஒன்று தொடர்பில் தமிழகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்துவதில் அர்த்தம் இல்லை. நாடு ஒன்றுக்கு சட்டதிட்டங்கள் உள்ளன. அவற்றை புரிந்துகொள்ள வேண்டும்.

குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே இந்திய மீனவர்கள் சிலருக்கும் இலங்கை மனவர்கள் சிலருக்கும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை மீனவர்கள் சிலர் குற்றச்சாட்டுக்களின் பேரில் நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டு இந்திய சிறைகளில் உள்ளனர்.

இந்நிலையில் அதனை எதிர்த்து இலங்கையில் ஆர்ப்பாட்டம் செய்யப்படவில்லையே? சட்டம் என்பது பொதுவானதாகும்.

### விருப்பம் இன்றியே அமைச்சராக உள்ளேன்

இது இவ்வாறு இருக்க மன தளவில் விருப்பம் இன்றியே மீன்பிடி அமைச்சை நான் பொறுப்பேற்றேன். எனது வீட்டில் யாரும் மாமிசம் உண்ண மாட்டார்கள். நான் மட்டும் மீன்பிடி அமைச்சர் என்பதால் மீன் உண்ணுகின்றேன். இந்நிலையில் மீன்பிடித்துறை அமைச்சராக இருப்பதற்கு விரும்பவில்லை. நான் மீன்பிடி அமைச்சராக இருப்பதை எனது குடும்பத்தார் விரும்பவில்லை. குறிப்பாக எனது மகன் விரும்பவில்லை.

எனினும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி கருதியும் நாட்டில் காணப்படுகின்ற மந்தபோஷன நிலையை குறைப்பதற்காகவும் இந்த பணியை அர்ப்பணிப்புடன் மேற்கொள்கின்றேன். அதாவது மந்தபோஷனம் என்ற விடயத்தை போக்குவதற்காக இவ்வாறு மீன்பிடி அமைச்சராக இருப்பதன் மூலம் பங்காற்ற முடிகின்றது என்பதற்காக அர்ப்பணிப்புடன் வேலை செய்கின்றேன்.

### ஓய்வூதியத்தை இழந்தேன்

அரசியலுக்கு வருவதற்கும் நாம் ஆரம்பத்தில் விரும்பவில்லை. எனினும் ஒருசில நண்பர்களின் வலியுறுத்தலால் வந்தேன். அதனால் நான் அரச சேவையை இழந்தேன். ஓய்வூதியத்தையும் இழந்தேன். நான் நடத்திவந்த மருத்துவ சிகிச்சை நிலையத்தை மூடினேன். எனது வர்த்தகத்தையும் நிறுத்தவேண்டியேற்பட்டது.

அரசியலுக்கு வந்ததால் எனக்கு நட்டமே ஏற்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மகிந்த அரசாங்கத்திடம் பணப்பிரச்சினையில்லை

## அமைச்சர் எஸ்.பி. கூறுகிறார்



வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் குளறுபடிகளை கொண்டது என எதிர்க்கட்சியில் இருக்கும் சிலர் வாதிட்ட போதிலும், அதில் எந்த உண்மையுமில்லை என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

உலகில் எந்த நாட்டின் புள்ளி விபரங்களிலும் பொய்களை செய்து விட முடியாது. இந்த புள்ளி விபரங்களை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிதிநிறுவனங்கள்கவனம்செலுத்தும்.

இதனால், பொய்களை புள்ளி விபரங்களாக கூறினால், பல பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும்.

நிதி தொடர்பான எந்த பிரச்சினையும் அரசாங்கத்திற்கு இல்லை. வரவு செலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகை 521 பில்லியன் மட்டுமே.

9.2 வீத அந்நிய செலாவணி கையிருப்பில் இருப்பதுடன், 2000 ஆம் ஆண்டு வங்கிகளின் நிதி பலம் 3 ஆயிரம் பில்லியனாக இருந்ததோடு தற்போது அது 11 ஆயிரம் பில்லியனாக அதிகரித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரம் வலுவான நிலையில் இருக்கின்றது. இதனால், மிஹின் லங்கா போன்ற நிறுவனங்களுக்கு நிதியை வழங்கி அவற்றை மேம்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 7.08 வீதமாகும் எனவும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார். (இ-5)

# இலங்கையை சீனர்கள் ஆக்கிரமித்துள்ளனர்

## ஐ.தே.க. எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையை சீனர்கள் ஆக்கிரமித்து விட்டார்கள். எங்கு பார்த்தாலும் சீனர்களைத் தான் காண முடிகிறது. அவர்கள் வந்தால் போகமாட்டார்கள் என ஐ.தே. கட்சி எம்.பி சுஜீவ சேனசிங்க சபையில் எச்சரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வரவு செலவு திட்டம் மீதான குழு நிலை விவாதத்தின் முதல் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே சுஜீவ சேனசிங்க எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சீனர்கள் ஒரு நாட்டுக்கு வந்தால் போக மாட்டார்கள். இன்று எமது நாட்டில் எங்கு பார்த்தாலும் அவர்களைத் தான் காண முடிகின்றது.

எதிர்காலத்தில் அவர்களை கேட்காது அவர்களது அனுமதியில்லாது எதனையும் செய்ய முடியாத நிலை ஏற்படும்.

சீனாவின் காலனித்துவ நாடாக இலங்கை மாறிக்கொண்டு வருகின்றது.

எதிர்காலத்தில் பயங்கரமான நிலைமை உருவாகும் என்று எம்.பி மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## போப்பாண்டவருக்குக் கடிதம் எழுதிய சிறுவன்

ஒரு சிறுவன். அவன் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை.

அவனோ ஏழைச்சிறுவன். எனவே மருந்து வாங்க கையில் அவனிடம் பணமில்லை என்ன செய்வது என்று யோசித்தான்.

இது நடந்தது இத்தாலியில். அந்த சிறுவன் இருந்தது ரோம் நகரில். அவனுக்குத் தேவைப்பட்டது 37 லிரா. லிரா என்பது இத்தாலிய நாணயம். 37 லிரா கிடைத்தால் அம்மாவுக்கு மருந்து வாங்கிக் கொடுத்து விடலாம். யாரிடம் கேட்பது? அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் திடீரென்று ஓர் எண்ணம் உதயமானது. போப்பாண்டவரிடம் கேட்டுப்பார்க்கலாம் என்று! அப்போது போப்பாண்டவராக இருந்தவர் ஒன்பதாவது பயஸ். சிறுவன் தன் தாயாரிடம் ஓடினான். "அம்மா... போப்பாண்டவருக்குக் கடிதம் எழுதப் போகிறேன்..." இதைக்கேட்டதும் அம்மாவுக்குப் பதற்றம்.

"என்னப்பா சொல்றே? போப்பாண்டவருக்கா? நீயா? அவருக்கு நீ கடிதம் எழுதுவதா? இது சரியா இருக்குமா?" "ஏன் எழுதினால் என்ன? நமக்கு அவர் தானே குரு. நம்மைக்காப்பாற்ற வேண்டியவர் அவர் தானே?" "நீ சொல்றது சரி... இருந்தாலும்..." என்று தாயார் கூறி முடிக்கையும் "நான் எழுதத்தான் போறேன்." என்றான் அவன். உடனே ஒரு தாளை எடுத்து அவனுக்கு தெரிந்த வகையில் கிறுக்கி கிறுக்கி அந்தக்கடிதத்தை எழுதி முடித்தான். ஏகப்பட்ட எழுத்துப் பிழைகள். ஒரு வழியாக அந்தக்கடிதத்தை போப்பண்டவருக்கு அனுப்பி வைத்தான். கடிதம் போப்பாண்டவருக்கு போய்ச்சேர்ந்தது. பிரித்துப்பார்த்தார்.

சிறுவனின் துணிச்சல் அவருக்கு பிடிச்சிருந்தது. மகிழ்ந்தார். உடனே ஒரு பதில் எழுதினார் "தம்பி நேரில் வந்து என்னைப்பார்" என்று.

சிறுவன் கடிதத்தை எடுத்துக் கொண்டு போப்பாண்டவர் இருக்குமிடம் சென்றான். வாசலில்நின்றவர்களிடம் கடிதத்தைக் காட்டினான். அவர்களுக்கு ஆச்சரியம்.

"இந்தச் சிறுவனை எதற்காகப் போப்பாண்டவர் அழைத்திருப்பார் என்று அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள் என்றாலும் கடிதம் கையில் இருக்கிறதே!

வேறு வழியின்றி அந்தச் சிறுவனை உள்ளே போக அனுமதித்தார்கள்.

சிறுவன் போப்பாண்டவரைக் கண்டான். வணங்கினான் அவர் தம் ஆடைக்குள் கையை விட்டார். ஒரு நாணயத்தை எடுத்தார். சிறுவனிடம் கொடுத்தார். அவன் அதை வாங்கிப்பார்த்தான்.

அது 20 லிரா நாணயம்.

சிறுவன் தயங்கினான்

"ஏன் தம்பி தயங்குகிறாய் ?"

"ஐயா... நான் கேட்டது 37 லிரா. தாங்கள் கொடுத்திருப்பது 20லிரா. அம்மாவுக்கு மருந்து வாங்க 37 லிரா வேண்டுமே.

"ஓ அப்படியா ? நான் மறந்து விட்டேன். இந்தா என்று சொல்லி மறுபடியும் தன் உடைக்குள் இருந்து இன்னொரு 20லிரா நாணயத்தை எடுத்துக் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்ட சிறுவன் சற்று யோசித்தான். பின்பு சரி வருகிறேன் என்று போப்பாண்டவருக்கு விடை பெற்றுக் கொண்டு ஓடிப்போய் விட்டான்.

"சிறுவனின் துணிச்சலும் கபடம் இல்லாத உள்ளமும் போப்பாண்டவரை வியக்கவைத்தது. ஆனாலும் அந்த சிறுவன் 40 லிரா பெற்றுக்கொண்ட பின்பும் ஏன் தயங்கினான்? இன்னும் கொஞ்சம் பணம் தேவைப்பட்டிருக்குமோ. அவன் தயங்கியது எதனால் என்று அப்போது போப்பாண்டவருக்கு விளங்கவில்லை.

அந்த சிறுவனின் தயக்கத்திற்கான காரணம் அடுத்த நாள் தான் அவருக்கு விளங்கியது.

மறுநாள் காலை மறுபடியும் போப்பாண்டவரை தேடி வந்தான் அந்தச் சிறுவன்.

"இன்னும் ஏதாவது தேவையா?" என்பது போல் இவர் அந்தப் பையனின் முகத்தைக் கவனித்தார்.

"இல்லை ஐயா... இதைக் கொடுத்து விட்டு போகத்தான் வந்தேன்" என்பது போல அந்தச் சிறுவன் கையை நீட்டினான்.

அந்தப் பிஞ்சுக் கரத்தில் மூன்று லிரா சில்லறை இருந்தது.

"என்ன இது ?" "ஐயா... என் அம்மாவுக்கு மருந்து வாங்க எனக்கு தேவைப்பட்டது 37 லிரா. அது மட்டும் கேட்டுத்தான் தங்களுக்கு கடிதம் எழுதினேன். தாங்கள் 40 லிரா கொடுத்தீர்கள். மீதி சில்லறை இது..." என்று அவரிடம் கொடுத்தான்.

போப்பாண்டவர் அந்த சிறுவனை அருகில் அழைத்து முதுகில் தட்டிக்கொடுத்தார். அவனது துணிவையும் பணிவையும் பாராட்டினார். அந்தச் சிறுவனை அவரே படிக்க வைத்தார். அதற்கான எல்லா செலவுகளையும் அவரே ஏற்றுக் கொண்டார். சிறுவன் சிறிது சிறிதாக உயர்ந்து வாழ்க்கை என்கிற வானத்தில் அந்தப் பறவை சிறகடித்துப் பறந்தது.

இதற்கு எது காரணமாக அமைந்தது? சிறுவயதிலேயே அவனிடமிருந்த நேர்மை. வேடிக்கையாக ஒரு கதை சொல்வதுண்டு.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அது ஓர் அடர்ந்த காடு.

காட்டை ஒட்டி சிறிய வீடு.

அங்கே, ஒரு விறகுவெட்டி தன் மனைவியுடன் வசித்துவந்தான்.

அவனுக்கு, எரிக் என்ற மகனும் கிரேட்டல் என்ற மகளும் இருந்தனர்.

விறகுவெட்டியின்மனைவி, இவர்களுக்கு சித்தி. விறகுவெட்டிக்கு வருமானம் அதிகம் இல்லை. அதனால், சாப்பாட்டுக்கு மிகுந்த சிரமப்பட்டனர்.

ஒருநாள் இரவு விறகுவெட்டியின் மனைவி, எனக்கு ஒரு யோசனை.

இந்தப்பிள்ளைகள்நன்றாக இருக்க, காட்டுக்குள் கொண்டுபோய் விட்டுவிடலாம். யாராவது எடுத்து வளர்ப்பார்கள்.

அவர்களுக்கு நல்ல சாப்பாடு கிடைக்கும என்றாள்.

இதைக்கேட்ட விறகுவெட்டி வருத்தப்பட்டான்.

அவனுக்கும் வேறு வழி தெரியவில்லை.

பிள்ளைகளை காட்டில் விடுவதற்குச சம்மதித்தான்.

இவர்கள் பேசிக்கொண்டதை எரிக்கும் கிரேட்டலும் கேட்டனர்.

கிரேட்டல் அழ ஆரம்பித்தாள்.

அண்ணா, நம் கதி இப்படியா ஆக வேண்டும் என்றாள்.

கவலைப்படாதே. கடவுள் நம்மைக் கைவிடமாட்டார்.

நீ தூங்கு என்றான் எரிக்.

தங்கை தூங்கியதும், எரிக் ஆறங்கரைக்குச் சென்று, கூழாங்கற்களைக் கால்சட்டைப் பையில் நிரப்பிக கொண்டு, வீட்டுக்கு வந்து படுத்துக் கொண்டான்.

அடுத்த நாள்...

காட்டில் விறகு பொறுக்கணும், இதை மதியத்துக்குச் சாப்பிடுங்கள என்று இருவருக்கும் ஒரு ரொட்டித் துண்டைக் கொடுத்த சித்தி, அவர்களை அழைத்துக்கொண்டு கிளம்பினாள்.

எரிக், தன் பையிலிருந்த கூழாங்கறகளை ஒவ்வொன்றாகப் பாதையில் போட்டுக்கொண்டே வந்தான்.

காட்டுக்குள் வந்துவிட்டார்கள்.

ஓர் இடத்தில், குளிர் காயத் தீமூட்டிய சித்தி, நான் திரும்பி வரும் வரை இங்கேயே இருங்கள் என்று சொல்லி விட்டுக் கிளம்பினாள். எரிக்கும் கிரேட்டலும் ஓடியாடி விளையாடினர்.

மதியம், ரொட்டியைச் சாப்பிட்டனர். இருட்டத் துவங்கியது.

சித்தி வரப்போவது இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும்.

நிலா வரும் வரை காத்திருபபோம். நிலா வெளிச்சத்தில் பாதையில் போட்ட கற்களைப் பார்த்துக்கொண்டே வீட்டுக்குப் போய்விடுவோம் என்றான் எரிக்.

இருவரும் தூங்கிவிட்டனர்.

எரிக், திடீரென்று விழித்துப் பார்த்த போது, பகல் போல நிலவு ஒளி வீசியது.

தங்கையை எழுப்பினான்.

பாதையில்போட்டிருந்த கூழாங்கற்களைப் பார்த்துக்கொண்டே, வீட்டுக்கு வந்துவிட்டனர்.

சித்தி, இவர்களைப் பார்த்ததும் கோபப்பட்டாள்.

விறகுவெட்டியோ சந்தோஷப்பட்டான்.

கொஞ்ச நாள் போனதும் விறகுவெட்டியின் மனைவி,.

குழந்தைகளை இந்தத தடவை திரும்பி வர முடியாத தூரத்தில்விட்டுவிட்டு வருகிறேன்.

எனக்கும் வருத்தமாகத் தான இருக்கிறது.

வேறு வழி தெரியவில்லை. அவர்களை எடுத்து வளர்ப்பவர்கள் மூலம் நல்ல சாப்பாடு கிடைக்கும் என்றாள்.

இதைக்கேட்ட குழந்தைகள் இருவரும் கவலைகொண்டனர்.

எல்லோரும் தூங்கிய பிறகு, மெதுவாக எழுந்த எரிக வெளியே போக முயன்றான்.

சித்தி கதவைப் பூட்டி இருந்தாள். வெளியே செல்ல முடியாததால் எரிக்கால் கூழாங்கற்களைச சேகரிக்க முடியவில்லை.

கிரேட்டல் அழத் துவங்க, எரிக் அவளை சமாதானப்படுத்தினான்.

அடுத்த நாள்.

ஆளுக்கொரு ரொட்டித்துண்டைக்கொடுத்த சித்தி, காட்டுக்குள் கூட்டிப்போனாள்.

முன்பு அழைத்துப்போன தூரத்தை விட அதிக தூரம்.

எரிக், தன் ரொட்டித் துண்டை வழி நெடுகிலும்பிய்த்துப்போட்டுக்கொண்டே வந்தான்.

அடர்ந்த காட்டுப் பகுதிக்கு வந்துவிட்டார்கள்.

சுள்ளிகளைச் சேகரித்து தீ மூட்டிய சித்தி, விறகு வெட்டிக்கொண்டு வரும் வரை இங்கேயே இருங்கள் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

இருவரும் நாள் முழுக்க சந்தோஷமாக விளையாடினர்.

அசதியில் படுத்துத் தூங்கிவிட்டனர்.

திடீரென்று கிரேட்டல் விழித்துக் கொண்டாள். பயந்து அழத் துவங்கினாள்.

அழுகைச் சத்தம் கேட்டு விழித்த எரிக், தங்கையைச் சமாதானப்படுத்தினான். பயப்படாதே, நிலா வெளிச்சத்தில் ரொட்டித் துண்டுகளை அடையாளம் கண்டு, வீட்டுக்குப் போய்விடுவோம் என்றான்.

நிலா, வானில் வலம் வந்தது. அங்கிருந்து கிளம்பிய பல பாதைகளில் தேடினர். எங்கும் ரொட்டித் துண்டுகள் இல்லை.

எறும்புகளும்பறவைகளும்உணவாகத் தின்றிருக்கும் என்பதை எரிக் தாமதமாக உணர்ந்தான். ஒவ்வொரு பாதையிலும் முதலில் நடப்பதும், பின்னர் இந்தப் பாதை இல்லை என்று வேறு ஒரு பாதையில் போவதுமாக களைத்துப் போய் அமர்ந்தனர்.

அப்படியே தூங்கிவிட்டனர். விடியல் துடிப்போடு வந்தது. பறவைகளின்சத்தம், விலங்குகளின் ஓலம், ஓங்கி வளர்ந்த மரங்களின் உரசல் என்று கலவையான சத்தத்தில் கண் விழித்தனர்.

அப்போது, நீண்ட வாலுடன் ஒரு பறவை இவர்கள் அருகே வந்து அமர்நதது. இருவரையும் தன் அலகால் கொத்தி, சிறகை விரித்துக் காண்பித்தது.

ஒரு பாதையில் தத்தித்தத்தி நடந்தது. கிரேட்டல், நான் போட்ட ரொட்டித் துண்டுகளைச் சாப்பிட்டதற்காக, இந்தப் பறவை நம் வீட்டுக்கு வழி காட்டுகிறது. இதைப் பின்தொடர்வோம் என்றான் எரிக்.

(தொடரும்)



## 11.2014 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1759 - பாளையக்காரர் பூலித்தேவரின் நெற்கட்டான் செவ்வலைக் கோட்டையை இசுபல்கான் கான்சாகிப் என்பவனின் படைகள் வெடிகுண்டுகள் கொண்டு தாக்கின. ஆனாலும் கோட்டையைப் பிடிக்க முடியவில்லை.
- 1844 - டொமினிக்கன் குடியரசின் முதலாவது அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டது.
- 1860 - ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் 16வது அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரே குடியரசுக் கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது அதிபராவார்.
- 1891 - இலங்கை ஸ்டீம்ஷிப் கம்பனிக்குச் சொந்தமான நீராவிக் கப்பல லேடி ஹவ்லொக முதன் முறையாக கொழும்பு வந்தடைந்தது.
- 1913 - தென்னாபிரிக்காவில் மகாத்மா காந்தி இந்திய சுரங்கத் தொழிலாளர்களுடன் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்டார்.
- 1918 - போலந்தில் இரண்டாவது போலந்து குடியரசு அமைக்கப் பட்டது.
- 1935 - எட்வின் ஆம்ஸ்ட்ரோங் பண்பலை ஒலிபரப்பு பற்றிய ஆய்வை வெளியிட்டார்.
- 1943 - இந்தியாவின் வங்காளத்தில் நவகாளியில் இடம்பெற்ற இந்து-முஸ்லிம் கலவரத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியாக மகாத்மா காந்தி கல்கத்தாவிலிருந்து நவகாளி வந்து சேர்ந்தார்.
- 1944 - புளூட்டோனியம் முதற்தடவையாக உருவாக்கப்பட்டது. பின்னர் ஜப்பானில் கொழுத்த மனிதன் அணுகுண்டு போடுவதற்கு இது பயன்பட்டது.
- 1962 - ஐ.நா பொதுச்சபை தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கையைக்கண்டித்துத்தீர்மானம்நிறைவேற்றியது.
- 1963 - வியட்நாம் போர்: நவம்பர் 1 இல் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து, இராணுவத் தலைவர் டோங் வான் மின் தெற்கு வியட்நாம் அதிபரானார்.
- 1999 - அவுஸ்திரேலியர்கள் அனைத்து மக்கள் வாக்கெடுப்பு மூலம் பிரித்தானிய முடியாட்சியின் கீழ் தொடர்ந்திருக்க சம்மதம் தெரிவித்தனர்.

### பிறப்புகள்

- 1861 - ஜேம்ஸ் நெய்ஸ்மித், கூடைப்பந்து கண்டுபிடிப்பாளர் (இ. 1939)
- 1979 - லமார் ஓடம், அமெரிக்க கூடைப்பந்தாட்டக்காரர்

### இறப்புகள்

- 1893 - பீட்டர்சாய்க்கோவ்ஸ்கி, ரஷ்ய இசையமைப்பாளர் (பி. 1840)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

116

...ஆனால், லாகூரில் நடைபெற்ற முதல் மற்றும் இரண்டாவது இறுதிப்போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்று 3-2 என ஒருநாள் போட்டிகள் தொடரைக் கைப்பற்றியது.

பாகிஸ்தான் போட்டிகளை அடுத்து இலங்கையில் ஆசியக் கோப்பை போட்டிகள், இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் பங்களாதேஷ் நாடுகளுக்கு இடையே ஆரம்பமாயின. இதில் சச்சின் எடுத்த ரன்கள் அடைப்புக் குறியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஐக்கிய அரபு நாடுகள்- இந்தியா வெற்றி (18), இலங்கை- இந்தியா தோல்வி (11), பங்களாதேஷ்- இந்தியா வெற்றி (82), பாகிஸ்தான்- இந்தியா தோல்வி (78), இலங்கை - இந்தியா வெற்றி (18), இலங்கையுடனான இறுதிப்போட்டியில் இந்தியா தோல்வி. இதில் சச்சின் அடித்த 74 ரன்கள் பயனளிக்கவில்லை.

ஆஸ்திரேலியா தனது டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை விளையாட இந்தியா வந்தது. ரசிகர்கள் மகிழும் வண்ணம் சச்சின் ரன்கள் எதுவும் குவிக்கவில்லை. அடுத்த தென் ஆப்பிரிக்க அணியும் இந்தியா வந்தது. இந்தப்போட்டிகளிலும் சச்சின் ரசிகர்களை ஏமாற்றினார்.

> ஆஸ்திரேலியாவிற்கு எதிரான இறுதிப்போட்டியில் சச்சின் வழக்கமான பாணியில் நன்றாக விளையாடியிருந்தால் முடிவே மாறி இருக்கும்.



ஆஸ்திரேலியா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய இரு ஜாம்பவான்களுக்கு எதிரான ஆட்டங்களில் சச்சின் சோபிக்காதது ரசிகர்களைப் பெரிதும் கவலைப்படுத்தியது. சச்சினுக்கும் இது வருத்தத்தை அளித்தது என்றே கூற வேண்டும். எனவே, பங்களாதேஷ் நாட்டிற்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளிலாவது நன்றாக விளையாட வேண்டும் என்று சச்சின் தீர்மானித்துக் கொண்டார். ஆனால், பங்காளதேஷ் நாட்டிற்கு விளையாடப்போகும் இந்திய அணிக்கு திடீரென தீவிரவாதிகள் அமைப்பு எச்சரிக்கை விட்டதைத் தொடர்ந்து அங்கு விளையாடப்போகும் இந்திய அணிக்குப் போதிய பாதுகாப்பு வேண்டும் என்று கோரப்பட்டது. ஒரு கட்டத்தில் இந்த பயணத்தையே ரத்து செய்து விடலாமா என்று கூட யோசித்தனர். ஆனாலும், இந்திய வீரர்கள் பங்காளதேஷ் செல்ல தயாராகவே இருந்தனர்.

டாக்காவில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் சச்சின் ரசிகர்களை ஏமாற்றமல் 248 ரன்கள் குவித்தார். இதன் மூலம் அவர் 34 ஆவது டெஸ்ட் சதத்தை அடித்தார். உலகிலேயே அதிக டெஸ்ட் செஞ்சுரிகள் அடித்த கவாஸ்காரின் ரிகார்டை சமன்படுத்தினார். சிட்டகாங்கில் நடைபெற்ற அடுத்த டெஸ்ட் போட்டியில் 36 ரன்கள் எடுத்தார். இரண்டிலும் இந்தியா வெற்றி பெற்று 2-0என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. பங்காளதேஷ் இரண்டு ஒருநாள் போட்டிகளில் நடந்தன.

### மீண்டும் உலகக் கோப்பைப் போட்டிகள்!

இரண்டிலும் இந்தியா வெற்றி பெற்று ஒருநாள் தொடையும் 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

பாங்காளாதேஷ் பயணம் முடிந்த கையோடு பாகிஸ்தான் அணி இந்தியாவில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாட இன்சமாம் தலைமையில் வந்தது. சொந்த மண்ணில் கிடைத்த தோல்வியை மறக்காத நிலையில் அதே போல் இந்திய அணியை அவர்கள் சொந்த மண்ணில் தோற்கடிக்க கங்கணம் கட்டிக் கொண்டு வந்தது பாகிஸ்தான். இந்த டெஸ்ட் போட்டியை இந்தியர் கள் மட்டுமின்றி உலகமே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. காரணம் இதில் 35ஆவது செஞ்சுரியை அடித்தால் உலகிலேயே டெஸ்ட் போட்டிகளில் அதிக டெஸ்ட் சதங்கள் அடித்த பெருமை சச்சினுக்கு வந்து சேரும். உலகளாவிய சிறப்பு என்பதால் உலகமே இவரது ஆட்டத்தை காணத் தயாரானது.

சண்டிகரில் நடைபெற்ற முதல் போட்டியில் சச்சின் அபாரமாக விளையாடினார். 70, 80, 90என அவரது ரன்வேகம் ராக்கெட்டை மிஞ்சும் விதமாக உயர்ந்து கொண்டிருந்தது. மொத்த உலகமே அவர் எடுக்கும் போகும் இன்னும் பத்து ரன்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தது.

கே. ரமேஷ் (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...ஏதேனும் எண்ணம் வந்தால் வரட்டும். உங்கள் மனதை ஒரு தொலைக் காட்சியைப் பார்ப்பதுபோல், எண்ணங்களை எதிர்க்காமலும் அல்லது அவற்றை எடை போடாமலு வெறுமனே கவனியுங்கள். அமைதியாகவும் ஆனந்த மயமாகவும் இருங்கள். இப்பொழுது 20 நிமிட ரீங்காரத்தினால் உருவான சக்தி

## கவலைகள் இன்றி வாழ்தல்!

உங்கள் இருப்புத் தன்மையின் எல்லா மூலை முடுக்குகளிலும் நுழைந்து, அதை ஆழமாகச் சுத்தம் செய்து விடும்.

(பங்கேற்பாளர்கள் மென்மையான இசையுடன் மஹா மந்திர தியானம் செய்கிறார்கள்)

ஓம் சாந்தி சாந்தி சாந்தி ஹி!


மெதுவாக, மிக மெதுவாக உங்கள் கண்களை திறவுங்கள். இந்த அமைதியை உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள். நாம் அடுத்த அமர்வில் சந்திப் போம்.

மணி பூரக தொப்புள் பகுதியில் இருக்கிறது. சமஸ்கிருதத்தில் மணி பூரகம் என்றால் ஆபரண நகரம் என்று பெயர்.

கவலைகளால் இந்தச் சக்கரம் பூட்டப்படுகிறது.

நமது கவலைகளைப் பற்றி கவலைப்படாமல் இருப்பதன் மூலம் இந்தச் சக்கரத்தை மலரச் செய்ய முடியும்!

தியான முறை மணிபூரக சுத்தி க்ரியா-கிறிஸ்தவ மதத்திலிருந்து எடுக்கப்பட்டது.



இந்தச் சக்கரம் நிரந்தரமான கவலைகளுடன் தொடர்புடையது.

கவலை என்றால் என்ன என்று நாம் ஆராய்வோம்.

கவலை என்றால் என்ன என்று யாராவது சொல்ல முடியுமா?

(ஒரு பெண்மணி பதிலளிக்கிறார்...)

ஸ்வாமிஜி எங்கள் வியாபாரப் பிரச்சனைகள் பற்றியோ அல்லது குழந்தைகள் பற்றியோ அல்லது உடல் நலத்தைப் பற்றியோ நினைக்கும் பொழுது கவலையடைகிறோம்...

நீங்கள் சொல்வது கவலைக்கான காரணங்கள். நான் உங்களிடம் கவலைக்கான காரணங்களைக் கேட்கவில்லை. கவலை என்றால் என்ன என்று கேட்கிறேன்? காரணங்களைக் கேட்டால் இந்த வகுப்பு ஒரு முடிவே இல்லாமல் போய்க்கொண்டிருக்கும்! நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு பெரிய பட்டியலுடன் தயாராக இருப்பீர்கள்... சொல்லுங்கள்...

ஸ்வாமிஜி என் வியாபாரம் படுத்துவிட்டது... ஸ்வாமிஜி எனக்கு வீட்டில் மன நிம்மதியே இல்லை! ஸ்வாமிஜி உங்களால் கற்பனை கூட பண்ண முடியாத அளவிற்கு எனக்கு நிறைய பிரச்சினைகள்..! எனக்கு குழந்தைகளில்லை அதுதான் எனக்கு கவலை! ஸ்வாமிஜி என் குழந்தைகளைப் பற்றித்தான் என் கவலையெல்லாம்...!

(மக்களிடமிருந்து பலத்த சிரிப்பு)

நாம் எப்பொழுதும் நிறைய கவலைகளுடன் இருக்கிறோம். கவலைகள் இல்லையென்றாலும் நமக்குக் கவலைகளே இல்லையென்று கவலைப்பட ஆரம்பித்துவிடுகிறோம்.

ஆன்மீகம் 66

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம்-2015

...அத்தகைய காணிகளில் பயிரிடுபவர்களுக்கு விவசாயக் கடனை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

பதவியணிக்கு தேவையான பயிற்சிகளை வழங்கும் அதே வேளை, விரிவாக்கற் சேவைகளுக்காக கமத்தொழில் சேவைகள் திணைக்களம், விவசாயத் திணைக்களம் மற்றும் மாகாண விவசாய பிரிவுகள் என்பவற்றிற்கான பதவியணியினை நாம் ஏற்கனவே அதிகரித்துள்ளோம்.

### சிறுபற்றுநில பெருந்தோட்டம்

கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த வருட வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கமைய உற்பத்தியினை அதிகரிப்பதற்காக சிறுபற்றுநில தேயிலைச் செய்கையாளர்களுக்கு நீரினை தேக்கி வைப்பதற்காக நிலத்தினை தயார்படுத்தல், மண் பாதுகாப்பு, சேதனைப் பசளைகளின் பிரயோகம் என்பவற்றிற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஏக்கர் ஒன்றிற்கு 5,000 ரூபாவினை தொடர்ந்து உதவியாக வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இந்த பயிர்கள் அனைத்திறகும் 50 கிலோ கிராம் உரப்பசளை ரூபா 1,250 மானிய விலையில் தொடர்ந்து வழங்கப்படும்.

சமையல் எண்ணெய், தேங்காயெண்ணெய் மற்றும் பாம் எண்ணெய் என்பவற்றின் மீது தற்பொழுது சுங்கத்தில் விதிக்கப்படும் உயர்ந்த வரிகள் தெங்கு பெருந்தோட்டத்தின் நீண்ட கால நலனை கருத்திற் கொண்டு தொடர்ந்து பேணப்படும்.

பனை மற்றும் கித்துல் கித்துல் பெருந்தோட்டங்கள் அத்துடன் அதனுடன் இணைந்த கைத்தொழிலகளை அபிவிருத்தி செய்வதற்கான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் ஏற்பாடு செய்யப்படும்.

தேயிலை, இறப்பர், தெங்கு, கறுவா மற்றும் மிளகு என்பன மூலப்பொருளாக ஏற்றுமதி செய்யப்படும்பொழுது விதிக்கப்படும் செஸ்வரி அத்தகைய பயிர்களின் அபிவிருத்தி, செய்கையினை ஊக்குவித்தல் என்பவற்றிற்காக வருமானத்தினை பயன்படுத்தும் வகையில் மேலும் உறுதியளிக்கப்பட்டது.

தேயிலை சிறுபற்றுநில செய்கையாளர்களுக்கு மீள் நடுகை மானியம் ஏக்கர் ஒன்றிற்கு ரூபா 142,000 இலிருந்து ரூபா 200,000 மில்லியனாகவும் புதிய நடுகைக்கான உதவுதொகை ரூபா 100,000 இலிருந்து ரூபா 160,000 ஆக அடுத்த வருடத்திலிருந்து அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

நவீன இயந்திரங்கள் மற்றும் பதனிடல் உபகரணங்களுடன் சிறிய தேயிலை தொழிற்சாலைகளை முழுமையாக நவீனமயப்படுத்துவதற்கு நிதி உதவி வழங்கப்படும்.

இறப்பர் வளர்ப்பவர்களை ஊக்குவிக்கும் வகையில் இறப்பர் இறக்குமதி மீதான செஸ் வரியினை கிலோ கிராம் ஒன்றிற்கு 10 ரூபாவினால் அதிகரிப்பதற்கும் 2014 நவம்பரிலிருந்து சிறியளவிலான இறப்பர் செய்கையாளர்களுக்கு கிலோ கிராம் ஒன்றிற்கான உத்தரவாத விலை ரூபா 300 ஆக செயற்படுத்தப்படுவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

ஈர வலயத்திலுள்ள சிறிய இறப்பர் செய்கையாளர்களுக்கு மழைக் கவச உபகரணங்கள் வழங்கப்படுவதுடன் இறப்பர் செய்கைக்காக வேறு இடங்களில் காணிகள் வழங்கப்படும்.

இதற்காக இறப்பர் திணைக்களத்திற்கான ஒதுக்கீட்டினை ரூபா 3,500 மில்லியனாக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

தெங்கு செய்கையாளர்களுக்கான புதிய மற்றும் மீள் நடுகை மானியம் ஏக்கருக்கு ரூபா 7,000 இலிருந்து ரூபா 10,000 ஆக அதிகரிப்பதற்கும் தெங்குக் காணிகளை புனரமைப்பதற்கான மானியமாக ஏக்கருக்கு ரூபா 15,000 இலிருந்து ரூபா 20,000 ஆக அதிகரிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

தெங்குக் காணிகளில் மண் மேம்பாடு மற்றும் நீர் கிடைப்பனவு என்பவற்றிற்காக கப்புறுக முதலீட்டுக் கடனை ரூபா 3 மில்லியன் வரை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இந்நடவடிக்கைகளுக்காக ரூபா 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

சிறிய ஏற்றுமதி பயிர்களுக்கான நடுகை உதவுதொகையினை 25 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு முன்மொழிவதுடன் விவசாய ஏற்றுமதி திணைக்களத்திற்கு ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

பழங்கள் மற்றும் மரக்கறிகளின் நடுகைக்காக வழங்கப்பட்ட மானியத்தினை 50 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கும் முன்மொழியப்படுகின்றது.

### பாரியளவிலான பெருந்தோட்டங்கள்

பாரியளவிலான பெருந்தோட்டங்கள் 50 வருட குத்தகை ஏற்பாட்டின் பேரில் 1992 இல் தனியார் மயப்படுத்தப்பட்டன.

எவ்வாறாயினும், ஒரு சில பெருந்தோட்டக் கம்பனிகள் மாத்திரமே அவற்றினது உற்பத்தித் திறனை அதிகரித்திருப்பதற்கான குறிப்பிடத்தக்க அபிவிருத்தியினைக் காட்டியுள்ளன.

எனவே, எனது கடந்த வருட வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுடன் உடன்படாத ஒவ்வொரு பெருந்தோட்டக் கம்பனியும் பிரதான பங்காளராக அரசாங்கம் இருக்கும் வகையில் குத்தகையினை இரத்துச் செய்தல் உள்ளடங்கலாக ஒவ்வொரு கம்பனியின் கீழுள்ள பெருந்தோட்டங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பில் உரிய தீர்மானங்களை எடுப்பதற்காக 6 மாத அறிவித்தல் விடுக்கப்படும்.

ஒவ்வொரு கம்பனிக்கும் 8 வருட முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட 6 சதவீத வட்டியுடன் கடன் திட்டங்களை செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிவதுடன் அவை சிறந்த செயலாற்றுகையுடைய கம்பனியாக இருக்க வேண்டுமென்பதுடன் மீள் நடுகை, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சமூக அபிவிருத்தி போன்ற விடயங்களில் உடன்படுகின்ற அதேவேளை பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதியின் அளவினையும் அதிகரித்தல் வேண்டும்.

இவ்வசதியானது அரசாங்கத்திற்கு வாடகை கொடுப்பனவு நிலுவையினை செலுத்தாத கம்பனிகளுக்கு அவை அந்நிலுவைகளை செலுத்தும் வரை வழங்கப்படமாட்டாது.

### பெருந்தோட்ட உயர்தொழில் திறமைகள் மற்றும் ஆராய்ச்சி

சிறந்த விவசாய நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்ப திறன்கள் தொடர்பாக உயர்தொழில் திறன்மிக்க பெருந்தோட்டக்காரர்கள் மற்றும் சிறு தோட்டக்காரர்களின் புதிய சந்ததியினரை உருவாக்குவதற்காக பெருந்தோட்ட கல்வி நிறுவகமொன்றினை தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவகங்கள் மீதான அரசாங்க முதலீடுகள் இரட்டிப்பாக்கப்படுவதுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான வரியினை மூன்று மடங்காக குறைப்பதன் மூலம் தனியார் துறை முழுமையான நன்மையினை பெற்றுக் கொள்ள முடியும்.




தலவாக்கலையிலுள்ள தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தினை அபிவிருத்தி செய்வதற்கும் அகலவத்தையிலுள்ள இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தினை சகல வசதிகளும் கொண்ட ஆராய்ச்சி நிறுவகமாக மாற்றுவதற்கும் ரூபா 3,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### விவசாய ஓய்வூதியமும் பயிர் காப்புறுதி திட்டமும்

16.1 2014 ஜனவரியிலிருந்து 63 வயதிற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு மாதாந்த ஓய்வூதியமாக ஆகக் குறைந்தது ரூபா 1,250 இனை வழங்குவதற்கான ஓய்வூதியத் திட்டத்தினை நான் செயற்படுத்தினேன்.

இந்த பங்களிப்பு ஓய்வூதிய நிதியினை வலுப்படுத்துவதற்காக அரசாங்கத்திலிருந்து ரூபா 1,000 மில்லியனை மூலதன பங்களிப்பாக நான் ஏற்கனவே வழங்கியுள்ளேன்.

இந்நிதியமானது ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பயிர்க் காப்புறுதி திட்டத்தின் பயிர் அழிவுக்கான நட்டஈட்டிற்கும் விரிவாக்கப்படும்.

இந்த ஓய்வூதிய திட்டம் செயற்படாதிருந்த காலப்பகுதியில் பங்களிப்புச் செய்யாதவர்களை தொடர்ந்தும் பங்களிப்புச் செய்வதற்கு அனுமதிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

எனவே, விவசாய ஓய்வூதியத் திட்டத்திற்கு அடுத்த மூன்று வருடங்களின்போது ரூபா 5,000 மில்லியனை மூலதன பங்களிப்பாக வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### ஏற்றுமதி கைத்தொழில்கள்

கௌரவ சபாநாயகர் அவர்களே, ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் 12 சதவீத குறைந்த வருமான வரியினை பெற்றுள்ளதுடன் உயர்தர இயந்திரங்களுக்கான அதிக தேய்வு பெறுமான ஏற்பாடுகளையும் சுங்க முறி மற்றும் சுதந்திர துறைமுக வசதிகளையும் கொண்டிருக்கின்றனர்.

அத்தகைய ஏற்றுமதிகளுக்கு மேலும் வசதியளிக்கும் வகையில் வங்கித்தொழில், தொற்று நோய் தடுப்பு, தர நிர்ணயம் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குகின்ற நிலையமொன்று சுங்கத் திணைக்களத்தில் தாபிக்கப்படும்.

ஏற்றுமதி கைத்தொழிலினை நவீன மயப்படுத்துவதனை ஊக்குவிக்கும் வகையில் துரிதப்படுத்தப்பட்ட தேய்வுப் பெறுமான ஏற்பாடு, 1 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட முதலீட்டினைக் கொண்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பங்கிலாபங்கள் மீதான வருமான வரியிலிருந்து விலக்களிப்பு என்பவற்றினை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அத்தகைய கைத்தொழில்களின் ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வியாபாரக் குறியீட்டு ஊக்குவிப்பு மீதான செலவினங்களுக்கு மூன்று மடங்கு கழிவு வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

உயர் பெறுமதிமிக்க உற்பத்திகளான தேயிலை, இறப்பர், தெங்கு, கறுவா மற்றும் வாசனைத்திரவியம் என்பவற்றின் ஏற்றுமதி இப்பயிர்களின் செய்கையினை அதிகரிக்கும் வகையில் ஊக்குவிக்கப்படுவதுடன் ஆரம்ப நுகர்வுப் பொருள் ஏற்றுமதிகள் மீதான உயர்மட்ட செஸ் வரியும் பேணப்படும்.

இலங்கையின் பொருள் என்ற அடையாளத்துடன் உலக சந்தையில் உயர் பெறுமதி கொண்ட தேயிலையினை ஊக்குவிப்பதற்காக உள்நாட்டு தேயிலை உற்பத்தியாளர்களுடன் தேயிலைச் சபையினால் சேகரிக்கப்பட்ட விசேட செஸ் வரியில் 50 சதவீதத்தினை பகிர்ந்து கொள்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ஜப்பான், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கான சந்தை வாய்ப்புகள் இருதரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளினூடாக இந்த நுகர்வுப் பொருட்களுக்கும் விரிவாக்கப்பட்டது.

இந்த வகையில் சீனாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 2015 இன் அரையாண்டிலிருந்து செயற்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் நாட்டின் ஏற்றுமதியில் பாரிய வளர்ச்சியினை ஏற்படுத்தும்.

ஏற்றுமதிக்கு தேவையான பொதியிடல் பொருட்கள் மீதான இறக்குமதி தீர்வையினை அத்தகைய பொருட்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதனை எவ்வகையிலும் பாதிக்காத வகையில் குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### மீன்பிடிக் கைத்தொழில்

கௌரவ சபாநாயகர் அவர்களே, கடந்த 5 வருடங்களுக்குள் மீன்பிடி இரட்டிப்பாக அதிகரித்துள்ளதுடன் 500,000 மெற்றிக் தொன்னினை விஞ்சியதாக காணப்படுகின்றது.

கருவாடு உற்பத்தி அதிகரித்ததுடன் நெத்தலி, மாசி, தகரத்திலடைத்த மீன் மற்றும் மீன் உணவு என்பன அதிகரித்த அதேவேளை, குறித்த உற்பத்திகள் தொடர்பான இறக்குமதிகளும் 70,000 மெற்றிக் தொன்னாக குறைவடைந்தது.

தெரிவு செய்யப்பட்ட மீன்பிடி துறைமுகங்களில் கருவாடு பதனிடல் நிலையங்களை உருவாக்குவதுடன் அனைத்து மீனவர்களினதும் சிறு அளவிலான மீனவர்களின் மீன் உற்பத்தியினை உத்தரவாத விலையொன்றில் கொள்வனவு செய்வதனை செயற்படுத்துவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

உள்நாட்டு மீன்பிடி உற்பத்தியானது மொத்த மீன் உற்பத்தியில் 20 சதவீதமாகக் காணப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கிடையில் நீரியல்வள உற்பத்திகள் நியாயமான ளவு கவனத்திற் கொள்ளப்பட்டது.

எனவே, அத்தகைய தொழில் முயற்சியாளர்கள் தமது மீன் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்கு கடன் திட்டங்களை நான் முன்மொழிகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடூர படுகொலை காட்சிகளை பார்க்குமாறு சிறுவர்களை கட்டாயப்படுத்திய ஐ.எஸ்.ஐ.எஸ்

## அதிர்ச்சி தகவல் வெளியீடு

(டமாஸ்கஸ்)

பிணைக் கைதிகளின் தலையை கொய்து படுகொலை செய்யப்படும் வீடியோ பதிவுகளை, சிறுவர்களிடம் கட்டாயப் படுத்திப் பார்க்க வைப்பதாக ஐ.எஸ். ஐ.எஸ். இயக்கத்தினர் மீது மனிதவுரிமைகள் கண்காணிப்பு ஆணையம் குற்றம் சாட்டியுள்ளது.

சிரியா மற்றும் ஈராக்கில் தாக்குதல் நடத்திவரும் ஐ.எஸ். ஐ.எஸ். கிளர்ச்சியாளர்கள், அங்கிருக்கும் நகரங்களை தங்கள் வசப்படுத்தி அம்மக்களை பிணைக் கைதிகளாக வைத்துள்ளனர்.

குறிப்பாக குர்து இன சிறுவர்களை அவர்கள் பலவிதங்களில் தங்களது இயக்கத்தில் இணைப்பது போன்ற முயற்சிகளை எடுத்து வருகின்றனர். இதுவரை அந்த அமைப்பு சுமார் 150 சிறுவர்களை கடந்த 6 மாதங்களில் மட்டும் கடத்தி தனிமைப் படுத்தி வைத்துள்ளனர்.

இந்த நிலையில், கிளர்ச்சியாளர்களிடமிருந்து மீட்கப்பட்ட சிறுவர்களில் 4 பேரை தேர்வு செய்து அவர்களிடம் ஐ.எஸ்.ஐ.எஸ். நடத்திய விதம் மற் றும் அவர்களின் செயற்பாடுகள குறித்து சர்வதேச மனிதவுரிமைகள் ஆணையம் கேட்டறிந்துள்ளது. அதில் அதிர்ச்சித் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட சிறுவர்கள் அனைவரும் தினமும் 5 முறை தொழுகை மேற்கொள்ள வேண்டும், மத போதனைகளை தீவிர கட்டாயத்தோடு பின்பற்ற அவர்கள் வற்புறுத்துப்பட்டுள்ளனர்.

மேலும், பல்வேறு நாடுகளை சேர்ந்த பிணைக் கைதிகள் கடத்தப்பட்டு தலை கொய்து படுகொலை செய்யப்பட்ட வீடியோ பதிவுகளை சிறுவர்கள் பார்க்க கட்டாயப்படுத்தியதாக அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மீட்கப்பட்ட சிறுவன் கூறும்போது, அவர்கள் சொல்வதை நாங்கள் கேட்கவில்லை என்றால் அவர்கள் எங்களை அடிப்பார்கள். அவர்கள் எப்போது பச்சை நிற ஹோஸ் அல்லது தடியான வயர்களால் செய்யப்பட்ட சவுக்கில் அடிப்பார்கள். எந்த காரணம் சொன்னாலும் கேட்கமாட்டார்கள், அவர்கள் எங்கள் உள்ளங்கால்களின் மீதும் அடித்திருக்கின்றனர்.

கொரிய மொழியில் பழமொழிகளையும் கற்று தந்தார்கள். அவை எங்களுக்கு புரியவில்லை என்றால், அதற்கும் அடிப்பார்கள்" என்று சிறுவன் கூறியதாக அந்த ஆணையம் தெரிவித்தது. (இ-5)

# சவுதி அரேபியாவில் ஐவர் சுட்டுக்கொலை

சவுதி அரேபியாவில் சன்னி பிரிவினரின் ஆட்சி நடந்து வருகிறது. அங்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள அல் - ஆசா மாவட்டம், அல் தல்வா கிராமத்தில் சிறுபான்மை இனத்தவர்களான ஷியா பிரிவினர் அதிகம் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் முஹர்ரம் பண்டிகை நாளில், அங்குள்ள ஒரு கட்டடத்தில் இருந்து ஏராளமான பொதுமக்கள் வெளியே வந்து கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு முகமூடி அணிந்து வந்த 3 மர்ம ஆசாமிகள், கண் இமைக்கும் நேரத்தில் பொதுமக்கள் மீது இயந்திர துப்பாக்கிகளாலும், கைத்துப்பாக்கிகளாலும் சரமாரியாக சுட்டனர். இந்த தாக்குதலில் 5 பேர் பரிதாபமாக உயிரிழந்ததாகவும், 9 பேர் படுகாயம் அடைந்ததாகவும் முதல் கட்ட தகவல்கள் கூறுகின்றன. சம்பவ இடத்தை பொலிஸார் சுற்றி வளைத்து 'சீல்' வைத்தனர். (இ-5)

# அமெரிக்காவின் ஜனாதிபதி ஒபாமா ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம்

## நவம்பர் 10 ஆம் திகதி ஆரம்பம்



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இம்மாதம் 10ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை ஆசிய நாடுகளில் சுற்று பயணம் மேற்கொள்கிறார்.

அவர் சீனா, மியான்மர் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து தொடர்ச்சியாக மாநாடுகளில் பங்கேற்றல் மற்றும் இருதரப்பு பேச்சுவார்த்தை ஆகியவற்றை மேற்கொள்கிறார் என வெள்ளை மாளிகை தகவல் தெரிவித்துள்ளது.

ஒபாமா இம்மாதம் 10-12 ஆகிய நாட்களில் ஏ.பி.ஈ.சி. தலைவர்கள் கூட்டம் மற்றும் ஏ.பி.ஈ.சி. தலைமை செயல் அதிகாரி மாநாடு ஆகியவற்றில் கலந்து கொள்வதோடு, சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங்கை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறார். இத்தகவலை வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் ஜோஷ் எர்னெஸ்ட் அறிக்கை ஒன்றின் வழியே தெரிவித்துள்ளதாக ஜின்ஹுவா செய்தி இதழ் தகவல் கூறுகின்றது.

அதன் பின்னர் இம்மாதம் 12-14ஆம் திகதி களில் மியன்மார் நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் ஒபாமா அங்குள்ள நேபிடா நகரில் கிழக்கு ஆசிய மாநாடு மற்றும அமெரிக்க-ஏசியான் மாநாட்டிலும் கலந்து கொள்கிறார். அந்நாட்டு ஜனாதிபதி தெயின் சியென் உடன் இருதரப்பு கூட்டம் ஒன்றிலும் ஒபாமா கலந்து கொள்கிறார்.

இதேவேளை அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் இம்மாதம் 15,16 ஆகிய நாட்களில் தங்கும் ஒபாமா ஜி-20 மாநாட்டில் கலந்து கொண்டு ஆசிய-பசுபிக் பகுதியில் அமெரிக்க தலைமைத்துவம குறித்து உரையாற்றுகிறார் என தகவல் தெரிவிக்கின்றது. (இ-5)

# தாய்வானில் பயங்கரம்

தாய்வான் நாட்டின் மத்திய சாங்குவா நகரைச் சேர்ந்தவர் ஹுவாங் சென். அவருடைய காதலி சூ கெய். சூ கெய் யோகா ஆசிரியராக உள்ளார். பணக்காரரான சென் தனது துணையாக இருப்பதற்காக யோகா ஆசிரியரான கெய்க்கு மாதம் 2 ஆயிரம் அமெரிக்க டொலர் கொடுத்து வந்தார். சமீப காலமாக சூ கெய்யின் நடத்தையில் சென்னுக்கு சந்தேகம் வந்தது.

கடந்த வியாழக்கிழமை தனது காதலி வீட்டில் படுக்கையில் தூங்கி கொண்டு இருந்தார். அப்போது சென் அவரை கட்டிப்போட்டார். பின்னர் கத்தியால் காதலியின் மூக்கு, காதுகள், உதடுகளை துண்டு துண்டாக வெட்டினார். அவற்றை கழிப்பறை கோப்பைக்குள் போட்டு மறைத்தார். பின்னர் அவசர பிரிவுக்கு அழைப்பு விடுத்தார். (இ-5)

# அமெ. உலக வர்த்தக மையம் 13 ஆண்டுகளுக்கு பின்னர்!



அமெரிக்காவில் அல் கொய்தா பயங்கரவாதிகளால் கடந்த 2001 ஆம் ஆண்டு தரைமட்டமாக்கப்பட்டு, மீண்டும் எழுப்பப்பட்டுள்ள உலக வர்த்தக மையம், 13 ஆண்டுகளுக்குப் பின் னர் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது.

அந்த 104 மாடிக் கட்டடத்தின் 25 அடுக்குகளைக் குத்தகைக்கு எடுத்துள்ள "காண்டி நாஸ்ட்" பதிப்பக நிறுவனத்தின் 175 பணியாளர்கள், அந்தக் கட்டட த்தில் தங்கள் பணியைத் தொடங்கினர்.

"ஒன் வேர்ல்டு டிரேட் சென்டர்" எனறழைக்கப்படும் இந்த வர்த்தக மையம், 390 கோடி டொலர்கள் (சுமார் ரூ.23,932 கோடி) செலவில் கட்டப்பட் டுள்ளது.

ஆயிரத்து 776 அடி (541 மீற்றர்) உயரத்தில், இது அமெரிக்காவின் மிக உயர்ந்த கட்டடமாகும். உலக அளவில், நான்காவது மிக உயர்ந்த கட்டடம் இது. 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதியில் நிகழ்த்தப்பட்ட இரட்டை கோபுரத் தாக்குதலில் 2ஆயிரத்து 700இற்கும் அதிகமானோர் பலியான அதே இடத்தில் இந்தக் கட்டடம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)





# குர் ஆனை அவமதித்ததாக புகார்; 2 கிறிஸ்தவர்கள் உயிருடன் எரிப்பு

பாகிஸ்தானில், புனித குர் ஆனை அவமதித்ததாக எழுந்த புகாரின்பேரில், 2 கிறிஸ்தவர்கள் உயிருடன் எரித்துக் கொலலப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில், உள்ள கசூர் மாவட்டத்தில், கோட் ராதாகிஷான் என்ற கிராமம் உள்ளது. இங்கு புனித குர்ஆனை எரித்ததாக, ஷசாத் மசி(வயது 35), அவரது மனைவி ஷமா (வயது 31) ஆகிய 2 கிறிஸ்தவர்கள் மீது எழுந்த புகாரையடுத்து, அவர்கள் உயிருடன் தீ வைத்து எரிக் கப்பட்டுள்ளன.

இது குறித்து, அவர்களுடைய உறவினர் இமானுவேல் சர்ப்ராஜ் கூறும்போது, முகம்மது யூசுப் என்பவருக்கு சொந்தமான செங்கல் சூளையில், ஷசாத்தும், ஷமாவும் வேலை பார்த்து வந்தனர். அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படாததால், தங்களுடைய 4 குழந்தைகளுடன், அவர்கள் வேலையை விட்டுச் செல்வதற்கு முடிவு செய்தனர். ரூ.5 இலட்சம் அளித்தால் மட்டுமே, வெளியே செல்ல விடுவேன் என்று யூசுப் கூறியுள்ளார். இது தொடர்பாக இரு தரப்புக்கு இடையே வாக்கு வாதம் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சிறைத்தண்டனை பெற்ற பெண் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிப்பு



ஈரானில் ஆண்கள் பங்கேற்ற கரப்பந்தாட்ட போட்டியை பார்த்ததற்காக ஓராண்டு சிறைத் தண்டனை பெற்ற பெண் நேற்று முன்தினம் முதல் சிறையில் உண்ணா விரத போராட்டத்தை தொடங்கியுள்ளார்.

கான்ச்சே கவாமி (வயது 25) என்ற அந்த பெண் ஈரான் வம்சாவளியை சேர்ந்த பிரிட்டன் பிரஜை ஆவார்.

கான்ச்சே கவாமி கடந்த ஜூன மாதம் ஈரான்- இத்தாலி இடையே நடநத கரப்பந்தாட்ட விளையாட்டு போட்டியை பார்க்க சென்ற குற்றத்துக்காக விளையாட்டு மைதானத்திலேயே கைது செய்யப்பட்டார்.

அவருடன் பெண் நிருபர்கள் சிலரும் கைது செய்யப்பட்டனர். அடுத்த 2 நாட்களில் கவாமி விடுவிக்கப்பட்ட நிலையில் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

இது குறித்து ஈரான் பொலிஸ் அதிகாரி கூறும்போது, "ஈரானில் ஆண்கள் விளையாட்டு போட்டிகளில் பெண்கள் கலந்து கொள்ள தடையுள்ளது.

பெண்கள் மீது ஆண்கள் முறையற்ற வகையில் அத்துமீறி நடப்பதை தவிர்க்கும் விதத்திலேயே இது போன்ற விதிகள் இங்கு உள்ளன. அதனை மதித்து நடக்க வேண்டியது பெண்களின் கடமை" என்று கூறினார்.

ஈரானில் இஸ்லாமிய நடைமுறைகளை முன்வைத்து அரசு நிர்வாகம் நடக்கிறது.

இதனால் அங்கு இது போன்று பல விதிகள் நடைமுறையில் உள்ளன. இதனால் விதிகளை மீறி நடந்ததாக கான்ச்சே மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

வழக்கு விசாரணை முடிந்து கான்ச்சேவுக்கு ஓர் ஆண்டு சிறைத் தண்டனை விதித்து அநநாட்டு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. இந் நிலையில் கான்ச்சே சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கியுள்ளார்.

கான்ச்சே கவாமியின் [illegible] தைனை எதிர்த்து ஈரானில் பிரிட்டன்வாசிகள் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் கான்ச்சே கவாமிக்கு ஆதரவாக இணையத்தளத்தின் மூலம் சுமார் 5 இலட்சம் ஆதரவாளர்களை திரட்டி அவரை விடுதலை செய்ய போராடி வருகின்றனர். இதற்கு சர்வதேச அளவில் ஆதரவு குவிந்து வருகிறது. (இ-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானின் உயர் விருதுக்குத்தேர்வு மன்மோகனுக்கு காங்கிரஸ் வாழ்த்து

(சென்னை)

ஜப்பானின் உயரிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு காங்கிரஸ் கட்சி வாழ்த்து தெரிவித்துள்ளது.

ஜப்பான் அரசின் உயரிய குடிமக்கள் விருதான தி கிராண்ட் கார்டன் ஆப் தி ஆர்டர் ஆப் தி பவுலோனியா பிளவர்ஸ் விருதுக்கு மன்மோகன் சிங் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்த விருது 1888ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பொதுவாக முன்னாள் பிரதமர்கள், மூத்த அமைச்சர்கள், நீதிபதிகள், தூதர்களுக்கு மட்டுமே இந்த விருது வழங்கப்படுகிறது. இவ்விருது ஆண்டுதோறும் வழங்கப்படுவது இல்லை. தகுதியான நபர்கள் கண்டறியப்பட்டால் மட்டுமே விருது அறிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் தி கிராண்ட் கார்டன் ஆப் தி ஆர்டர் ஆப் தி பவுலோனியா பிளவர்ஸ்' விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வெளியிட்டுள்ள அறிக்கையில், மன்மோகன் சிங்குக்கு விருது அறிவிக்கப்பட்டிருப்பதால் நாடே பெருமைப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

காங்கிரஸின் மூத்த தலைவர் அஜய் மக்கான் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில் மன்மோகன் சிங்கை வாழ்த்தியும் பிரதமர் நரேந்திர மோடியை மறைமுகமாக சாடியும் உள்ளார்.

வெற்றுக் கோஷங்களை எழுப்புவோருக்கு (மோடி) உலகம் மரியாதை செலுத்தாது. மன்மோகன் சிங் போன்ற செயல்வீரர்களை மட்டுமே கௌரவிக்கும். அந்த வகையில் ஜப்பானின் மிக உயரிய விருதை பெறும் முதல் இந்தியர் என்ற பெருமை மன்மோகன் சிங்குக்கு கிடைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

டோக்கியாவில் உள்ள ஜப்பான் பேரரசரின் அரண்மனையில் நடைபெறும் விழாவில் மன்மோகன சிங் உட்பட 4ஆயிரத்து 29 பேருக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன. (இ-5)

பாரதச் செய்தி



# சோதனையான காலகட்டத்தில் விலகுவது சந்தர்ப்ப வாதமே

## வாசன் மீது இளங்கோவன் குற்றச்சாட்டு

காங்கிரஸ் கட்சியிலும், ஆட்சியிலும் பதவி சுகத்தை அனுபவித்துவிட்டு, சோதனையான காலகட்டத்தில் விலகுவது சந்தர்ப்ப வாதம் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் குற்றம் சாட்டியுள்ளார்.

தனிக்கட்சி தொடங்கியுள்ள முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன், கட்சியின் பெயர், கொடியை விரைவில் அறிவிப்பதாகக் கூறியுள்ளார். இந்நிலையில், தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவராக சமீபத்தில் பொறுப்பேற்ற ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது, காங்கிரஸ் கட்சியிலும், ஆட்சியிலும் பதவி சுகத்தை அனுப வித்துவிட்டு, கட்சிக்கு சோதனையான காலகட்டத்தில் கட்சியில் இருந்து விலகுவதும், விமர்சிப்பதும் சந்தர்ப்பவாதம். காங்கிரஸ் கட்சியில் இருந்து விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் தான் வெளியேறியுள்ளனர்.

தமிழகத்தில் 2016ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி, காமராஜர் ஆட்சி அமைக்கும். காங்கிரஸ் இல்லாமல் யாரும் ஆட்சி அமைக்க முடியாத நிலை கட்டாயம் ஏற்படும்.

தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் நல்ல மனிதர். அவரால் தனித்துச் செயற்பட முடியாததைப் பார்க்க பாவமாக இருக்கிறது. இவ்வாறு இளங்கோவன் கூறினார்.

சத்தியமூர்த்தி பவனில் இளங்கோவனை காங்கிரஸ் கட்சி அகில இந்திய செயலாளர்கள் செல்லக்குமார், திருநாவுக்கரசர், குளச்சல் எம்எல்ஏ பிரின்ஸ், மாநில துணைத் தலைவர் வசந்தகுமார், மூத்த சட்டத்தரணி காந்தி உள்ளிட்டோர் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

அதைத் தொடர்ந்து பிரின்ஸ் எம்எல்ஏ, நிருபர்களிடம் கூறும்போது, பதவி வரலாம், போகலாம். ஆனால், காங்கிரஸில் தொண்டனாக இருக்கவே விரும்புகிறேன். சோதனையான காலகட்டத்தில் கட்சியைவிட்டுப் போவதை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றார். உங்கள் நண்பர் ஜான் ஜேக்கப் எம்எல்ஏ வாசன் அணிக்கு போயிருக்கிறாரே என்று கேட்டதற்கு, 'அவர் திரும்பவும் காங்கிரஸுக்கே வருவார் என்றார். (இ-5)



# தெலுங்கானாவில் 5 மாதத்தில் 350 விவசாயிகள் தற்கொலை

தெலுங்கானா மாநில முதலமைச்சராக சந்திரசேகர ராவ் பதவி ஏற்ற ஐந்து மாத காலத்தில் வறட்சி, எதிர்பார்த்த விளைச்சல் இல்லாதது போன்ற காரணங்களால் கடன் சுமைக்கு ஆளானதாக கூறப்படும் சுமார் 350 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தெலுங்கானாவின் மேடக மாவட்டத்தில் உள்ள லுகய பள்ளி பகுதியை சேர்ந்த அன்ஜி நாயக் எனும் 28 வயது விவசாயி கடன் சுமையால் தசரா தினத்தன்று பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

தனக்கு சொந்தமான விவசாய நிலத்தில் தொடர்ச்சியாக பயிரிட்ட பயிர்கள் எதிர்பார்த்த விளைச்சலை தராததால் கடன்சுமைக்கு ஆளானதால் இந்த விபரீத முடிவை அன்ஜி எடுத்ததாக அவரது தாய் ரத்னம் கூறியுள்ளார். மகனின் மறைவுக்கு பின் தன் பேரக்குழந்தைகள், மருமகள் எப்படி பிழைக்க முடியும் என கேள்வி எழுப்பும் அவர், இன்னும் மீள முடியாத சோகத்தில் ஆழ்ந்துள்ளார்.

இதேபோல மாநிலம் முழுவதும் பல விவசாயிகள் தற்கொலை செய்துவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து விவசாயத்துறை அமைச்சர் போச்சரம் ஸ்ரீனிவாஸ் தெரிவிக்கையில், விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதை தடுக்க அரசு முடிந்த அளவிற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது, இந்த சூழல் நாடு முழுவதும் நிலவுகிறது, இயற்கை பேரிடர், குறைவான மழை, பயிர் சேதம் போன்றவற்றால் இந்த துயரம் நிகழ்கிறது என தெரிவித்தார். (இ-5)

# தீவிரவாதிகளின் மிரட்டலால் கொல்கத்தாவில் பதற்றநிலை



மேற்கு வங்க மாநில தலைநகர் கொல்கத்தாவில் நேற்றுடன் 3 நாட்களுக்கு கடற்படை தின விழா கொணடாடப்படுகிறது.

இதையொட்டி விசாகப் பட்டினம் கடறபடை தளத்தில் இருந்து ஐ.என.எஸ். குக்ரி, ஐ.என்.எஸ். சுமித்ரா ஆகிய இரண்டு போர்க் கப்பல்கள் கொல்கத்தா ஊக்ளி நதி கழி துறைமுகப் பகுதியில் உள்ள கித்தர்பூரில் நிறுத்தப்பட்டுள்ளன. பொதுமக்கள் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தொடர்ந்து கொல்கத்தாவில் உள்ள பள்ளி மாணவ - மாணவிகள் போர்க் கப்பல்களுக்குள் அழைத்துச் செல்லப்பட இருந்தனர். இதை அறிந்த பாகிஸ்தான் தீவிரவாதிகள் கொல்கத்தா துறைமுகத்தில் மிகப்பெரிய தாக்குதல் நடத்த திட்டமிட்டனர்.

கடற்படை தின விழா நடக்கும் நாளில் இந்த தாக்குதலை நடத்த வேண்டும் என்று பாகிஸ்தான் தீவிரவாதிகள் முடிவு செய்திருந்தனர். இந்த நாச வேலைத திட்டத்துக்கு லஷ்கர் -இ-தொய்பா, அல்கொய்தா, இந்தியன் முஜாகிதீன் ஆகிய தீவிரவாத அமைப்புகளை சேர்ந்த சுமார் 16 தீவிரவாதிகள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி கொடுக்கப்பட்டு இருப்பதாக தெரியவந்துள்ளது.

தீவிரவாதிகளின் இந்த சதி திட்டத்துக்கு பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.யும், பாகிஸ்தான் கடற்படையும் தேவையான எல்லா உதவிகளையும் செய்து கொடுத்துள்ளது. 16 தீவிரவாதிகளையும் மீனவர்கள் போல சிறு, சிறு கட்டு மரப்படகுகளில் கொல்கத்தாவுக்குள் ஊடுருவ செய்ய பாகிஸ்தான் கடற்படை உதவிகள் செய்துள்ளது.

பாகிஸ்தான் கடற்படையில் பணியாற்றிய முன்னாள் வீரர்கள் சிலரும் இந்த சதிதிட்டத்துக்கு தீவிரவாதிகளுக்கு உதவ அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். எனவே தற்கொலைப் படை தீவிரவாதிகள் எந்த நேரத்திலும் கொல்கத்தா துறைமுகத்துக்குள் ஊடுருவ முயற்சி செய்யக்கூடும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் உளவுத் துறையும், தீவிரவாதிகளும் ஒருங்கிணைந்து மேற்கொண்டுள்ள இந்த நாச வேலை திட்டத்தை இந்திய உளவுத்துறை நேற்று முன்தினம் காலை கண்டு பிடித்து மத்திய உள்துறைக்கு அவசரம் அவசரமாக தகவல் கொடுத்தது. இதைத் தொடர்ந்து மேற்கு வங்க அரசை மத்திய உள்துறை அமைச்சு உஷார்படுத்தியது.

அதன் பேரில் நேற்று கொல்கத்தா நகரில் வரலாறு காணாத அளவுக்கு உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கொல்கத்தா துறைமுகம் 5 அடுக்கு பாதுகாப்பு வளையத்துக்குள் கொணடு வரப்பட்டுள்ளன. கொல்கத்தா விமான நிலையம், புகையிரத நிலையங்கள், மக்கள் அதிகம் கூடும் இடங்கள் மற்றும் ஹால்டியா உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மீனவர்கள் போர்வையில் தீவிரவாதிகள் ஊடுருவி விடக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளதால், கொல்கத்தாவில் கடலோர காவல் படையினரும் பொலிசாரும் தீவிர ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இது தவிர கொல்கத்தா நகரம் பாதுகாப்பு வளையத்துக்கு கொண்டு வரப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளது. (இ-5)

## பா.ஜ.க.கூட்டணியிலிருந்து ம.தி.மு.கவை நீக்க வேண்டும்



சுப்பிரமணியன் சுவாமி கோரிக்கை

தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து ம.தி.மு.க.வை நீக்குமாறு பா.ஜனதா மூத்த தலைவர் சுப்பிரமணியசுவாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுபற்றி அவர் விடுத்துள்ள அறிக்கையில், கூட்டணி கட்சிகளுக்கு இருக்க வேண்டிய தேசிய பார்வைக்கு முரணாக ம.தி.மு.க. நடந்துகொள்கிறது. அதன் தலைவர் வைகோ, தேசியத்துக்கு எதிராகவும், பிரிவினைவாதத்துக்கு ஆதரவாகவும் குரல் கொடுத்து வருகிறார். எனவே, பா.ஜனதா கூட்டணியில் ம.தி.மு.க. நீடிக்க வேண்டுமா என்பது குறித்து முடிவு எடுக்குமாறு கட்சி தலைவர் அமித்ஷா, தமிழக பொறுப்பாளர் ராஜீவ் பிரதாப் ரூடி ஆகியோருடன் பேசி உள்ளேன். ம.தி.மு.க.வை நீக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொடருந்து பயணத்தில் தொடரும் அசௌகரியம்

## பயணிகள் விசனம்

(மல்லாவி)

வடபகுதிக்கான யாழ்ப்பாணம் -கொழும்பு, கொழும்பு- யாழ்ப்பாணத்துக்கான புகையிரத போக்குவரத்தின் போது பயணிகள் இடர்பாடுகளை எதிர்கொள்வதாகவும் இதனை புகையிரத திணைக்களம் கவனத்தில் கொண்டு புகையிரத பயணம் சிறப்பாக அமைய துரிதகதியில் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் புகையிரத பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத் திலிருந்து கொழும்பிற்கான புகையிரத சேவையை கடந்த மாதம் 14 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைத்து முதல் பெருமளவான பொது மக்கள், அரச உத்தியோகத்தர்கள் உட்பட விடுமுறையில் செல்லும் அனைத்து தரப்பு பாதுகாப்பு படையினரும் புகையிரதத்தில் பயணிக்கின்றனர்.

இந்நிலையில் சிலர் கோஷ்டியாகச் சேர்ந்து புகை யிரத பெட்டிகளை ஆக்கிரமிப்பு செய்வதுடன் பயணிகளுக்கு முன்பாகவே தமது பயணப் பொதிகளில் இருந்து மதுபான போத்தல்களை எடுத்து மது அருந்துகின்றனர்.

போதை தலைக்கு ஏறியவுடன் ஒருவரோடு ஒருவர் சண்டையிடுகின்றனர்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இரவு நேர தபால் புகையிரதத்தில் இவ்வாறான கோஷ்டி சண்டை இடம் பெற்றுள்ளது.

இதன் போது பயணிகள் சிலர் தாக்கப்பட்டதுடன் ஏனைய பயணிகள் அச்சத்துடன் பயணத்தை தொடர்ந்தனர். மேலும் புகையிரதத்தில் பயணிக்கும் சில ஜோடிகள் தமக்கு அருகில் பயணிகள் இருப்பதை மறந்து விரும்பத்தகாத செயற்பாடுகளில் ஈடுபடுவதால் குடும்பத்துடன் பயணிக்கும் ஏனைய பயணிகள் அசௌகரியத்திற்குள்ளாகின்றனர். அத்தோடு பயணிகளின் பொதிகளைத் திருடும் திருடர்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே புகையிரத திணைக்களம் இதனை கவனத்தில் கொண்டு புகையிரத பயணிகள் பாதுகாப்பிற்கென பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் ஊடாக இப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர முடியும்.

அத்துடன் ஆபத்தான வேளைகளில் தொடர்பு கொள்ள புகையிரத பெட்டிகளில் அவசர தொலைபேசி இலக்கங்களை காட்சிப்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-15)

# கமக்கார அமைப்பினரை சந்திக்கிறார் ஜனாதிபதி

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட வடபகுதியிலுள்ள அனைத்து கமக்கார அமைப்பினரையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இச் சந்திப்பு எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் ஜனாதிபதியின் வாசஸ்தலமான அலரிமாளிகையில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஜனாதிபதி அண்மைக் காலமாக பல்வேறு தரப்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளை அலரி மாளிகைக்கு அழைத்து அவர்களின் வேலைத் திட்டங்கள் தொடர்பான குறை நிறைகளைக் கேட்டறிந்து வருகின்றார்.

இதன் ஓர் கட்டமாக மேற்படி கமக்கார அமைப்பினரையும் அவர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இது தொடர்பில் கமக்கார அமைப்பின் பிரதிநிதியொருவர் வலம்புரிக்கு தெரிவிக்கையில்,

எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு பயணிக்கும் இவ்வமைப்பினர் மறுநாள் திங்கட்கிழமை ஜனாதிபதியை சந்திப்பார்கள்.

அத்துடன் துணுக்காயிலிருந்து கொழும்பு செல்கின்ற கமக்கார அமைப்பாளர் வவுனிக்குளத்துடன் பறங்கியாற்றினை இணைப்பது தொடர்பான புள்ளிவிபரத்தகவல்களுடன் செல்லவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (2-15)




## முழுநிலா அறிவோர் ஒன்றுகூடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாதம் தோறும் நடைபெறும் முழுநிலா அறிவோர் ஒன்றுகூடல் இன்று மாலை 4.30மணிக்கு கரைச்சி பிரதேச சபை முன்றலில் நடைபெறும்.

இதன்போது மாலை 4.50 மணிதொடக்கம் 5.20 மணி வரை மேல் நாட்டவரும் தமிழ் நாட்டவரும் எனும் தலைப்பில் நா.வேலாயுதம் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

அத்தோடு மாலை 5.30 மணிக்கு கேள்விக்கான விடை நிகழ் வும் இடம்பெறும்.

எனவே ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது பங்கேற்குமாறு தமிழ்ச் சங்கம் கேட்டுள்ளது. (அ-2-277)

# ஓட்டைக் குடிசையினுள் வாழ்கின்றோம்

# 186 குடும்பங்களின் கண்ணீர்க்கதை

(குருமன்காடு)

வவுனியா ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள சிதம்பரபுரம் முகாமில் வசிக்கும் 186 குடும்பங்களும் எந்த விதமான அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருவதாகவும் தமக்கான காணிகளை வழங்கி மீள் குடியேற்றுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



யுத்தம் காரணமாக பல பகுதிகளிலும் இருந்து இடம் பெயர்ந்த மக்களை தங்க வைப்பதற்காக 1990ஆம் ஆண்டு வவுனியா ஆசி குளம் கிராம அலுவலர் பிரிவில் உருவாக்கப்பட்ட நலன்புரி நிலையமே சிதம்பரபுரம் முகாமாகும்.

இம் முகாமில், பலர் மீள் குடியேற்றப்பட்ட போதும் 186 குடும்பங்கள் தற்போதும் இம் முகாமிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

சீரற்ற கூரைகளும் இடிந்து விழும் நிலையில் உள்ள மண் குடிசைகளின் சுவர்களுமாக காணப்படும் இம் முகாமில் உள்ள மக்கள் பெரும் துன்பம் நிறைந்த வாழ்வை அனுபவிக்கின்றனர்.

மழை காலங்களில் நேரடியாகவே மழை நீர் வீட்டுக்குள் விழுவதால் தினமும் நித்திரையின்றி வாழும் இம் மக்கள் தமக்கு காணிகளை வழங்கி மீள்குடியேற்றுமாறு பல தடவைகள் அதிகாரிகளிடம் கோரியிருந்தனர்.

எனினும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலையில், 24 வருடங்களாக இம் முகாமிலேயே வாழும் துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பற்றைகள் சூழ்ந்து பாம்புகளுடன் ஏனைய விசப்பூச்சிகளுக்கு மத்தியிலும் வாழும் இம் மக்கள் தினமும் பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியல் தமது வாழ்க்கையை கொண்டு செல்கின்றனர். பாடசாலை செலலும் பல மாணவர்கள் இருந்தும் மின்சாரம் இன்மையால் அவர்களது கல்வியும் கேள்விக்குறியாகியுள்ளது.

இதேவேளை 186 குடும்பங்களுக்கும் ஒரு சில பொதுவான மலசலகூடங்களே காணப்படுவதால் காடுகளையும் அம் மக்கள் அவ்வப் போது பயன்படுத்துவதாக தெரிவிக்கின்றனர். இதனால் ஈ,கொசு தொலலை காணப்படுவதால் நோய் ஏற்பட வாய்ப்புள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

குடிநீர் பம்பிகள் இருபது வரை இருந்தும் அவற்றில் இரண்டு மாத்திரமே இயங்கக் கூடியதாக இருக்கின்றதாக இம் மக்கள் தமது ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மலசலகூடம், தண்ணீர், மின்சாரம், வீடு, காணி என்ற எந்தவிதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையிலேயே வாழ்கிறார்கள்.

இவர்கள் தொடர்பில் வட மாகாண முதலமைச்சர் மற்றும் வன்னி அபிவிருத்தி குழு தலைவரும் வர்த்தக கைத்தொழில் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தலைமையில் கடந்த ஜூலை மாதம் 4 ஆம திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் காணிகளை வழங்கி குடியேற்ற வேண்டும் என ஏகமனதாக முடிவெடுக்கப்பட்ட போதும் அது தொடர்பில் எந்த வதமான நடவடிக்கைகளும் இதுவரை நடைபெற்றதாக தெரியவில்லை என அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பெய்துவரும் அடைமழைக்கு மத்தியில் வாழ்கின்ற இம்மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற படுத்தித் தருமாறும் தம்மை வரைவில் மீள்குடியேற்றி முகாம் வாழ்க்கையிலிருந்து விடுதலையளிக்குமாறும் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-250)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

எனவே இக் கூட்டத்திற்கு இக் கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-2)

## மாணிக்க விழாவும் மலர் வெளியீடும்

(மல்லாவி)


துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மு/கோட்டை கட்டியகுளம் அ.த.க.பாடசாலையின் மாணிக்க விழாவும் மாணிக்கக்கோட்டை மலர் வெளியீடும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் இ.தங்கராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.


சிறப்பு விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன், துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2-15)

# மின்கம்பத்துடன் மோதி தடம் புரண்டது லொறி

வவுனியா ஈரப்பெரியகுளம் ஏ-9 வீதியில் பயணித்த லொறி ஒன்று மின்கம்பத்துடன் மோதி நேற்று அதிகாலை 4.45 மணியளவில் தடம்புரண்டுள்ளதுஎன்று வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவிக்கையில், தென்பகுதியில் இருந்து கூரை ஓடுகளை ஏற்றி பயணித்த லொறி ஒன்று எதிரே வந்த பேருந்துக்கு வழிவிடமுற்பட்ட போது பாதையை விட்டு விலகி எதிரே இருந்த பிரதான மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதனால் மின் கம்பம் கடுமையாக சேதமடைந்துள்ளதுடன் அப்பகுதிக்கான மின்சாரமும் தடைப்பட்டுள்ளது. இதேவேளை சேதமடைந்த மின்கம்பத்தை மாற்றி மின்சாரத்தை விநியோகிப்பதற்கான நடவடிக்கையும் லொறியை மீட்பதற்கான நடவடிக்கையையும் தாம் மேற்கொண்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீளெழுச்சி திட்டத்தின் ஊடாக ஒரு கோடியே 10 இலட்சம் ரூபா செலவில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள நட்டாங்கண்டல் கிராம சேவையாளர் பகுதியில் எருவில் குளம் புனரமைப்பின் 70 வீதமான புனரமைப்பு வேலைகள் முடிவுற்ற நிலையில் மிகுதி வேலைகள் நடைபெறுவதைப் படத்தில் காணலாம். (படம்:-மல்லாவி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'என் எழுத்தாயுதம்' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் திசைகாட்டி குழுமத்தின் அனுசரணையுடன் மூத்த தமிழ் ஊடகவியலாளர் என்.வித்தியாதரன் எழுதிய என் எழுத்தாயுதம் (ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுப் பகிர்வு) நூல் வெளியீட்டுநிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில் திசைகாட்டி குழுமஸ்தாபகரும் சட்டத்தரணியுமான வி.எஸ்.நிரஞ்சன் முன்னிலையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை திசைகாட்டி குழும இயக்குநர் சபை சிரேஷ்ட உறுப்பினர் சி.சுபசீலனும் வரவேற்புரையினை வட மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராஜா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மேலும் வெளியீட்டுரையினை கம்பவாரிதி இ.ஜெயராஜ், நயப்புரையினை சிரேஷ்ட சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

இதேவேளை யாழ். மாவட்ட பராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் நூலினை வெளியிட்டு வைக்கவுள்ளார். (இ-5)

# வரலாற்று வீரர்களினது வரிசையில் மகிந்தவை இணைக்க வேண்டுமாம்

## ஹெல உறுமய கோரிக்கை

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பெய்ரை வரலாற்று வீரர்களின் வரிசையில் இணைக்கப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த தேசத்திற்கு அத்தியாவசியமான நலன் ஒன்றை உருவாக்கிக் கொடுத்தார்.

30 ஆண்டு காலமாக நீடித்து வந்த போரை ஜனாதிபதி நிறைவுக்குக் கொண்டு வந்தார்.

கடந்த காலங்களில் ஆட்சி வகித்த ஜனாதிபதிகள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் புலிகளை தோற்கடிக்க முடியாது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷவை வெற்றி பெறச் செய்து தேசத்தின் எதிர்காலத்தை பூர்த்தி செய்ய வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

அதிகாரத்தை தேவையின்றி பயன்படுத்தாது தூய்மையான அரசியலில் ஜனாதிபதியை ஈடுபடச் செய்ய வேண்டும்.

குறைகள் இன்றி தூய்மையான முறையில் நாட்டை ஆட்சி செய்ய அரசியல் அமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமானது.

இதன் காரணமாகவே அரசியல் அமைப்பில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ஜாதிக ஹெல உறுமய கட்சி முன்வைத்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# மாலக சில்வாவின் பிணை நிராகரிப்பு

கொழும்பில் இரவு களியாட்ட விடுதியொன்றில்வைதது பிரிட்டிஷ் பிரஜைகளான தம்பதிகளை தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள, அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவுக்கு பிணை வழங்குவதை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

குறித்த மோதல் சம்பவத்தில் காயமடைந்துள்ள மாலக சில்வா கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற காரணத்தினால், அவர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவில்லை என்று அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஹேமந்த வர்ண குலசூரிய தெரிவித்தார்.

இதனிடையே, மாலக்க சில்வாவை அடையாள அணிவகுப்பொன்றில்நிறுத்துவதறகு உத்தரவிடுமாறு பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த கோரிக்கைக்கு ஆட்சேபம் தெரிவித்த மாலக சில்வாவின் சட்டத்தரணி சந்தேக நபரின் படங்கள் ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ள காரணத்தினால், அவரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துவதன் மூலம் சந்தேக நபருக்கு அநீதி இழைக்கபபடுவதாகத் தெரிவித்தனர்.


எனினும், அந்த வாதத்தை நிராகரித்த நீதவான் மொஹமட் சஹாப்தின், சந்தேக நபரை அடையாள அணிவகுப்பில் நிறுத்துவதற்கு அனுமதி வழங்கினார்.

அவ்வாறே, சந்தேகநபருக்கு பிணை வழங்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையையும் நீதவான் நிராகரித்தார். இதன்படி சந்தேக நபரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதாகவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள இரவு களியாட்ட விடுதியொன்றில் பிரித்தானிய பிரஜைகள் இருவரை தாக்கியதாக மாலக சில்வா மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இராணுவ மேஜர் ஒருவரை தாக்கியதாகவும் அதறகு முனனர் இரவு களியாட்ட விடுதியொன்றில் கணக்காய்வாளர் ஒருவரைத் தாக்கியதாகவும் மாலக சில்வா மீது நீதிமன்ற விசாரணைகள் நடந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)







மீரியாபெத்த தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவையடுத்து பூனாகலை தமிழ் மகாவித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் சிலர்...

# பக்தியுடன் கூடிய கலானுபவத்தில் சங்கமமாகிய வ.கு.சி

இன்றைய உலகில் வாழும் ஒவ்வொருகலைஞரும் தமதுகலையை வியாபாரநோக்கிலேயே மேடையிலும் தொழிலாகவும் கையாண்டு வருகின்றனர். ஆனால் கலையானது ஆத்மார்த்தமான பக்தியுடன் பயன்படுத்துவதற்கான, இறைவனை அடைவதற்கான, ஒரு வழிமுறையாகவே முன்னைய காலங்களில் பயன்படுத்தப்பட்டன. இசையைப் பொறுத்த வரையில் கர்நாடக சங்கீதமாகட்டும், தேவார திருவாசகங்கள் ஆகட்டும் அவை இறை வழிபாட்டிற்கான, இறைவனை அடைவதற்கான வழிமுறையாகவே நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும், வாக்கேயகாரர்களாலும் பாடப்பட்டு வந்துள்ளன.

பின்னர் அவர்களால் பாடப்பட்டவற்றை மேடை நிகழ்வுகளுக்காக பயன்படுத்தத் தொடங்கி விட்டோம். ஆனால் அவ்வாறான இசையை இன்றுவரை தமது ஆத்மார்த்தமாக இறைவனுக்கு அர்ப்பணித்து வந்தவர் தான் அளவெட்டி சங்கீத வித்துவான் அ.மு.வர்ண குலசிங்கம் என்றால் மிகையாகாது.

கீரிமலைக்கு அண்மையில் உள்ளநாதலை என்னும் சிற்றூரில் வீரசைவ-சிவ பூஜை மரபைச் சேர்ந்த முருகேசு-நாகம்மா தம்பதியருக்கு 1930 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி வர்ணகுலசிங்கம் மகனாகப் பிறந்தார். சிவ பூஜையை சிரத்தையுடன் ஆற றுவது மட்டுமன்றி ஆடல், பாடல், நாடகம், நடித்தல, சுவாமியை அலங்கரித்தல் என இறை வழிபாட்டோடு தன்னை அர்ப்பணித்திருந்த இவரது தந்தையிடமே தமது இசைக்கல்வியை ஆரம்பித்தார்.



அதாவது தனது சிறுபராயத்தில் திருமுறைகளையும் நாடகப் பாடல்களையும் தந்தையாரிடம் கற்றுக் கொண் டார்.

இராமநாதன் இசைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட போது உலகப்புகழ் இசை மேதை மகாராஜபுரம் விஸ்வநாதையரின் மகன் மகாராஜபுரம் சந்தானம் அதிபராகக் கடமையாற்றி பரீட்சைகளை நடத்தினார். அதன் முதல்பரீட்சையில் பேராசிரியர் பி.சாம்பமூர்த்தி, பேராசிரியர் ஸ்ரீநிவாசராவ் ஆகியோர் பரீட்சகர்களாக இருந்து பரீட்சைகளை நடத்தினர். அம்முதல் பரீட்சையில் வர்ணகுல சிங்கம் தோற்றி முத லாம் பிரிவில் அதி விசேட சித்திபெற்று "சங்கீதரத்தினம்" பட்டத்தைப் பெற்றார்.

சங்கீதபூஷணம் கனக சுந்தரத்திடமும், பின்னர் இராமநாதன் இசைக் கல்லூரி அதிபராக இருந்த கல்யாண கிருஷ்ண பாகவதரிடமும் வீணை இசையைக் கற்றுக் கொண்ட இவர், இலங்கை வானொலி வாத்திய இசைக் கலைஞர்களின் உதவியுடன் வயலின் இசையையும் கற்றுக் கொண்டார். இவ்வாறு பல்வேறு வாத்தியங்களையும் கற்றமை தனக்கு ஸ்ருதி ஸ்தானசுத்தமாகத் தன்னை உணர்ந்து பாட உதவியதாக பலமுறை கூறியுள்ளார்.

பலராலும் அன்பாக 'வ.கு.சி' என அழைக்கப்படும் இவர் இசை, பண்ணிசை, ஒலி நாடாக்கள் சிலவற்றை வெளியிட்டதுடன் கோணேஸ்வரப் பெருமான் மீது கீர்த்தனைகளையும் பாடியுள்ளார். 2 ஆவது உலக இந்து மகாநாட்டில் 'திருமுறைகளும், பண்களின் மாற்றங்களும்' எனும் தலைப்பில் ஒருகட்டுரையும், 'தோற்றம் துடியதனில்'எனும் தலைப்பில் உடுக்கையைப் பற்றிய வரலாற்றுக் கட்டுரையையும் சமர்ப்பித்துப் பேராசிரியர்களின் பாராட்டைப் பெற்றார்.

1998 ஆம் ஆண்டில் 'கலாபூஷணம்' விருதினையும் 2005 ஆம் ஆண்டில் "கலாரத்தினம்" விருதினையும் பெற்றுக் கொண்ட இவர் பல மாணவர்களை உருவாக்கியுள்ளார்.

இன்றையகாலத்தில் ஒருவர் தன்னுடைய இறப்பை தானே அறிந்துவிடும் திறன் யாருக்காவது உள்ளது எனில எம்மால் நம்பமுடிவதில்லை. ஆனால் வ.கு.சி இறைவனடி சேர்வதற்கு இரு நாட்களுக்கு முன்னர் தனது அயலவரிடம் தான் இன்னும் இரு தினங்களே இவ்வுலகில் இருக்கமுடியும் என அறிவித்துள்ளார். அதன படி "ஐப்பசிமாதம் கேதார கௌரி விரத நன்னாளில் அமாவாசை தினத்தில் கௌரிக் காப்பெடுக்கும் வேளையில்" (23.10.2014) தியான நிலையிலேதமது இன்னுயிரை இறைவனின் பாதங்களில் சேர்த்து பிறவா நிலையை எய்தியுள்ளார்.

மாணவி
'கலாவித்தகர்'
திருமதி. குமுதா உமாகாந்தன்
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத் துதி பாடுகிறவர்களைவிட என்னைக் கடுமையாக விமர்சிப்பவர்களால்தான் நான் அதிகம் நன்மை பெற்றுள்ளேன். –காந்தியடிகள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எதிர்க்கட்சி தேவையில்லாத வடக்கு மாகாண அரசு

வடக்கு மாகாண அரசின் ஒரு வருட ஆட்சிக் காலத்தில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. இத்தகைய விமர்சனங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன? என்பது குறித்த ஓர் ஆய்வு நடத்தப்படுவது அவசியமாகிறது.

பொதுவில் மத்திய, மாகாண அரசுகளின் செயற்பாட்டில் எங்களுக்குத் திருப்தியில்லை என்று எதிர்க்கட்சிகள் கூறுவதே வழமை. ஆனால் வடக்கு மாகாண அரசைப் பொறுத்தவரை ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் மாகாண அரசின் செயற்பாடு தொடர்பில் அதிருப்தி தெரிவித்திருப்பது அதிசயமான உண்மை.

வடக்கு மாகாண சபையை ஆட்சியில் வைத்திருக்கும் அரசின் செயற்பாட்டில் பல குறைபாடுகள் உள்ளன என்று ஆளும் தரப்பு உறுப்பினர்கள் கூறுவது மிகவும் வரவேற்கத்தக்கது. நாங்களே எங்களிடம் இருக்கக் கூடிய குறைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்துவது ஆரோக்கியமானது.

எனினும் ஆளுந்தரப்பின் உறுப்பினர்கள் கூறுகின்ற குறைபாடுகள் அல்லது குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வடக்கு மாகாண அரசு எத்தகைய பார்வையைச் செலுத்துகிறது என்பதிலேயே எல்லாம் தங்கியுள்ளது.

ஆளுந்தரப்பின் உறுப்பினர்கள் சிலர் கூறுகின்ற விடயங்களில் உண்மைத்தன்மை உண்டு என மாகாண அரசு கருதினால் மீள்சீரமைப்பு நடந்தேறும். மாறாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அபத்தமானவை எனக் கருதப்பட்டால் அது வடக்கு மாகாண அரசுக்குள் முரண்பாட்டை ஏற்படுத்தும். எதுவாயினும் கடந்த ஒரு வருட கால அளவில் வடக்கு மாகாண அரசு சில ஒழுங்குபடுத்தல்கள்– ஏற்பாடுகளை செய்யவில்லை என்பது நிரூபணமாகிறது.

வடக்கு மாகாண சபையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற கையோடு முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் விழாக்களில் கலந்து கொள்வதில்லை என்றும் தத்தம் கடமைகளை ஒழுங்குபடுத்துவதில்– மேற்பார்வை செய்வதில்– மக்களுக்கு உதவுவதில் முழுமையாக ஈடுபடுவது என்றும் தீர்மானித்திருந்தால் எத்தனையோ விடயங்கள் சீர்பெற்றிருக்கும்.

ஆனால், வடக்கு மாகாண சபைக்குட்பட்ட நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் மக்களின் தேவைகள்; அவர்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து சிந்திக்காமல் விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் கலந்து கொண்டு மாலை மரியாதைகள் என்ற சுய கௌரவப்படுத்தலுக்கு முன்னுரிமை அளித்தமையால் எல்லாம் சுணைகெட்டுப் போயிற்று. இதன் காரணமாகவே வடக்கு மாகாண அரசுக்குள் இருந்தே விமர்சனங்கள் வெளிவருகின்றன.

எதுவாயினும் வடக்கு மாகாண அரசின் செயற்பாடு மிகவும் திறமையாக இருப்பது அவசியம். வடக்கு மாகாண அரசு திறமையாகச் செயற்படும் போதே தமிழர்களுக்கு நாடு கிடைத்தால் அவர்கள் எப்படி எல்லாம் தங்களின் தாயகத்தை அபிவிருத்தி செய்வார்கள் என்பதை உலகம் உறுதிப்படுத்தும்.

இதைவிடுத்து முன்பிருந்ததை விட இப்போது படுமோசம் என்ற நிலைமையை வடக்கு மாகாண அரசு ஏற்படுத்துமாயின் எங்கள் தொடர்பான கருத்து நிலை சர்வதேச மட்டத்தில் ஆரோக்கியமற்றதாகவே இருக்கும்.

எது எப்படி இருந்த போதிலும்; வடக்கு மாகாண அரசு என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள், நம்பிக்கைகள், அபிலாசைகள் என்பவற்றினால் உருவாக்கப்பட்டது. அந்த நம்பிக்கைகளை உடைத்து விடாமல் மாகாண அரசை புடம்போட்டு அதன் செயற்பாட்டை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

## தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக் கைதி மரணமானார்

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் சுகவனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளதாக திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் தெரிவித்துள்ளார்.

காசோலை மோசடி சம்பவம் தொடர்பில் கொழும்பு, கொட்டாஞ்சேனை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட குறித்த நபர் வவுனியா நீதிமன்ற உத்தரவுக்கமைய வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

எனினும் குறித்த நபரை பிணையில் விடுதலை செய்ய நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த போதும் அவரை பிணை எடுக்க எவரும் முன் வரவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த கைதியை உடல் சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் அவர் அன்று இரவு 10 மணியளவில் மரணமடைந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர் கொழும்பு, கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த சௌரியஸ் ஜோசப் கிரிவண்ணன் (வயது 55) என்பவராவார். இவரது சடலம் தற்போது வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் திடீர் மரண விசாரணை அதிகாரி மேலும் தெரிவித்தார். (அ-2)

## கள்ளச்சாவியை பயன்படுத்தி உதிரிப்பாக கடையில் திருட்டு

(முள்ளியவளை)

பூட்டிய உதிரிப் பாகக் கடையைக் கள்ளச்சாவி கொண்டு திறந்து பொருட்களை திருடிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் முள்ளியவளைசந்தி அம்மன் கோவிலுக்கு முன்பாக அமைந்துள்ள உதிரிப்பாகக் கடையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, கடை உரிமையாளர் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் கடையை பூட்டி விட்டு நேற்று காலை கடையை திறந்து பார்த்தபோது பெறுமதி வாய்ந்த பொருட்கள் கள்ளச்சாவி கொண்டு திறக்கப்பட்டு களவாடப்பட்டமை தெரிய வந்தது.

இதனையடுத்து முள்ளியவளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணை செய்தனர்.

இதன்போது 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்களும் உண்டியல் பணம் மற்றும் பணப் பெட்டியில் வைக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாயும் களவாடப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளினை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2,300)

## வைத்தியசாலை வீதியை புனரமைத்து தாருங்கள்

கிளிநொச்சி உருத்திரபுரம் வைத்தியசாலை வீதியானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாதுள்ளதால் பயணிக்க முடியாதுள்ளதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். குறித்த வீதியால் தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயணித்து வருகின்றனர்.

இவ்வீதியூடாகவே நோயாளர்கள் காவு வண்டி மற்றும் கனரக வாகனங்கள் என்பன பயணிக்கும் வீதி குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

அத்துடன் கிளிநொச்சி கரைச்சி தெற்கு ப.நோ.கூட்டுறவு சங்கமும் அமைந்துள்ளது.

அபிவிருத்தி வேலைகள் நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் பல கிராமசேவையாளர் அலுவலகப் பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இவ் வீதியை செப்பனிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ-2-224)

## கட்டுநாயக்க விமான நிலைய ஊழியர்கள் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலைய மற்றும் விமான சேவை நிறுவன ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வேலை நிறுத்தம் நேற்று முற்பகல் 9 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டதாக விமான நிலைய சுதந்திர ஊழியர் சங்கத் தலைவர் பி.முகந்திரம் தெரிவித்தார்.

5 கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

10 ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு, வைத்திய காப்புறுதி, சேவை கடன் தொகை வழங்கல், விமான நிலைய பாதுகாப்பு அதிகாரியை அகற்றல், ஊழியர்களுக்கு ஓய்வு நேரம் வழங்கல் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய சுதந்திர ஊழியர் சங்கத் தலைவர் பி. முகந்திரம் தெரிவித்தார்.

வேலை நிறுத்தப் போராட்டத்தால் விமான சேவைகள் பாதிக்கப்படக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கடையை உடைத்த திருடர்கள் பொலிஸாரினால் கைது

(குருமன்காடு)

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் உள்ள தொலைத்தொடர்பு நிலைய கடை ஒன்றை உடைத்து அங்குள்ள பொருட்களை திருடிய இருவரை கைது செய்துள்ளதாக வவுனியா குற்றத் தடுப்பு பிரிவைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் எஸ்.பி.ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா, இலுப்பையடியில் உள்ள தொலைத் தொடர்பு நிலைய கடை ஒன்று கடந்தவாரம் உடைக்கப்பட்டு அங்கிருந்த ஐபாட், தொலைபேசிகள், கெற்போன்கள், சார்ஜர்கள் என இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருந்தன.

இது தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொண்ட விசாரணைகளின் போது 17 வயது உடைய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.


கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை மற்றும் வவுனியா தேக்கவத்தை பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2-250)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்"

–மார்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

## சத்திய தரிசனம்




### தேடி வரும் சொர்க்கம்

❖ தலைவனாக இருக்க விரும்புபவன் முதலில் மற்றவருக்கு சேவகனாக இருந்து தொண்டாற்ற முன் வர வேண்டும்.

❖ மனிதப்பிறவி மீண்டும் நமக்கு கிடைக்காமல் போகலாம். கிடைத்ததை நல்ல முறையில் பயன்படுத்தி கடவுளை அறிய முற்படுங்கள்.

❖ எங்கு தேடினாலும் சொர்க்கத்தை அடைய முடியாது. ஒழுக்கமுடன் வாழ்ந்தால் சொர்க்கம் நம்மைத் தேடி வந்து விடும்.

❖ தெய்வத்தை கோயில்களில் தேடுகிறோம். ஆனால், மனித உள்ளமே தெய்வம் விரும்பி வசிக்கும் வீடாகும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வாழ்வில் உயர சில உயர்மொழிகள்

✦ ஊக்கத்துடன் இரு. ஆனால் பதைபதைப்பு வேண்டாம். ஒருமுகப்படுத்தப்பட்ட மனதிற்குப் பேராற்றல் விரைவில் உண்டாகின்றது. மனிதனுடைய பொருள் சிறந்ததா? அல்லது அவன் பண்பு சிறந்ததா? என எண்ணிப் பார்க்க வேண்டும்.

✦ பற்று அற்று இரு என்பதன் பொருள் பொறுப்பு அற்று இரு என்பதல்ல. முயற்சியைச் சற்று அதிகம் எடுத்துக்கொள்பவனுக்கு வெற்றி. அதைச் சிறிது தளர்த்துபவனுக்குத் தோல்வி.

✦ இறைவன் திருநாமம் மனத்தை தூய்மையாக்குகிறது. மனதில் உள்ள குறைகளே துயரமாக வடிவெடுக்கிறது. சோம்பேறியின் மூளை மழுங்கிப் பாழ்படுகிறது.

✦ ஒன்றும் செயல்புரியாதிருந்து வீணாகக் காலத்தைப் போக்குகிறவர்களைக் காட்டிலும் ஏதாவது செயல்பரிந்து தோல்வியடைபவர் மேம்பட்டவர். தூயமனம் படைத்தவர்களுக்கு நெருக்கடியைச் சமாளிப்பது சுலபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களுக்கான தட்டெறிதல் ஹாட்லி மாணவன் சாதனை




எம்பிலிப்பிட்டி மகாவலி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் றிட்ஸ்பறி சேர் ஜோன் டார்பர்ட் கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியைச் சேர்ந்த பாலச்சந்திரன் ஆனந்த் 14 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறதலில் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இவர் பரிதியை 37.33 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையை நிலைநாட்டி தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியைச் சேர்ந்த எம்.எச்.எஸ்.டி திசோரா 2008 இல் நிலை நாட்டிய 29.17 மீற்றர் என்ற சாதனையை ஆனந்த் முறிய டித்துள்ளார்.

இதேவேளை இப் பாடசாலையைச் சேர்ந்த முரளி அபிராம் 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் 36.56 மீற்றர் தூரத்தைப் பதிவு செய்து திறமான பெறுமதியைக் கடந்துள்ளார். இப் போட்டிக்கான திறமானப் பெறுதி தூரம 28.50 மீற்றர்களாகும். (க)

# அன்டர்சனுக்கு ஓய்வு



இலங்கையில் நடைபெறவுள்ள இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில் இருந்து இங்கிலாந்து அணியின் முன்னணி பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

உலகக்கிண்ண தொட ருக்கு அவர் பூரண உடற் தகுதியுடன் இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காகவே அவர் அணியில் இருந்து விலக்கப் பட்டு ஓய்வு வழங்கப்பட்டுளளது.

அவருடைய இடது முழங்காலில் சிறிய உபாதை ஒன்று ஏற்பட்டுளளது. அதன் காரணமாக அந்த உபாதை மேலும் அதிகரிக்காமல் இருக்கவே இந்த ஓய்வு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இங்கிலாந்து அணி தமது இரு முன்னணி பந்து வீச்சாளர்களும் இல்லாமலேயே இலங்கையில் விளையாடவுள்ளது. ஸ்டுவோர்ட் ப்ரோட் ஏற்னெவே சத்திர சிகிச்சை மேற்கொண்டுள்ள நிலையில் அணியில் இடம்பெற வில்லை. அன்டர்சனின் இடத்திற்கு இன்னும் மாற்று வீரர் அறிவிக்கப்படவல்லை. இம் மாத நடுப்பகுதியில் இங்கிலாந்து இலங்கைக்கு வரவுள்ளது.

# ஐ.சி.சி.டெஸ்ட் தரவரிசை; சங்கா தொடர்ந்து முதலிடம்



ஐ.சி.சி.டெஸ்ட் போட்டிக்கான துடுப்பாட்ட வரிசையில் சங்க்கார தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கின்றார். சர்வதேச டெஸ்ட் அரங்கில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசை (ரேங்க) ப்பட்டியலை ஐசிசி வெளியிட்டது.

இதில் சகலதுறை ஆட்டக்காரர்களுக்கான பட்டியலில் தமிழகத்தை சேர்ந்த சுழற் பந்து வீச்சாளர் அஷ்வின் (357 புள்ளி) தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

இரண்டாவது, மூன்றாவது இடங்கள் முறையே தென் ஆபிரிக்காவின் பிலாண்டர் (348), வங்கதேசத்தின் சாகிப் (346) உள்ளனர். துடுப்பாட்டக்காரர்களுக்கான தரவரிசையில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இரட்டை சதம் அடித்து, தொடரை வெல்ல முக்கிய காரணமாக இருந்த பாகிஸ்தானின் யூனிஸ கான் ஒரு இடம் முன்னேறி 6ஆவது இடத்தை பிடித்துள்ளார். இதே தொடரில் அதிவேக சதம் அடித்த பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா 3 இடங்கள் முன்னேறி 8ஆவது இடம் பிடித்துள்ளார்.

சக வீரர் அசார் அலி 18ஆவது இடத்திற்கு முன்னேற்றம் அடைந்தார். முதல் இரண்டு இடங்கள் முறையே, இலங்கையின் சங்கக்கார தென்ஆபிரிக்காவின்டிவிலியர்ஸ்உள்ளனர். மூன்றாவது இடத்தில் மேற்கிந்திய அணி வீரர் சந்தர்போல் உள்ளார்.

பந்துவீச்சாளர்களுக்கான பட்டியலில் தென் ஆபிரிக்காவின் ஸ்டைன், அவுஸ்திரேலியாவின் ரியான் ஹாரிஸ் முறையே முதல் இரண்டு இடங்களில் உள்ளனர். மூன்றாவது இடத்தை இலங்கையின் ஹேராத் வகிக்கிறார். (க)

# இந்திய சுப்பர் லீக் காற்பந்து போட்டி; சென்னை-கொல்கத்தா ஆட்டம் சமநிலை



கொல்கத்தாவுக்கு எதிரான இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து போட்டியில் கடைசி நிமிட பெனால்டி வாய்ப்பு கோலால் சென்னை அணி தோல்வியில் இருந்து தப்பித்து ஆட்டத்தினை சமநிலை செய்தது.

8 அணிகள் இடையிலான இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) காற்பந்து திருவிழா இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும் ஏனைய அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெறும்.

இந்த நிலையில் சென்னை நேரு ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் அரங்கேறிய 21-ஆவது லீக் ஆட்டத்தில் சென்னையின் எப்.சி.- அட்லெடிகோ டீ கொல்கத்தா அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

உள்ளூர் ரசிகர்களின் பேராதரவுடன் ஆட்டத்தை தொடங்கிய சென்னை அணி வீரர்கள், தாக்குதல் ஆட்டத்திலும் பந்தை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதிலும் கொல்கத்தாவுக்கு நிகராக கடும் சவால் கொடுத்தனர். இதனால் முதல் நிமிடத்தில் இருந்தே ஆட்டத்தில் பர பரப்பு தொற்றிக் கொண்டது. ஆனல் அதிர்ஷ்டம் என்னவோ கொல்கத்தா பக்கம் தான் இருந்தது.

35 ஆவது நிமிடத்தில் கொல்கத்தா வீரர் முகமது ரபி பந்துடன் கோல் பகுதியை நெருங்கிய போது, சென்னையின் கோல் கீப்பர் ஷில்டான் பால் பந்தை பாய்ந்து தடுத்தார். அப்போது அவரது கால் பட்டு முகமது ரபி கீழே விழுந்தார். இதனால் சென்னை கோல கீப்பர் ஷில்டானுக்கு சிவப்பு அட்டை காண்பித்து வெளியேற்றிய நடுவர், கொல்கத்தா வுக்கு பெனால்டி வாய்ப்பு வழங்கினார். பெனால்டி வாய்ப்பில் கொல்கத்தா வீரர் லூயிஸ் கார்சியா எளிதாக கோல் அடித்தார்.

இதன் பின்னர் ஒரு வீரர் குறைவாக 10 வீரர்களுடன் விளையாடிய போதிலும் சென்னை அணியின் உத்வேகமும், ஆக்ரோஷமும் தளர வில்லை. சென்னை முன்னணி வீரர்கள் பெர்னர்ட் மென்டி, இலனோ, மென்டோசா களத்தில் பம்பரமாக சுழன்றனர். ஆனால் பலன் தான் கிடைக்கவில்லை.

47 ஆவது நிமிடத்தில் 'பவுல்' செய்த கொல்கத்தா வீரர் ஜோப்ரே 2ஆவது முறையாக மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கப்பட்டார். 2ஆவது மஞ்சள் அட்டை என்பது சிவப்பு அடடைக்கு சமம். இதனால் அவரும் வெளியேற்றப்பட்டதால் கொல்கத்தாவும் 10 வீரர்களுடன் ஆடும் நிலைமைக்கு தள்ளப்பட்டது.

ரசிகர்களின் உற்சாகத்திற்கு மத்தியில் பதிலடி கொடுக்க தொடர்ந்து வரிந்து கட்டிய சென்னை அணியினர் இலக்கை நோக்கி 9 முறை 'ஷாட்' அடித்த போதிலும் அவை ஏதாவது ஒரு வகையில் முறியடிக்கப்பட்டன.


இதனால் கொல்கத்தா அணி வெற்றியின் விளிம்புக்கு சென்றது. வழக்கமான ஆட்டம் நேரமான 90 நிமிடங்கள் முடிந்து காயம் உள்ளிட்ட விரயத்திற்காக 4 நிமிடங்கள் கூடுதலாக ஒதுக்கப் பட்டது. இந்த கடைசி நேரத்தில் சென்னை அணி மீது அதிர்ஷ்ட காற்று வீசியது.

கொல்கத்தா வீரர் கிங்சுக் பலமாக உதைத்ததில் செனனை வீரர் வலேன்சியா கீழே விழுந்து வலியால் துடித்தார். இதையடுத்து கிங்சுக்கு மஞ் சள் அட்டை காண்பிக்கப்பட்ட துடன் சென்னை அ[illegible]க்கு பெனால்டி வாய்ப்பு வழங்கப் பட்டது. இந்த வாய்ப்பில் சென்னை அணியின் நட்சத்திர வீரர் இலனோ கோல் அடிக்க, மைதானத்தில் ரசிகர்களின் ஆரவாரம் காதை பிளந்தது. திரிலிங்கான இந்த ஆட்டம் 1-1 என்ற கணக்கில் சமனிலையில் முடிந்தது.


இந்த தொடரில் ஒவ்வொரு ஆட்டத்திலும் கோல் போட்டு வரும் சென்னை வீரர் இலனோ (பிரேசில் நாட்டவர்) இதுவரை 6 கோல்கள் அடித்து முதலிடம் வகிக்கிறார்.

5ஆவது லீக்கில் ஆடிய சென்னையின் அணி 3 வெற்றி, ஒரு தோல்வி, ஒரு சமனிலை என்று 10 புள்ளிகளுடன், புள்ளி பட்டியலில் 2 ஆவது இடத்தில் நீடிக்கிறது.

இதுவரை தோல்வியே சந்திக்காத ஒரே அணியான கொல்கத்தா 6 ஆட்டங்களில் வளையாடி 3 வெற்றி, 3 சமனிலை என்று 12 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் தொடருகிறது. (க)




# ஹசியை நீக்கியது மும்பை



ஐ.பி.எல் தொடரில் மும்பை அணிக்காக விளையாடிய அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வீரர் மைக் கல் ஹசி அந்த அணியில் இருந்து கழற்றிவிடப்பட் டார்.

2015ஆம் ஆண்டுக்கான 8ஆவது ஐ.பி.எல்.டி20 கிரிக்கெட் போட்டித் தொடர் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 8 ஆம் திகதி தொடங்கி மே 24ஆம் திகதி நிறைவடையும் என்று ஐ.பி.எல் குழு நேற்று முன்தினம் அதிகார பூர்வமாக அறிவித் துள்ளது.

இந்நிலையில், ஐ.பி.எல். [illegible] வீரர்கள் பரிமாற்றம் [illegible] மாதம் 6ஆம் திகதி தொடங்கியது. இதில் மும்பை இந்தியன்ஸ் அணி நிர்வாகம் இரு வீரர்களை பரிமாற்றம் அடிப்படையில் வாங்கியுள்ளது.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியிடம் இருந்து துடுப்பாட்டக்காரர்கள் உன்முக் சந்தையும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியிடம் இருந்து வேகப்பந்து வீச்சாளர் [illegible] ரையும் [illegible].

அதே சமயம் முன்னணி வீரர் மைக்கல் ஹசியை மும்பை அணி கைவிட்டது. சென்னை அணிக்காக விளையாடிய போது ஓட்டங்கள் குவித்த அவரை மும்பை அணி ரூ. 5 கோடிக்கு வாங்கியது.

ஆனால் 7ஆவது ஐ.பி.எல் போட்டியில் மும்பை அணியில் விளையாடிய ஹசி, 9 ஆட்டங்களில் விளையாடி வெறும் 209 ஓட்டங்கள் (சராசரி 23.22) மட்டுமே எடுத்தார். மோசமான ஆட்டம் காரணமாக அவரை வைத்துக் கொள்ள மும்பை விரும்பவில்லை.

மேலும், வேகப்பந்து வீச்சாளர் பிரவீன் குமாரும் வடுவிக்கப்பட்டுள்ளார்.

இவர கள் இருவரும் 2015 ஆம் ஆண்டு ஐ.பி.எல்க்கு முன்பாக ஏலம விடப்படுவார்கள். முதற்கட்ட வீரர்கள் பரிமாற்றம் அடுத்த மாதம் 12ஆம் திகதி முடிகிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-இலங்கை ஒருநாள் போட்டி இன்று

இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 5 ஒருநாள் போட்டித் தொடரில் கட்டாக்கில் நடந்த முதல் ஆட்டத்தில் இந்தியா 169 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா-இலங்கை அணிகள் மோதும் 2 ஆவது ஒருநாள் போட்டி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இன்று (வியாழக்கிழமை) நடக்கிறது.

பகலிரவாக நடக்கும் இன்றைய ஆட்டம் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும். (சு)




வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## ஜனாதிபதித் தேர்தலில்...

றத்தில் எடுத்துக் கொள்ளப்படுமா என்பது பற்றி இப்போதைக்கு உத்தியோகபூர்வமாக தன்னால் பதில் சொல்ல முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக கருத்து சொல்லக் கேட்டு உச்சநீதிமன்றத்திடம் இருந்து தனக்கு கடிதம் ஒன்று வந்துள்ளதாக வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் உபுல் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த மனு விசாரிக்கப்படுகின்ற திகதி பற்றி அறிவிக்குமாறு உச்சநீதிமன்றத்தின் பதிவாளரிடம் தான் கேட்டுள்ளதாக ஜெயசூரிய கூறினார். (எ-11)

## அதிர்ச்சியளி...

ப்ரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்கள் தொடர்பிலான சாட்சியங்கள் அளிப்பதற்கான கால அவகாசம் முடிவடைந்தாலும் சாட்சியங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழு அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பானது ஏற்றுக்கொளளக் கூடியதல்ல என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வட மாகாணசபையின் உறுப்பினர் அனந்தி சசிதரன் சாட்சியளிப்பதற்கான கால அவகாசத்தை நீடிக்குமாறு கோரியிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

வெளிப்படைத்தன்மையுடன் இவ்வாறு கால அவகாசம் நீடிக்கப்பட்டிருந்தால் அதனை ஏற்றுக்கொள்வதில் பிரச்சினை இருக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

# விபசார வலைப்பின்னல் பொலிஸாரால் கண்டுபிடிப்பு

## பெண் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் பெரும் விபசார வலைபபின்னல் குழுவொன்றினை பொலிஸார் கண்டறிந்துள்ளதோடு அக்குழுவினைச் சேர்ந்த இளம்பெண்ணொருவரினையும் கொடிகாமப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான குறித்த பெண்ணிடம் மேற்கொண்ட புலன் விசாரணைகளினையடுத்து இரு விபசார விடுதிகள் பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டு மூடப்பட்டுள்ளதாகவும் மேலும் சில விடுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொடிகாமத்தில் நேற்றையதினம் கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில் விபசாரப் பெண்ணொருவர் பொலிஸாரிடம் சிக்கினார்.

இப் பெண்ணிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் புத்தூர் மற்றும் சுன்னாகம் பகுதியில் இயங்கி வந்த விடுதிகள் இரண்டும் பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டு மூடுவிழா செய்யப்பட்டன.


இவற்றில் ஒரு விடுதி அனுமதியில்லாமல் இயங்கி வந்ததோடு இரு விடுதிகளிலும் பெருமளவிலான ஆணுறைகள், மருந்து வகைகள் என்பனவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் ஹயஸ் வானில் தேவையான இடங்களிற்கு விபசார பெண்களினை விநியோகம் செய்தும் வந்துள்ளார்.

குறித்த பெண்ணை நேற்றையதினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது நீதவான் திருமதி ஶ்ரீநிதி நந்தசேகரம் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார் எனவும் தெரிவித்தனர். (எ-4)

# மரண அறிவித்தல்

## திருமதி அருளானந்தம் பற்றிமா றெஜினா



பருத்தித்துறை முனையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளானந்தம் பற்றிமா றெஜினா 04.11.2014 அன்று காலமானார்.

அன்னார் மேரி விக்டோரியாவின் அன்பு மகளும், அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், பாக்கியநாதன், அன்ரன் பீற்றர் ஆகியோரின் சகோதரியும், செல்லா, நிர்மலா, தாசன், நேசன், நிறஞ்சினி, ரூபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மலர், ஜசிந்தா, உதயா ஆகியோரின் மாமியாரும், கீர்த்தனா, தனுசா, ஜெசிக்கா, தர்சிகா, வினோயா, வினிஸ்ரன், வின்சியா, டிலைக்சன், டின்சியா, எலைன், றேடன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் சனிக்கிழமை 08.11.2014 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்று பருத்தித்துறை முனையில் உள்ள புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கோளியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**வேளாங்கண்ணி இல்லம்**
**சென்.தோமஸ் லேன், பருத்தித்துறை.** **தகவல்:-**
**தொ.இல:-0775797535** **நேசன் (மகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண சபை நிதி ஒதுக்கீட்டில்...

வில்லை என முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவை எனவும் அவர் தெரிவித்தார்.

வட மாகாண சபையில் நேற்று மு.ப 11 மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வட மாகாண சபைக்கு என 19 ஆயிரத்து 481 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதாக கூறப்பட்டாலும் அதில் மீண்டுவரும் செலவினம் மற்றும் எமது கையாளுகைக்குட்பட்ட ஆயிரத்து 876 மில்லியன் ரூபாய் மட்டுமே மாகாண சபையின் நிதி கையாளுகைக்குட்பட்டுள்ளது.

மிகுதியாகவுள்ள 3 ஆயிரத்து 955 மில்லியன் ரூபாய் நிதி எமது நிதி கையாளுகை அதிகாரத்துக்குட்டதல்ல. இந்நிதி மாகாண திறைசேரி ஊடாக ஒதுக்கப்படாமல் திணைக்களங்களுக்கு நேரடியாகவே மத்திய அரசினால் ஒதுக்கப்படுகிறது.

இந்த நிதியில் வட மாகாண சபையோ, முதலமைச்சரோ, அமைச்சர்களோ அல்லது மாகாண அரச அதிகாரிகளோ தலையீடு செய்ய முடியாத நிலையில் சட்டமுள்ளது.

மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள 19 ஆயிரத்து 481 மில்லியனில் 3 ஆயிரத்து 955 மில்லியனுக்கும் மாகாண சபைக்கும் எவ்வித தொடர்பு மில்லாத நிலையில் நிதி முழுவதையும் நாம் செலவிடவில்லை என குறம் சாட்டுவது அர்த்தமற்றது.

இவ்வாறு விமர்சனத்தினை முன்வைப்பவர்கள் தமிழ்த் தேசியக கூட்டமைப்பு மாகாண சபையை நடத்தத் தெரியாமல் உள்ளது எனற பொய யான விம்பத்தினை மக்களுக்கு காண்பிக்க முனைகின்றனர்.

எமக்கு ஒதுக்கப்பட்ட மூலதன ஒதுக்கீட்டு நிதியினை இவ்வருட இறுதிக்குள் அரச நிதி கையாளுகை நியமனங்களுக்கு அமைய இவ் வருட இறுதிக்குள் முடிப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு மாகாணத்தில் இடம்பெறுகின்ற - இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் வட மாகாண சபை விசாரணைக் குழு ஒன்றை அமைக்கவுள்ளது.

ஊழல்கள்தொடர்பில்வட மாகாண ஆளுநரும் நடவடிக்கை எடுக்கட்டும நாமும் கண்காணிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-4)

## எதிர்வரும் 19...

ளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 19-ம் திகதி ஜனாதபதித் தேர்தல் தொடர்பிலான அறிவிப்பை வெளியிடுவார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் தினத்தை அறிவிப்பார் எனவும் அமைச்சர் அபேவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறும் என ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ-11)

## மொத்தச்...

2015 ஆம் ஆண்டுக்கான மொத்த செலவு ஒரு லட்சத்து 81 ஆயிரத்து 229 கோடி என தெரிவிக்கப்பட்டிருந்தும்.

அந்த செலவு தற்போது 2 லட்சத்து 16 ஆயிரத்து 829 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் டி.எம். ஜயரத்ன இந்த திருத்தத்தை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில்சமர்ப்பித்ததுடன் அது வரவு செலவுத்திட்டத்தில் சேர்க்கப்பட்டது.

ஜனாதிபதி சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டத்தில் 2015-ம் ஆண்டுக்கான கடன் வாங்கும் வரையறை ஒரு லட்சத்து 34 ஆயிரம் கோடி என குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் கடன் பெறும் வரையறை தற்போது ஒரு லட்சத்து 78 ஆயிரம் கோடி என திருத்தம் செய்யப்பட்டுள்ளது. (எ-11)

## ஜனாதிபதித் தேர்தலில்...

அரசியல் யாப்பின் 18-வது திருத்தம் அமலுக்கு வந்த நேரத்தில் தான் இரண்டாவது பதவிக் காலத்தை வகித்துவந்ததால், அத்திருத்தத்திற்கேற்ப மூன்றாவது முறையாக தான் போட்டியிடுவதில் சட்ட ரீதியான சிக்கல் ஏதும் உள்ளதா என்பது பற்றி உச்சநீதிமன்றம் விளக்கம் அளிக்க வேண்டுமென ஜனாதிபதி முன்வைத்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஜனாதிபதி பதவியை ஒருவர் இரண்டு முறை மட்டுமே வகிக்க முடியும் என்றிருந்த நிபந்தனையை 18-வது சட்டத் திருத்தம் நீக்கியிருந்தது

ஜனாதிபதியின் இந்த மனு சம்பந்தமாக கருத்து தெரிவிக்க விரும்புவோர் வரும் 7-ம் திகதி பிற்பகல் 3.00 மணிக்குள் அதனை நீதிமன்றத்திடம் எழுத்து மூலமாக சமர்ப்பிக்க வேண்டுமென உச்சநீதிமன்ற பதிவாளர் எம்.எம்.ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த மனு மீதான விசாரணை திறந்த நீதிமன் 19 ஆம் பக்கம் பார்க்க....

## இறுதி நாள் சாட்சியம்...

வரவில்லை.

விடுதலைப்புலிகள் தங்களுடைய அமைப்பில் இணைத் துக் கொண்டனர் என்றும், இராணுவ ஷெல்லில் பிள்ளைகளை தவற விட்டு விட்டோம், காயப்பட்டவர்களை இராணுவம் வைத்திய சாலைக்கு கொண்டு செல்வதாக பொறுபபெடுத்தது.

ஆனால் இன்றுவரை அவர்களை காணவில்லை, செஞ்சிலுவை சங்கத்தின் கப்பலில் ஏற்றிவிட்ட பிள்ளைகளைக் காணவில்லை, இராணுவத்தின தற்காலிக வைத்திய சாலையில் மருந்து கட்டுவதற்குவிட்ட பிள்ளைகளைக் காணவில்லை, வயதின் அடிப்படையில ஓமந்தை, வட்டுவாகல் பகுதியில் வைத்து இராணுவம் எங்களிடம் இருந்து பிள்ளைகளை பிரித்துக் கொண்டது, இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்த பிள்ளைகளை, கணவனைக் காணவில்லை என்றும் விசாரணையில் உறவுகள் சாட்சியமளித்துள்ளனர்.

இதேவேளை, முல்லை. மாவட்டத்தில் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமாகிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் சாட்சியப் பதிவுகள் 2,3-ம் திகதிகளில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திலும் 4, 5 ஆம் திகதிகளில ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் யுத்தத்தின் போது கொத்துக் குண்டு பாவிக்கவில்லை என்று அரசாங்கம் அறிவித்து வருகின்ற நிலையில் தங்களுடைய பிள்ளைகள் இராணுவம் வீசிய கொத்துக் குண்டில் காயப்பட்டனர் என ஆணைக்குழு முன் தெரிவித்திருந்தமை முக்கிய விடயம் ஆகும்.

அத்துடன் வெள்ளை வானில் வந்தவர்களாலும் தங்களுடைய உறவுகள் பிடிக்கப்பட்டதாகவும் சாட்சியத்தில் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ரணில் போட்டியிட எதிர்...

ஐ.தே.கவின் தலைவர் ரணில் பின் வாங்கியுள்ளதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் தலைவர் ரணில விக்கிரமசிங்கவுக்கு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துளளது.

இந்த சந்திப்பில் ஐ.தே.கவின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முன்னணி சட்டத்தரணிகள் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க போட்டியிடும் பட்சத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கட்சி தாவும் முடிவில் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுளளது.

மேலும் பொது வேட்பாளர் என்ற முடிவில் இருக்கும் ஏனைய கட்சிகளின் ஆதரவை தனித்துப் போட்டியிடும் போது பெற்றுக் கொள்வது கடினம் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்துதான் போட்டியில இருந்து ஒதுங்கிக் கொள்ளவும், பதிலாக அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தவும் ரணில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்த இணக்கம் குறித்து கட்சியின் முக்கிஸ்தர் மலிக் சமரவிக்ரம உடனடியாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அறிவித்துள்ளார் என்றும் கொழும்புருடே செய்திச் சேவை தெரிவித்துள்ளது. (எ-11)

## தடம்புரண்டது கார்...

புரண்டு சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

கொல்வத்தையைச் சேர்ந்த ஹேமலதா விஜரட்ண (வயது 48) மற்றும் அவரது தாயாரான காலியைச் சேர்ந்த மாறிதிலக (வயது 80) ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

காலி மாவட்டத்தினை சேர்ந்தவர்களான ரஞ்சித் விஜயரட்ண (வயது 46) மற்றும் சந்திரா திசநாயக்க (வயது 28) ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் மாங்குள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலமானது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் கிளிநொச்சி மற்றும் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (எ-15,281)

## பொன்சேகா வெளிநாடு...

பொன்சேகாவின் கடவுச்சீட்டு, ஒரு லட்சம் ரூபாய் பிணை முறியின் அடிப்படையில் அவரிடம் ஒப்படைப்பதற்கு கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர் தேவிகா தென்னகோன் உத்தரவிட்டார்.

பயங்கரவாத தாக்குதல்கள் காரணமாக ஏற்பட்டுள்ள நோய்களுக்கு சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக, பொன்சேகா சிங்கப்பூர் செல்ல வேண்டியுள்ளதாகவும் அதற்கு நீதிமன்ற அனுமதி வேண்டுமென்றும் அவரது சட்டத்தரணியினால் உயர்நீதிமன்றத்தில் கோரிக்கை மனுவொனறு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதியரசர், பொன்சேகா வெளிநாடு செல்வதற்கான அனுமதியை வழங்கியதோடு அவரது கடவுச்சீட்டை ஒப்படைக்கவும் உத்தரவிட்டார்.

இதற்கமைய, எதிர்வரும் 20 ஆம் திகதி வரை, சிங்கப்பூரில் சிகிச்சை பெறுவதற்கு பொன்சேகாவுக்கு அனுமதி கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## பாதுகாப்பு அமை...

ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி உறுபபினர்கள் சபையில் இருக்கவில்லை.

இந்தத் திருத்தங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அடுத்த ஆண்டுக்கான செலவினம் 356 பில்லியன் ரூபாயாலும், கடன் பெறும் எல்லை 440 பில்லியன் ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (எ-11)

காணி விற்பனைக்கு

பலாலி வீதி, உரும்பிராய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கு அருகில் 9.6 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

(8242)

தொடர்பு - 0789138984

Hey Kids! It's time for Visalam Cup Competitions!
Come on! Take part and prove your talents!
You could walk away with Cups, Certificates, Courses upto 100% off & CASH prizes of 1st - Rs. 4000/=, 2nd - Rs. 2500/=, 3rd Rs.1500/=

ART
Theme: Care for our world
Drawings should be on an A4 size paper using your own materials

QUIZ
Math, Science, English, Tamil, History, Geography, ICT, Current affairs- Sri Lanka & World

English
Written: Vocabulary, Grammar, Essay, & Comprehnesion
Spoken: Poem, Vocabulary, Commands, Sentence Making & Conversation


ICT
Paint, Typing, MS Office & MCQs

CHESS

Here's how to enter:
Minimumin age for entry is 5 years; can enter for any No.of competitions
Will be held in 3 levels - Under 7, Under 11 & Under 13 (and in rounds if needed)
All entries must be submitted on an A4 paper with the following details on or before 30th November 2014:
Name, Age, Date of Birth, Address, Contact Number, Parent's Name
Entry Fee: Rs. 500/= (for each competition)

Visalam
Locally, widening to beyond
127/1 Temple Road, Jaffna, Srilanka
Phone : 021 221 9695 Mobile : 075 979 9695
Email : admin@visalamholdings.com
web : www.visalamholdings.com
(C-8966)

சுயதொழில் முயற்சியாளர்களுக்கான
கிளை விரிவாக்கல் திட்டம் - 3
ஏசியன் கொம்ப்யூட்டருடன் இணைந்து
சுண்ணாகம், சாவகச்சேரி, நெல்லியடி, மன்னார் பகுதிகளில் கொம்ப்யூட்டர் பயிற்சி மையங்களை தொடங்க விரும்புவோர் உடன் விண்ணப்பிக்கலாம்.



உங்கள் கல்வித் தகைமை, கணனித்துறைசார் அனுபவம், செய்யக்கூடிய முதலீடு, முகாமைத்துவ திறன், சந்தைப்படுத்தல் திறன், என்பவற்றை விபரமாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

Computer Education | Degree Foundation | Multimedia Education | English Skill Training

விபரங்களை மின்னஞ்சல் OR தபால் மூலமாக அனுப்பிவைக்கவும்.
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி 15-11-2014.

ASIAN BUSINESS COLLEGE (PVT) LTD
#60, Kotahena Street, Colombo-13
e-mail : asianedu@dialogsl.net
(C-8967)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org